***அலகு - 1***

இலக்கிய வரலாற்றில் புதிய நோக்கு – தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும் - முச்சங்கங்கள் - சங்க காலக் கணிப்பு – தொல்காப்பியம் - சங்க இலக்கியங்கள் - சங்க இலக்கிய மேன்மைகள் - நீதி இலக்கியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - பிற அற நூல்கள்.

***அலகு - 2***

காப்பிய இலக்கியங்கள்: காலம் - இரட்டைக் காப்பியங்கள் - ஐம்பெருங்காப்பியங்கள் - ஐஞ்சிறு காப்பியங்கள் - பெருங்கதை – கம்பராமாயணம் - பெரிய புராணம் - கந்த புராணம் - வில்லி பாரதம் - நளவெண்பா - இசுலாமியக் காப்பியம் - கிறித்துவக் காப்பியம் தோற்றமும் வளர்ச்சியும் - பிற்காலத் தமிழ்க் காப்பியங்கள்.

***அலகு - 3***

பக்தி இலக்கியமும் தமிழ் வளர்ச்சியும் - காலம் சமய மறுமலர்ச்சி / பக்தி இயக்கக் காலம் - பௌத்தமும் தமிழும் - சமணமும் தமிழும் - சைவமும் தமிழும் - வைணவமும் தமிழும் - கிறித்தவமும் தமிழ் வளர்ச்சியும் - இசுலாமியமும் தமிழ் வளர்ச்சியும்.

***அலகு - 4***

சிற்றிலக்கியங்கள்: தோற்றமும் வளர்ச்சியும் வகைதொகை – கலம்பகம், தூது, உலா, பரணி, பிள்ளைத் தமிழ், ஆற்றுப்படை, குறுவஞ்சி, பள்ளு, சதகம், மடல் - குமரகுருபரர், சிவப்பிரகாச சுவாமிகள், தாயுமானவர், வள்ளலார் - பதினெண் சித்தர்கள் - இலக்கண நூல்கள் - நிகண்டுகள் - உரையாசிரியர்கள்.

***அலகு - 5***

மேனாட்டார் வருகையும் தமிழ் இலக்கியப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களும் - உரைநடை – உரை வகைகள் - இசை நாடக இலக்கியம் - சிறுகதை – புதினம் - மரபுக் கவிதை – புதுக்கவிதை – நாடகம் - கட்டுரை – துறைதோறும் தமிழ்

***பாடநூல்கள்***

1. தமிழண்ணல் - புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம் மயூரா வளாகம், 48 தானப்ப முதலி தெரு, மதுரை – 625 001.
2. முனைவர் பாக்யமேரி - வகைமை ரேநக்கில் தமிழ் இலக்கிய வரலாறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
48 – B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை – 600 098.

## தமிழ் இலக்கிய வரலாறு
## அலகு - 1

**முன்னுரை**

பைந்தமிழ் - இன்னித்தமிழ், என்றுமுள தென்தமிழ், சங்கத்தமிழ் எனப் பல வகையில் போற்றப்டுவது நம் தமிழ்மொழி. இதன் தோற்றத்தை வரையறுக்க முடியாத அளவுக்கு மிகப்பழமை வாய்ந்த மொழி தமிழ். தமிழில் இலக்கியங்கள் தோன்றிய காலம் கி.பிக்கும் முற்பட்ட நூற்றண்டுகள் என்பது தமிழறிஞர்களின் முடிவாகும். இன்று 'செம்மொழி தமிழ்' என்னும் சிறப்பினையும் பெற்றுள்ளது. கலை, நாகரிகம், கல்விநிலை, விழுமியங்கள், இலக்கியச் சுவையுணர்வு, பிறமொழிச் செல்வாக்கு, செங்கோன்மை முதலானவற்றின் அடிப்படையில் தமிழ் இலக்கிய வகைமைகள் உருவாக்கம் பெற்றுள்ளன எனலாம்.

மொழியில் பரந்துபட்டு பிணைப்புண்டு இருக்கும் இலக்கியத்தை ஒழுங்குபடுத்தும் நெறியே இலக்கிய வகைப்படுப்பு எனலாம். இப்பகுப்புமுறை வரலாற்று வழி ஆய்வுக்கும், திறனாய்வுத் துறைக்கும் பெரிதும் பயன்படும் என தழிழண்ணல் கூறுகின்றார்.

**இலக்கிய வரலாற்றில் புதிய நோக்கு :**

நாம் இன்று கற்கும் இலக்கிய வரலாறுகள் பல இலக்கியத்தினுடைய 'சொந்தவரலாறு' அல்ல? இலக்கியத்திற்கே ஒரு வாழ்வுண்டு, வளர்ச்சியுண்டு, ஏற்றத்தாழ்வுண்டு, தோற்றம் மற்றும் மறைவுண்டு என்கிறார் தமிழண்ணல். இலக்கிய வரலாறு என்பது ஒரு நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சி அலகுணர்ச்சியின் வரலாறாகும். உண்மையான இலக்கிய வரலாற்றினை தமிழ் மாணாக்கர்கள் உணர்தல் அவசியம் நாம் இன்று காணும் இலக்கிய வரலாறுகளை ஒப்பியலறிஞர்கள் 'முழுமையான இலக்கிய வரலாறு என ஒத்துக்கொள்ளவில்லை.

**புலவர்களின் வாழ்க்கை வரலாறு**

இலக்கியப் புலவர் பெருமக்கள், இந்த ஆண்டில் பிறந்து, இந்த ஆண்டில் மறைந்தார், அல்லது புலவர்களின் காலப்பகுதி இது என்பதில் மட்டுமே நம் கருத்துச் செல்கிறது. பிறப்பு, இறப்பில் மட்டும் நம் கவனம் செல்கிறதே ஒழிய இலக்கியங்கள் தோன்றிய கால கட்டங்களில் நம் கால ஆராய்ச்சி செல்லவில்லை. எனவே புலவர்களால் படைக்கப்பட்ட இலக்கியப்படைப்புகளின் தோற்றம், வளர்ச்சி, தேய்வு, மறைவு போன்றவற்றின் தொடர்புடைய வரலாறே இலக்கிய வரலாறாகும். புற வரலாறுகள் போதுமானவர்கள் ஆகாது.

**நூற்பட்டியலும் திறனாய்வும்**

புலவர்கள், படைப்பாளிகளின் பெயர், காலம், வாழ்க்கைக்குறிப்பு இவற்றை மட்டும் தந்துவிட்டு, அவர்கள் எழுதிய நூற்பட்டியலையும் தருகிறோம். இவைகள் ஒரு பார்வையில், புலவர் வரிசையிலான, ஆய்விடங்கள் ஆகுமேயன்றி, இவைகள் வரலாறுகள் ஆகுமா?

இலக்கிய வரலாற்றிற்குத் தனித்தனிப் புலவர்கள் அல்லது நூல்களின் அறிவு மிக, மிக இன்றியமையாததாகும். அவைகளே இலக்கிய வரலாற்றிற்குத் துணைமைக்காரணச் சான்றுகளாகப் பயன்படுவவையாகும். இவைகள் இல்லாமல் இலக்கிய வளர்ச்சி வரலாற்றை எழுத முடியாது. இவற்றை மட்டும் எழுதி நிறுத்திவிட்டு, இவைகளே 'உண்மையான இலக்கிய வரலாறு எனக் கருதுதல் கூடாது.

**தேசிய பண்பாட்டு வரலாறு**

சில வகை இலக்கிய வரலாறுகள் ஒரு தேசத்தின் அல்லது தேசியத்தின், நாகரிகப் பண்பாட்டு வரலாறுகளாக அமைந்து விடுகின்றன. இலக்கிய வரலாற்றை ஒரு தேசத்தின் வாழ்க்கை வரலாறு (National Biography) என்று சிறப்பித்துக் கூறுபவருமுண்டு. இவையனைத்துமே இலக்கியத்தின் புறவரலாறுகளே ஆகும். இவைகள் இலக்கிய வரலாற்றை அறியப்பயன்படும் சான்று மூலங்கள், இலக்கிய வரலாற்றின் அடித்தளங்கள், இலக்கிய

வரலாற்றை எழுத நாம் தேட வேண்டிய தரவுகளும் சான்றாதாரங்களும் ஆகும். இவற்றின் அடிப்படையில் எழுதப்படும் 'இலக்கியத்தின் வரலாறு' என்பது, இவற்றின் மேலான இந்த அடித்தளத்தில் எழுப்பப்படுகின்ற – பிறிதொன்றேயாகும். அப்படியாயில் ஒருமுழு நிறைவான இலக்கிய வரலாறு என்பது தான் யாது?

**கலை வரலாறு**

இலக்கியம் என்பது ஒரு நுண்கலை ஓவியமும், சிற்பமும் கண்ணுக்குப் புலனாகக்கூடியன. இசை என்பது செவிக்குப் புலனாகக் கூடியது. இவைகளை விட நுட்பமாய்க் கருத்திற்கு மட்டுமே புலனாகக்கூடியது இலக்கியம். இத்தகைய நுண்ணியவற்றுள் எல்லாம் நுண்ணிதான நுண்கலைக்கு வரலாறு எழுதுவது என்பது மிகக்கடினமே. இவைகளைத் தனித்துப் பிரித்து நோக்குதல் எளிதன்று. அதனால் தான் இதன் வரலாறு இதனைப் படைத்தவர்களோடும் நூல்களோடும் சேர்த்து வைத்துப் பார்க்கப்பட்டும், எழுதப்பட்டும் வந்துள்ளது.

'தலைமை வாய்ந்த இலக்கிய வரலாறுகள் பலவும் நாகரிகப் பண்பாட்டு வரலாறுகளாகவோ அல்லது திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுதிகளாகவோ உள்ளன. இவற்றுள் ஒன்று வரலாறு அன்று, மற்றதோ கலையின் வரலாறு அன்று என நயம்படக் கூறுவர் ரெனே வெல்க.

**ஒப்பியல் பார்வை**

இலக்கியம் ஒரு முழுமையான நுண்கலை இதற்கென ஒரு தனித்தன்மையுண்டு. தனி வளர்ச்சி உண்டு. இ∴து ஒரு நிறுவனம் போலவும், அமைப்பு போலவும் இயங்குவது. பயிரினம் போல வளர்வது எனவும் ஒப்பியல் அறிஞர்கள் விவாதிக்கின்றனர். இலக்கியம் உருமாற்றிக் கொள்கிற, சீர்படுத்திக்கொள்கிற, மேன்மேலும் புதுமைப்படுத்திக் கொள்கிற ஒரு மரபுவழியைத் தன்னகத்தே கொண்டது. இலக்கியம் காலந்தோறும் தன்னைப் புதுமைப்படுத்திக் கொள்வது என்கிறது ஒப்பியல் வாசகம்.

ஓர் இலக்கிய வளர்ச்சிக்குச் சமுதாயப் பின்புலம், மக்கள் சுவை உணர்வு முதலியன துணைக் காரணமே, படைப்போன் நிமித்தக் காரணமாகும். முன்னைய இலக்கியமே பின்னைய இலக்கியத் தோற்த்திற்கு உதவும் முதற்காணரமாகும். வளர்ச்சியும் தளர்ச்சியும் செல்வாக்கும் செல்வாக்கிழப்பும், மேடும் பள்ளமும் கொண்ட பல்கிப்பெருகுதலும், சுருங்குதலுமான இயல்புகளுடைய ஒரு சிறந்த உயிருள்ள கலையே இலக்கியக் கலை எனலாம்.

வரலாறு என்பது கடந்த காலம் பற்றியது. அரசியலில் இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாகின்றன. இலக்கியத்திற்கு நிகழ்காலமே உண்டு என்றும், கடந்த காலம் என ஒன்றில்லை என்றும் ஒப்பியலார் வாதிடுகின்றனர். இலக்கியம் என்று இருப்பது (Omnipresent) நிலைபேறான நிகழ்காலத்தது (Eternallypresent) என்பர்.

**முடிவுரை :**

புதிய நோக்கில் இலக்கிய வரலாறு என்பது சுவையான, ஆர்வத்தைத் தோற்றுவிக்கும் வரலாறாகும். இலக்கியத்தின் உருவாக்கம் பற்றியது அது. இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றியது. இலக்கியத்தின் இயல்புச்சிறப்பு, உருவ நலம், உயிரொளி புலனாகும் இலக்கியக் கொள்கைகளுடனும், திறனாய்வுடனும் ஒன்றிப் பிணைந்த உயிரோட்டமுள்ள வரலாறு அது. இங்ஙனம் புதிய நோக்கில் எழுதப்படும் வரலாறு மிக விரிவாக அமையும். சிறு அளவிலான, தனித்தனி நூல்கள் பல இச்சிந்தனை அடிப்படையிலேயே, இன்று தோன்றி வருகின்றன.

# தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும்

**முன்னுரை**

‘ஆல்நேல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
மூங்கில்போல் முடியாமல் வாழும்’

தன்மைப் பெற்றது நம் தமிழ்மொழி. அதனால் தான் ‘என்றும் உள தென்தமிழ்’ எனக் கம்பர் போற்றுகின்றார். முன்னைப் பழமைக்கும் பழமையாய் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் வாழ்வது தழிழ்மொழி.

தமிழ், சமஸ்கிருதம், சீனா, ஹீப்ரு, கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், எனும் ஏழு மொழிகளும் உலகின் தொன்மை வாய்ந்த மொழிகள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன. இம்மொழிகளுள் தமிழ் உயிர்தனிச் செம்மொழிக்கு உரிய பல சிறப்புக்களைப் பெற்றுள்ளது. இன்று ‘செம்மொழித்தமிழ’ என்னும் உயர்வையும் பெற்றுத்திகழ்கிறது. ‘செம்மொழி ஆய்வு மையம்’ என்னும் அமைப்பும் அரசால் 2008 முதல் சென்னையில் தொடங்கப் பெற்றுள்ளது.

**தமிழின் தொன்மை**

கணிகளின் பிழிவே கனிச்சாறாக மாறும். இலக்கியங்களின் பிழிவே இலக்கணங்களாக உருவெடுக்கும். தமிழில் முழுமையாகக் கிடைக்கும் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். ஏறக்குறைய கி.மு. 4 ஆம் நூற்றாண்டு அளவில் தொல்காப்பியம் தோன்யிருக்கலாம் என உணரப்படுகின்றது.

கி.மு. 4 ஆம் நூற்றாண்டு அளவில் தோன்றிய தொல்காப்பியத்தில், அதற்கும் முன்பே பல்வேறு நூல்கள் இருந்ததற்கான சான்றுகள் நிரம்ப உள்ளன. ‘நுண்ணிதின் உணர்ந்தோர், அறிந்தினோர், இயல்புணர்ந்தோர், உரைத்தனர், என் மனார், தெரிந்தனர், அறைந்தனர் என்பமொழிப’ எனப் பல இடங்களில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். எனவே தொல்காப்பியத்திற்கு முன்னும் பல நூல்கள் இருந்தன என்பதை அறிய முடிகின்றது. தொல்காப்பியர் தானாக முதன்முதலில் இலக்கணம் இயற்றவில்லை. அவருக்கு முன்னால் பலர் கூறிய நெறியிலேயே இலக்கணத்தை எடுத்துரைத்துள்ளார் என்பது தெளிவாகின்றது. இதன்மூலம் உலகில் உள்ள பிறமொழிகளைக் காட்டிலும் தமிழ் தொன்மை வாய்ந்த மொழி என்பதனை உணரமுடிகின்றது.

**மூலமொழி**

தென் திராவிட மொழி, நடுத்திராவிட மொழி, வடதிராவிடமொழி எனத் திராவிட மொழிகள் மூவகைப்படும். தமிழ், கன்னடம், மலையாளம் மூன்றும் தென் திராவிட மொழிகள். தெலுங்கு நடுத்திராவிட மொழி. திராவிட மொழிகள் அனைத்திற்கும் தாயான மொழியை மூலத்திராவிட மொழி (Proto Dravidian – pdr) என்பர்.

மூலத்திராவிட மொழியோடு நெருங்கிய தொடர்புடையது தமிழ். தமிழில் இருந்து தெலுங்கும், கன்னடமும், மலையாளமும் தனித்தனியாக இணைந்தன. இணை மொழியாகத் தோன்றிய தெலுங்கு, கன்னட மலையாள மொழிகள் காலப்போக்கில் தனித்தனி மொழிகள் போல் வளர்ச்சியுற்றன. கிளைமொழிகள் தனிமொழிகள் போல் தோற்றமளிக்கும் நிலைபிறமொழிகளில் காணப்படுகிறது.

தமிழ் மொழியிலிருந்து தோன்றிய தோடா, கோத்தா, பணிய பெட்டக்குறும்ப, இருள மொழிகள் ஒவ்வொன்றும் தனிமொழிகள் போல் கருதப்படுகின்றன.

**தமிழிலிருந்து தெலுங்கு**

தமிழிலிருந்து முதலில் பிரிந்த மொழி தெலுங்கு மொழி. நாளடைவில் உயிரொலி, மெய்யொலி மாற்றங்களுக்கு உட்பட்டது. எனவே கன்னட, மலையாள மொழிகளைக்

காட்டிலும் தமிழிலிருந்து மிகதியான வேறுபாடுகளைக் கொண்டது போல் தெலுங்கு தோற்றமளிக்கின்றது. இதனைக் கீழ்வரும் சான்றுகள் தெளிவுபடுத்தும்

தெலுங்கின் உயிரொலி மாற்றங்கள்

| | | |
|---|---|---|
| தமிழ் | - | தெலுங்கு |
| உலை | - | ஒற |
| குடை | - | கொடுகு (godugu) |
| புன்னை | - | பொன்ன |
| முட்டை | - | மொட்ட |

தெலுங்கின் மெய்யொலி மாற்றங்கள்

| | | |
|---|---|---|
| தமிழ் | - | தெலுங்கு |
| கிளி | - | சிலுகா |
| சில | - | கீசு |
| கீழ் | - | சீசு |

**தமிழிலிருந்து கன்னடம்**

தெலுங்கிற்குப் பிறகு தமிழிலிருந்து கிளைந்த மொழி கன்னட மொழி இன்று கன்னடத்திலிருந்து தேவாங்கர் கன்னடம், கௌடா கன்னடம், ஒக்திலிகக் கன்னடம், தோடா, கோடா, படகா எனப் பல்வேறு மொழிகள் பதிந்து வளர்ந்துள்ளன. கன்னடம் தமிழிலிருந்து தெலுங்கிற்கும் மலையாளத்திற்கும் இடைப்பட்ட வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

**தமிழிலிருந்து மலையாளம்**

தமிழிலிந்து கடைசியாக் கிளைத்த மொழி மலையாள மொழி. ஆதலினால் தமிழின் இலக்கிய வழக்கு மலையாளத்தின் பேச்சு வழக்காகவே உள்ளது. அழுக்குத் துணிகளை தூய்மை செய்யும் தொழிலாளியைத் தமிழில் வண்ணான் என்றும், மலையாளத்தி ‘மண்ணான்’ என்றும் அழைக்கின்றனர். ஓரெழுத்தில் வித்தியாசப்படுகிறது. எனவே ‘வண்ணான்’ என்னும் தமிழின் இலக்கிய வழக்கு அவ்வாறே மலையாளத்தில் பேச்சு வழக்காக உள்ள நிலையைக் காணமுடிகின்றது. இதேபோல் ‘தாழ்ப்பாள்’ எனும் பேச்சுத்தமிழ் வழக்கு, மலையாளத்தில் தாழ்க்கோல் என்றழைக்கப்படுகிறது.

இங்ஙனம் தமிழில், வடமொழி, போர்த்துக்கீசியம், பாரசீகம், அரேபியம், இந்தி, மராத்தி, இந்துஸ்தானி, ஆங்கிலம் போன்ற பலமொழிக் கலப்புகள் காணப்படுகின்றன. இதிலிருந்தே தமிழ் மொழியின் தொன்மையினையும் பழமையினையும் அறிய இயலும்.

**தமிழின் சிறப்புகள்**

தமிழ் நூல்கள் அனைத்தும் பண்டைத்தமிழ் மக்களின் பண்பாடுகளைச் சித்தரிக்கும் பெட்டகமாகத் திகழ்கின்றன. ‘இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும். எனத் தமிழின் மேன்மை குறித்து ‘டிங்கல நிகண்டு’ கூறுகின்றது. தமிழ் எனும் சொல்லுக்கு 1) இனிமை 2) நீர்மை என்னும் பொருள்களைத் தருகின்றது. பிங்கல நிகண்டு நீர்மை என்னும் சொல்லுக்குத் தன்மை எனவும் பொருள்படும்.

‘முன்னைப் பழமைக்கும் பழைமை யாய்ப்
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றித்தாய்

விளங்கும் சிறப்புடையது தமிழ். இலக்கணம், நிகண்டு, அகராதி, தத்துவம், தருக்கம், சமயவிளக்கம் ஆகியவை மொழியின் திட்பமும் நுட்பமும் செறிந்த பகுதிகள். இவை அனைத்தும் மிக எளிதாகக் கூறவல்லது தமிழ்மொழி. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வலிமை மிக்கது தமிழ்மொழி.

சங்கப் செய்யுள்கள், காப்பியங்கள், புராணங்கள், சமய காவியங்கள், மரபுக்கவிதைகள் முதல் புதுக்கவிதைகள், ஹைகூ, செண்ரியு, இக்கூட வரை அனைத்து வகைப்பாடுகளின் நெகிழ்வுகளையும் தன்னகத்தே தமிழ் மொழி கொண்டுள்ளது. உரைநடை, சிறுகதை, புதினம், மொழிபெயர்ப்பு, நாட்டுப்புறப்பாங்கு முதலான பகுதிகளையும் தமிழ்மொழி தன்னுள் கொண்டு திகழ்கின்றது.

இதழ்கள் வானொலி, தொலைக்காட்சி திரைப்படம் ஆகிய ஊடகங்களுக்கும் ஊற்றமாகத் தமிழ்மொழி அமைகிறது. அறிவியல், பொருளியல் அறிவியல், வரலாற்றியல், தாவரவியல், விலங்கியல், புவியியல், புவி அமைப்பியல், உளவியல், கூட்டவியல் வானியல் முதலான அனைத்துத் துறைகளுக்கும் ஏற்ப தமிழ்மொழி தன்வளம் வழங்கி வருகின்றது.

இவையணத்திற்கும் மேலாக இன்று நாளும் புதிதாக வளர்ந்து வரும் கணினி, இணையம் ஆகியவற்றுக்கும் இடம் தந்து தமிழ்மொழி தன்னேரில்லாத் தன்மை பெற்றுத் திகழ்கின்றது. தான் கூறும் இலக்கிணத்திற்கு இலக்கியமாக, ஒட்டுமொத்த உலகின் புதிய வரவான கணினிக்கு ஏற்ற மொழியாகவும் தமிழ்மொழி உள்ளது. ‘தமிழ் இணையப் பல்கலைக்கழகம்’ சென்னையில் தொடங்கப் பெற்றுள்ளது இதற்கு நல்ல சான்றாக அமைகின்றது.

எங்கும் கணினி எதிலும் கணினி என மாறிவரும் உலகின் வளர்ச்சிக்கு ஏற்ப, தமிழ் ஈடுகொடுத்து நிற்கும் ஆற்றலைக் கொண்டு உள்ளது.

## முச்சங்கங்கள்

**முன்னுரை**

இறையனார் என்பவர் அகப்பொருள் பற்றிய செய்திகளை அறுபது நூற்பாக்களைக் கொண்டு எழுதினார். இந்நூல் பிற்காலத்தில் ‘இறையனார் களவியல்’ என வழங்கப்பட்டது. முதல், இடை, கடைச்சங்கங்கள் பற்றிய குறிப்புகளை இந்நூலே முதன் முதலில் வெளிப்படுத்தியுள்ளது எனலாம். பிற்காலத்தில் நக்கீரர், இறையனார் களவியலுக்கு உரை எழுதினார். அஃது இறையனார் களவியல் உரை எனப்பட்டது. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் முசிறியில் வாழ்ந்த நீலகண்டன் என்பவர் முதன் முதலில் இறையனார் களவியல் உரைக்கு எழுத்து வடிவம் கொடுத்தார். அதுவரையிலும், இந்நூல் பத்துத் தலைமுறைகள் வாய்மொழியாகவே வழங்கி வந்ததை ஆர்வலர் நீலகண்டன் தெளிவுபடுத்தி எழுதியுள்ளார்.

இறையனார் களவியல் உரையில் முச்சங்கங்கள் பற்றி நக்கீரர் விவரித்துள்ளார். நக்கீரர் கூற்றின்படி முச்சகங்கள் இருந்தன என்னும் கருத்து தெளிவாகின்றது இதன்மூலம்

1. நிறுவப்பட்ட இடம்
2. நிறுவிய மன்னன்
3. சங்கம் புரந்தோர்
4. சங்கப் புலவோர்
5. சங்க நூல்கள்
6. சங்க நூல்களின் காலஎல்லை

ஆகியன பற்றி விவரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இறையனார் களவியல் உரை வெளிப்படுத்தும் இந்தக் குறிப்புகளின் அடிப்படையில்,

- அடியாக்கு நல்லார் தாம் எழுதிய சிலப்பதிகார உரையிலம்
- பாண்டிய நாட்டுச் செவ்வூர்ச் சிற்றலம்பலக் கவிராயர் ஏட்டுச் சுவடியிலும்,

முச்சங்கங்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் சங்கங்கள் குறித்து,

*1.* முச்சங்கங்கள் என்பது முழுப்பொய்
*2.* கடைச்சங்கம் மட்டும் உண்மை
*3.* முச்சங்கங்களும் முழு உண்மை
எனும் மூன்று விதமான கருத்துக்களும் நிலவிவருகின்றன

**முச்சங்கங்கள் என்பது முழுப்பொய்**

முச்சங்கங்கள் என்னும் அமைப்பு இருந்திருக்க முடியாது என்பவர் கூறுகின்றனர். அவர்களில் கே.என்.சிவராசபிள்ளை, பி.டி. சீனிவாச அய்யங்கார், எஸ்.வையாபுரிப்பிள்ளை, நமச்சிவாய முதலியார் முதலானோர் குறிப்பிடத்ததக்கவர் ஆவர். இவர்கள் கூறும் காரணங்களாவன.

அ) 'சிகர' எழுத்து தொடங்கும் சொல் மொழிக்கு முதலில் வராது என்பது தொல்காப்பியம் கூறும் வரையறை 'சங்கம்' எனும் சொல்லில் 'சி' என்னும் எழத்தில் தொடங்குகின்றது. எனவே சங்கங்கள் இருந்தன என்பது பொய்.

ஆ) முதற்சங்கத்தில் சிவபெருமான், முருகவேள், குபேரன் ஆகிய கடவுளர்கள் நேரில் வந்திருந்து சங்கம் ஆய்ந்தனர் எனக் கூறுவதே, முச்சங்கங்கள் 'முழுப்பொய்' என்பதற்குச் சான்றாக அமைகிறது.

இ) முதற்சங்கத்தின் முதல் இலக்கண நூலாக அகத்தியம் மட்டுமே கூறப்படுகிறது. இலக்கியம் கண்டதற்குத்தான் இலக்கணம் இயம்ப இயலும் அவ்வாறாயின் அகத்தியத்திற்கு முன்னர் இருந்த எந்த இலக்கிய நூல்களுமே குறிப்பிடவில்லை.

ஈ) முதல், இரண்டாம் சங்கங்கள் ஆய்ந்ததாகக் கூறப்படும் புலவோரும், கால எல்லையும் நம்பத்தகுந்தவையாக இல்லை.

**சங்கப்புலவோரும் கால எல்லையும்,**

| **சங்கம்** | **புலவோர்** | **காலஎல்லை** |
|---|---|---|
| முதற்சங்கம் | 4449 பேர் | 4449 ஆண்டுகள் |
| இடைச்சங்கம் | 3700 பேர் | 3700 ஆண்டுகள் |

இவ்வாறு கூறுவதில் இருந்தே முச்சங்கங்கள் என்பது முழுப்பொய் என்பது தானே வெளிப்பட்டு விடுகின்றது.

உ) சங்க இலக்கியங்கள் எனப்படுவனவற்றுள் சங்கம் இருந்ததற்கான தெளிவான சான்றுகள் இல்லை.

ஊ) போரும் பூசலுமாகி இருந்த பழந்தமிழகத்தில் புலவர்கள் ஒருங்கு கூடித் தமிழை ஆய்ந்திருக்க இயலாது.

என்பன முதலான கருத்துக்களின் வாயிலாக முச்சங்கள் என்பது முழுப்பொய் என்னும் கருத்தை நிறுவ முற்படுகின்றனர்.

**2) கடைச்சங்கம் மட்டும் உண்மை**

முதல் சங்கம், இடைச்சங்கம் என்பன இருந்தன என்பதற்குக் கூறப்படும் கருத்துக்கள் நம்பத் தகுந்தவையாக இல்லை. 'தமிழ்ச்சங்கம்' என்ற ஒன்று மட்டும் இருந்திருக்கலாம் என்னும் கருத்தயிலும் உள்ளது. இக்கருத்தினை கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார், சேஷகிரி சாஸ்திரியார், இராமச்சந்திர தீட்சித்ர் முதலானோர் எடுத்துரைக்கின்றனர். இதற்கான காரணங்கள் வருமாறு,

அ) தொல்காப்பியம் தவிர, முதல், இடைச்சங்க நூல்கள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே ஒரு சங்கம் மட்டும் தான் இருந்திருக்க முடியும்.

ஆ) முதல், இடை என்னும் இரு சங்கங்களுக்கம் அகத்தியரே முதன்மைப் புலவர் என இறையனார் களவியல் உரை கூறுகிறது. முதல் இரு சங்கங்களும் 4449 + 3700 = 8149 ஆண்டுகள் இருந்தன எனக் கூறப்படுகின்றன. 8149 ஆண்டுகள் அகத்தியர் உயிரோடு இருந்தார் என்பது நம்பத்தகுந்ததாக இல்லை.

இ) வேறு வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்களையும் சிறப்புக் கருதி, ஒரே காலச் சூழலில் வாழ்ந்ததாகக் கூறுவது, வடமொழி வழக்கு. அதன்படி தமிழிலும் கூறப்படுகின்றது. கடைச்சங்கப் புறநானூற்றுப் புலவர் முடிநாகராயர். இவர் முதற்சங்கப்புலவர் எனக்குறிக்கப் பெறுகின்றார்.

இவ்வாறு கூறப்படும் செய்திகளில் ஆங்காங்குச் சில முரண்பாடுகள் தென்படுகின்றன. ஆயின் ‘சங்கம்’ என்ற அமைப்பின் கீழ்ப் புலவர்கள் தமிழ் ஆய்ந்தனர் என்பதனை மறுக்க இயலாது. எனவே சங்கம் இருந்தது என்பதும் பொருந்தும்

**3) முச்சங்கங்களும் முழு உண்மையே**

முதல், இடை, கடைச்சங்கங்களும் இருந்தன என்பது உண்மையே எனப்புலமை மிக்க அறிஞர்கள் பலர் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அவ்வகையில் உ.வே. சாமிநாத ஐயர், கா.அப்பா துரையார், தேவ நேயப்பாவணார், கா.சுப்பிரமணியபிள்ளை முதலானோர் முன்னணியில் நிற்கின்றனர். இவர்தம் கருத்திற்கு அரணாக அமைவன.

அ) தலைச்சங்கத்துப் புலவனார் முன் என்னும் பெரிய புராணப்பகுதி.

ஆ) அருந்தமிழ் மூன்றும் தெரிந்தகாலை என்பது அகநானூற்று உரைப்பாயிரம்

இ) ‘நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்சனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண் என்னும் அப்பர் தேவாரம்

ஈ) ‘மகாபாரதம் தமிழ்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்’ என்னும் ‘சின்னமதெர்ச் செப்பேடு’

உ) அயல்நாட்டுப் பணிகளான தாலமி, பிளைனி ஆகியோர் குறிப்புகளில் உள்ள சங்கம் பற்றிய செய்திகள்.

ஊ) பெரிபுரூஸ் என்னும் நூலுள் காணப்படும் சங்கம் பற்றிய குறிப்புகள்

இக்காரணங்களால் முச்சங்கங்களும் இருந்தது உண்மை என்னும் கருத்துண்மையை அறிஞர் முன்மொழிகின்றனர். இவ்வாறு முச்சங்கங்கள் பற்றி மூவேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன.

**தொல்காப்பியம்**

| **அதிகாரங்கள்** | **இயல்கள்** | **நூற்பாக்கள்** |
|---|---|---|
| | நூல் மரபு | - 33 |
| | மொழி மரபு | - 49 |
| எழுத்திகாரம் | பிறப்பியல் | - 20 |
| | புணரியல் | - 40 |
| | தொகைமரபு | - 30 |
| | உருடியல் | - 30 |
| | உயிர்மயங்கியல் | - 93 |
| | புள்ளிமயங்கியல் | - 110 |
| | குற்றியலுகரப்புணரியல்- | 78 |
| | கிளவியாக்கம் | - 62 |
| | வேற்றுமையியல் | - 22 |
| | வேற்றுமை மயங்கியல்- | 35 |

| | | | |
|---|---|---|---|
| சொல்லதிகாரம் | விளிமரபு | - | 37 |
| | பெயரியல் | - | 43 |
| | வினையியல் | - | 51 |
| | இடையியல் | - | 48 |
| | உரியியல் | - | 98 |
| | எச்சவியல் | - | 67 |
| | அகத்திணையியல் | - | 55 |
| | புறத்திணையியல் | - | 36 |
| பொருளதிகாரம் | களவியல் | - | 50 |
| | கற்பியல் | - | 53 |
| | பொருளியல் | - | 54 |
| | மெய்ப்பாட்டியல் | - | 27 |
| | உவமயியல் | - | 37 |
| | செய்யுளியல் | - | 241 |
| | மரபியல் | - | 111 |

தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய வகைமைகள்

தொல்காப்பியர் காலத்தில் அடிவரையறை அற்ற இலக்கிய வகைமைகள் இருந்தன, அவற்றை

'அவைதாம்
நூலினை உரையினான
நொடியோடு புணர்ந்த பிசியினான
ஏது நூதலிய முதுமொழியான
மறைமொழி கிளந்த மந்திரத்தான
கூற்று இடை சைத்த குறிப்பானான

(செய்யுளியல் - 163) எனும்நூற்பா சுட்டுகின்றது.

1. நூல் - நுட்பமான செய்யுள் வடிவம்
2. ஊரை - செய்யுள் அல்லாத எளிமையான விரிவான வடிவம்
3. பிசி - விடுகதை
4. முதுமொழி - பழமொழி
5. மந்திரம் - மறைமொழி
6. குறிப்பு - பிறரைச் சபிக்கும் தீங்குமொழி

என்பன அவை. தொல்காப்பியர் காலத்திலேயே உரைநடை வகை இருந்தமை அறியமுடிகின்றது. இதனை,

பாட்டிடை வைத்த குறிப்பினாலும்
பாசின்று எழுந்த கிளவியாலும்
பொருள் மரபில்லாப் மொய்ம் மொழியாலும்
பொருளோடு புணர்ந்த நகைமொழியாலும்
உரைவகை நடையே நான்கென மொழிப

(செய்யுளியல் : 171) என்னும் நூற்பா எடுத்துரைக்கின்றது. அவையாவன,

அ) பாட்டிடை வைத்த குறிப்பு
ஆ) பாவின்று எழுந்த கிளவி
இ) பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி
ஈ) பொருளொடுபுணர்ந்த நகைமொழி ஆகியவையாகும்.

**தொல்காப்பியரின் திணைக் கோட்பாடு**

- திணை = ஒழுக்கம் அன்பால் ஒத்த தலைவனும் தலைவியும் பாலது (பால் = ஊழ், விதி) ஆகையால் ஒன்று கூடுவா். 'தலைவனும் தலைவியும் உணரும் அகவுணா்வுகள் பிறருக்குப் புலப்படுத்த இயலாத் தன்மையன.
- இத்தகைய அகவுணா்வுகள் அகப்பாடல்களில் வடிக்கும் பொழுது நுண்ணிய அகப்பொருள் மரபுகள் கடைபிடிக்கப்படும்.

'மக்கள் நுதலிய அதனை திணையும்
சுட்டி ஒருவா் பெயா்கொளப் பெறாஅா்.

என்பது தொல்காப்பியம் இம்மரபின் படி, காதல் உணா்வுகள் மனித சமுதாயத்தின் பொதுவான உணா்வுகளாகவே கூறப்படும். தனிமனிதா்களை இனம் காட்டும் பெயா்கள் சுட்டிக் கூறப்படாது.

- களவு, கற்பு என அகத்திணை இருவகைப்படும்
- கைக்கிளை, பெருந்திணை என அன்பின் ஐந்திணை முப்பிரிவுகளாக நிகழும்.
- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன ஐந்து திணைகளாகும். ஐந்து திணைகளுக்கும் தனித்தனியே நிலங்கள் பகுக்கப்பட்டுள்ளன.

| திணை | | திணையும் நிலமும் |
|---|---|---|
| குறிஞ்சி | - | மலையும் மலை சாா்ந்த நிலமும் |
| முல்லை | - | காடும் காடு சாா்ந்த நிலமும் |
| மருதம் | - | வயலும் வயல் சாா்ந்த நிலமும் |
| நெய்தல் | - | கடலும் கடல் சாா்ந்த நிலமும் |
| பாலை | - | மணலும் மணல் சாா்ந்த நிலமும் |

**முதற்பொருள்**

- மக்களின் வாழ்க்கை முறையானது நிலம், பொழுது, என்னும் இரண்டனோடும் பின்னிப் பிணைந்து உள்ளது. நிலமும், பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

**சிறுபொழுது**

ஒவ்வொரு சிறுபொழுதும் நாழிகை அடிப்படையில் கணக்கிடப்பட்டது.

24 நிமிடம் - 1 நாழிகை
2 ½ நாழிகை – 1 மணிநேரம்
4 மணி நேரம் - 1 சிறுபொழுது

**சிறுபொழுதும் காலப்பகுப்பும்**

| சிறுபொழுது | | காலப்பகுப்பு |
|---|---|---|
| காலை | - | 6 – 10 மணி |
| நண்பகல் | - | 10 – 2 மணி |
| ஏற்பாடு | - | 2 – 6 மணி |
| மாலை | - | 6 -10 மணி |
| யாமம் (இரவு) | - | 10-2 மணி |
| வைகறை (விடியல்) | - | 2-6 மணி |

எற்பாடு = எல் + பாடு, எல் = கதிரவன், பாடு – படுதல், கதிரவன் மறைந்து படும் மாலை நேரம்

**பெரும்பொழுது**

பெரும்பொழுது அறுவகைப்படும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டிரண்டு மாதங்கள் நடக்கும்.

**பெரும்பொழுதும், மாதப்பகுப்பும்**

| **பெரும்பொழுது** | | **மாதப்பகுப்பு** |
|---|---|---|
| இளவேனிற்காலம் | - | சித்திரை, வைகாசி |
| முதுவேனிற்காலம் | - | ஆனி, ஆடி |
| கார்காலம் | - | ஆவணி, புரட்டாசி |
| குளிர்காலம் | - | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனிக்காலம் | - | மார்கழி, தை |
| பின்பனிக்காலம் | - | மாசி, பங்குனி |

**கருப்பொருள்**

தெய்வம், மக்கள், உணவு, விலங்கு முதலான 14 கூறுகளும் மக்கள் வாழும் நிலத்தில் கருக்கொண்டுள்ளன. இவை நிலத்தின் தன்மைக்கேற்ப வகை மாறுபாடும். ஆயின் இந்த 14 கூறுகளும் உலகிற்கே பொதுவானவை.

**நிலமும் கருப்பொருளும்**

குறிஞ்சி
முல்லை
மருதம்
நெய்தல்
பாலை

1. தெய்வம்
2. உயிர்ந்தோர்
3. தாழ்ந்தோர்
4. பறவை
5. விலங்கு
6. ஊர்
7. நீர்
8. பூ
9. மரம்
10. உணவு
11. பறை
12. பண்
13. யாழ்
14. தொழில்

**உரிப்பொருள்**

ஐவகை நிலங்களின் தன்மை அடிப்படையில் அகலுமுக்கங்கள் வரையறுக்கப்பட்டு உரிப்பொருளாயின.

| **திணை** | | **உரிப்பொருள்** |
|---|---|---|
| குறிஞ்சி | - | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| முல்லை | - | இருத்தலும் இருத்தல் நிமித்தமம் |
| மருதம் | - | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| நெய்தல் | - | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| பாலை | - | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

**புறத்திணைபகுப்பு**

வெட்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி பாடாண், எனப் புறத்திணை ஏழுவகையாகப் பகுக்கப்பட்டது. அகத்திணை ஏழும் புறத்திணை ஏழிற்கும் இணையாக

இருக்கும் போர் நிலையையும், போர்முறையையும் தொல்காப்பியம் காட்டுகின்றது. புறத்திணைப் போர் முறைகளைப் பின்வரும் பழம் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

‘வெட்சி நிரை கவர்தல் மூட்டல் கரந்தையாம்
வட்கார் மேல் செல்வது வஞ்சியாம் - உட்காது
எதிரூன்றல் காஞ்சி எயல்காத்தல் நொச்சி
அது வளைத் தலாகும் உழிஞை – அதிரப்
பொருவது தும்பையாம் போர்களத்து மிக்கார்
செருவென்றது வாகையாகும்’

என்பது அப்பாடல்

**தொல்காப்பிய உரையாசிரியர்கள்**

தொல்காப்பியத்திற்கு முழுமையாக உரைகண்டவர் இளம்பூரணர் ஆவர். இவரைத் தொடர்ந்து கல்லாடர், தெய்வச்சிலையார், சோனாவரையர், நச்சினார்கினியர் ஆகியோரும் உரை எழுதியுள்ளார்.

## சங்க இலக்கியங்கள்

**முன்னுரை :**

சங்ககால மக்களின் வாழ்வியல் நிலைகளை ஓவியம் போல எடுத்துரைப்பன எட்டுத் தொகை நூல்கள் சங்ககால மக்கள் வீரததையும் ஈரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். காதல், பெருமிதம், நீதி முதலான உணர்ச்சிகளை எட்டுத் தொகை நூல்கள் சித்தரிக்கின்றன.

எட்டு நூல்களின் தொகுப்பே ‘எட்டுத்தொகை’ எனப்படுகின்றது. இவற்றிற்கு எண் பெருந்தொகை எனவும் பெயர் உண்டு. இவற்றின் பெயர்களை,

‘நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்குபரிபாடல் - கற்றிறிந்தார்
ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று
இத்திறந்த எட்டுத் தொகை

எனும் பழம்பாடல் பாடியுள்ளது.

எட்டுத் தொகையுள் முழுவதும் கிடைக்கும் தொகை நூல்கள் நான்கு

1. நற்றிணை (400 +1)
2. குறுந்தொகை (401 +1)
3. கலித்தொகை (150)
4. அகநானூறு (400 + 1)

(+1 = கடவுள் வாழ்த்துப்பாடல்)

எட்டுத்தொகை நூல்களும், நானூறு என்னும் எண்ணிக்கையில் குறிக்கப்படும் நூல்கள் 4 அவை

1. நற்றிணை நானூறு
2. குறுந்தொகை நானூறு
3. அகநானூறு
4. புறநானூறு என்பன

‘நூறு’ என்னும் எண்ணிக்கையில் குறிக்கப்பெறும் நூல்கள் 2.

1. ஐங்குநுறூறு
2. பதிற்றுப்பத்து

- எட்டுத்தொகையுள் எண்ணிகையால் பெயர் பெறாத நூல்கள் -2

1. கலித்தொகை
2. பரிபாடல்

- கலிப்பா வகையால் ஆன எட்டுத்தொகை நூல், கலித்தொகை
- பரிபாட்டு வயையால் ஆன எட்டுத்தொகை நூல், பரிபாடல்
- கலித்தொகை, பரிபாட்டு தவிர உள்ள ஏனைய ஆறு நூல்களும் ஆசிரியப்பாவால் ஆனவைகளாகும்.
- கலித் தொகையின் வேறு பெயர்கள் கலி, குறுங்கலி
- அகநாநூற்றின் வேறுபெயர்கள் புறம், புறம்பாட்டு, புறம்பு நானூறு
- முதலும் முடிவும் கிடைக்காமல் இருக்கும் எட்டுத்தொகை நூல்கள் -2
  1. பதிற்றுப்பத்து
  2. பரிபாடல்
- எட்டுத்தொகை தொகுப்பித்த மன்னருள் இருவர் பாண்டியர், ஒருவர் சேரர்
- எட்டுத்தொகை நூல்களை 1. அகம், 2. புறம், 3. அகமும் புறமும் முத்திணைகளாப் பகுக்கலாம்.

**அகத்திணை நூல்கள்**

**1. நற்றிணை**

நல் + திணை = நற்றிணை, திணை = நிலம், குடி, ஒழுக்கம் நற்றிணை = நல்ல ஒழுகலாறு. ஐங்குநுறூறு, குறுந்தொகை போன்று குறைவான அடிகளும் இன்றிப் பரிபாடல், பதிற்றுப்பத்து போன்று நீண்ட அடிகளும் இன்றி இடைநிகரவான அடிகளைக் கொண்டு இருப்பதால் 'நற்றிணை' எனப்பகுக்கப்பட்டிருக்கலாம் என டாக்டர் ந.சஞ்சீவி கருதுகின்றனர்.

**நற்றிணையின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | அகத்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| பாடல் தொகை | - | 400 + 1 |
| புலவர்கள் | - | 187 பேர் |
| அடிஎல்லை | - | 9-12 |
| தொகுத்தவர் | - | தெரியவில்லை |
| தொகுப்பித்தவர் | - | பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி |

**நற்றிணையில் உள்ளடக்கம்**

- தலைவன் மீது தலைவி காதல் கொள்கிறாள் ஊரார் தலைவியைப் பற்றி அவர் தூற்றுகின்றனர். பெண்கள் தம் வலக்கையின் சுட்டு விரல், மூக்கில்பட உள்ளங்கையை வாயருகே குவித்து பிறரிடம் தலைவியைப் பற்றிப் பேசுகின்றனர். இக்காட்சியை

'சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்ற

(நற்றிணை : 149) என்னும் பாடல் சித்தரிக்கின்றது.

**நற்றிணையின் மரபுக்குறிப்பு**

- வௌவால்களும், கனவு காணும் என்னும் உயிரியல் உண்மை.
- இளமை நிலையாது அன்பு நிலைக்கும்
- மன்னர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்பு

**குறுந்தொகை**

நல்ல குறுந்தொகை என்னும் அடைமொழிக்கு உரிய நூல். குறுகிய அடிகளை உடையதால் குறுந்தொகை என்பெயர் பெற்றது. குறுந்தொகை நானூறு எனும் பெயர் பெறும் இப்பெயர் வழக்கு இறையனார் களவியல் உரையால் அறியப்பெறுகிறது.

**குறுந்தொகையின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | அகத்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| பாடல்கள் | - | 400 + 1 |
| புலவோர் | - | 203 பேர் |
| அடியெல்லை | - | 4-8 |
| தொகுத்தவர் | - | பூரிக்கோ |
| தொகுப்பித்தவர் | - | தெரியவில்லை |

**குறுந்தொகையின் சிறப்புகள்**

- தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப் பெற்ற நூல் குறுந்தொகை.
- பரணர் பாடல்கள் வழி வரலாற்றுக் குறிப்புகள் தெரியவருகின்றன.
- குறுந்தொகையின் 236 பாடல்கள் உரையசிரியர்களால் மேற்கோளாகக் கையாளப்பட்டுள்ளன.
- திருவிளையாடற் புராணத்தி தருமிவரலாற்றுக்கு ஊற்றாக விங்குவது தொங்குதேர் வாழ்க்கை என்றும் குறுந்தொகைப்பாடல்
- குறுந்தொகையில் மிக அதிகமாகப் பாடியுள்ள பெண்பாற் புலவர்களுள்
  1. நன்னாகையார் - 8 பாடல்கள்
  2. வெள்ளிவீதியால் - 8 பாடல்கள்
- குறுந்தொகையில் வருணனைக் குறைவாக இருப்பதால் தலை மக்கள் உணர்வுகள் செறிவாக வெளிப்படுகின்றன.

**குறுந்தொகையின் உள்ளடக்கம்**

- நெடுப்பல்லியத்தை என்பவர் குறுந்தொகைப் பாடிய பெண்பாற்புலவர். இயம் + இசைக்கருவி, நெடும்பல்லியம் = நெடிய பல இசைக்கருவிகள். நெடும் பல்லியத்தை என்றால் பெரிய பல இசைக் கருவிகளைப் பயின்று இசைத்துப் புகழல் பெற்றவர் என்று பொருள். இசைக்கருவிகளில் புகழ் பெற்ற ஆண்பாற் புலவர் நெடும் பல்லியத்தனார் எனப்பட்டார்.
- வினை முடிந்தபின் திரும்ப மீளும் தலைவனுக்குத் தலைவியைக் காண வேண்டும் என்னும் ஆர்வ மிகுதியாக இருந்தது. எனவே மிக வேகமாத் தேரைச் செலுத்தினான். தலைவனது விரைவு ஓரேர் உழவனைப் போல இருந்தது. ஓர்ஏர் மட்டுமே இருந்த உழவன், ஈரப்பதம் காயும் முன் உழுது வித்தி விரைவாக முனைவான். இப்படி ஓரேர் உழவனைப் போலத் தலைவன் விரைந்தான் என்று உவமித்ததால் புலவர் ஓரேர் உழவனார் (குறுந்.131) என்று பெயர் பெற்றர்.
- தலைவி ஒருத்தி தலைவன் மீது நிலையான அன்பு கொண்டிருக்கிறாள் தான் தலைவன் மீது கொண்ட அன்பின் திறத்தைத் தோழிக்கு எடுத்துரைக்கின்றாள். ‘நான் தலைவன் மீது கொண் அன்பு நிலத்தை விடப் பெரிது. வானைவிட உயர்ந்தது. கடல் நீரைவிட ஆழமானது என்கிறாள். இதனை,

  ‘நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று
  நீரினும் ஆர் அளவு இன்றே - இரல்’

(குறுந்தொகை 3) என்னும் பாடலில் தேவகுலத்தார் வைக்கின்றார்.

**குறுந்தொகையின் மரபுக்குறிப்பு**

- சங்கப்புலவர்களில் பலர் இசைக்கருவி வல்லுநராக இருந்தனர்.
- உண்மை அன்புக்கு எல்லை இல்லை
- புலவர்கள் பெயர் மூலம் புலனாகும் வடமொழி ஊடுருவல்.

**3. ஐங்குநூறு**

ஐந்து நூறு நூறு பாடல்களால் ஆனது. குறுகிய வடிவம் உடையது. எனவே, ஐங்குநுறூறு எனப்பெயர் பெற்றது. நூலில் கிடுமான். குட்டுவன், ஆதன் அவினி, மத்தி, கொற்கை, கோமான், முதலான அரசர்களைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆமூர், தேனூர், கொற்கை, சுழார், தொண்டி முதலான ஊர்ப்பெயர்களும் சுட்டப்படுகின்றன. செடி, கொடி, விலங்கு, பறவைகளின் பெயர்கள் தலைப்புகளாக அமைந்துள்ளன.

**ஐங்குநுறூற்றின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | அகத்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| பாடல்கள் | - | 500 + 1 |
| பாடிய புலவோர் | - | 5 பேர் |
| அடியெல்லை | - | 3-5 |
| தொகுத்தவர் | - | கூடலூர்கிழார் |
| தொகுப்பித்தவர் | - | யானைக்கிட்சேய் மாந்தரஞ் சேரில் இரும்பொறை. |

- ஐங்குறு நூற்றில் ஒவ்வொரு திணைக்கும் நூறு நூறு பாடல்கள் என்னும் விதத்தில் நூல் வரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூறும் பத்துப் பாடல்கள் எனப் பத்துப் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பத்துப் பாடல்களின் தலைப்பும் 'பத்து' என்றே முடிகிறது.

  **சான்று**

  குரக்குப்பத்து. எருமைப்பத்து
  குயிற்பத்து, கிள்ளைப்பத்து

இவ்வாறு பத்துப் பாடல்களை ஒரு தொகுப்பாகச் சேர்த்து எழுதும் முறையைப் பிற தமிழ் இலக்கிய நூல்களிலும் காணலாம்.

**ஐங்குநூற்றின் உள்ளடக்கம்**

- ஓரம் போகியார் பாடிய மருந்திணையின் முதற்பத்து. 'வேட்கைப்பத்து' என்பது வேட்கைப்பத்து முழுவதும் ஒன்றே போல் காணப்படுகிறது.

  'வாழி ஆதன், வாழி அவினி,

(ஐங்குநுறூறு 1:1) என்பது அப்பகுதி.

- செல்வச்செழிப்பு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் தலைவி, தலைவனை மணந்தபிறகு வறுமை நிலைக்குத் தன்னைப் பழக்கபடுத்திக் கொள்கிறார். மான் உண்ட எச்சில் நீர் கூட மேலானது. தாய் வீட்டுத் தேன் கலந்த பாலும் கூட அவ்வளவு இனிமையானதன்று என்கின்றாள். இக்காடசியை

  'அன்னாய் வாழிவேன் டன்னைநம் படப்பை
  தேன்மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு
  உவலைக் கூவற் கீழ
  மான் ண்டு எஞ்சிய கலிழிநீரே

என்னும் பகுதி சித்தரிக்கின்றது.

**ஐங்குறுநூற்றின் மரபுக்குறிப்பு**

- பத்துப் பத்துப் பாடல்களை ஒரு தொகுப்பாகப் பாடும் பதிக அமைப்பு முறையின் தொடக்கநிலை.
- திணைக்கு ஒரு புலவர் வீதம் பாடும் அமைப்பு முறை.
- அம்மூவனாரின் தொண்டிப்பத்து அந்தாதி வகைச் செய்யுள் அமைப்பிற்கான ஆரம்பம்.
- செய்யுளின் தொடக்கம், மன்னர் வாழ்த்து அமைப்பு முறை.

**4. கலித்தொகை**

பாவகையால் பெயர் பெற்ற தொகை நூல்கள் இரண்டு. கலித்தொகை, பரிபாட்டு என்னும் இரு பாவகைகளில் மட்டுமே பாடப்பெறும் என்பது தொல்காப்பிய விதி இதனை,

'பாடல் சான்ற புலன்நெறி வழக்கம்
கலியே பரிபாடல் ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்

(அகத்திணையியல் : 35) என்னும் நூற்பா குறிக்கும். தொல்காப்பிய இலக்கண விதிப்படி. கலிப்பாவால் அகத்திணையைப் பாடும் ஒரே எட்டுத்தொகை நூல் கலித்தொகை மட்டுமே. விருத்தப்பா (ஆசிரியப்பா) வளர்ந்த பிறகு கலிப்பா போற்றப்படவில்லை என்பார் மு.வரதராசனார் கற்றறிந்தார் ஒத்தும் கலி, கல்வி வலார் கண்டகலி என்னும் சிறப்பிற்கு உரியது.

கலித்தொகையின் உருவம்

| | | |
|---|---|---|
| திணை | - | அகத்திணை |
| பாவகை | - | கலிப்பா |
| பாடல்கள் | - | 149 + 1 |
| புலவோர் | - | 5 பேர் |
| அடியெல்லை | - | 11 – 80 |
| தொகுத்தவர் | - | நல்லந்துவனார் |
| தொகுப்பித்தவர் | - | தெரியவில்லை |

**திணைக்குரிய புலபோரும் பாடல் எண்ணிக்கையும்**

ஒவ்வொரு திணையையும் ஒவ்வொரு புலவர் பாடியுள்ளனர்.

| திணை | ஆசிரியர் | | பாடல்கள் |
|---|---|---|---|
| பாலைத்திணை | பாலைபாடிய பெருங்கடுங்கோ | - | 36 |
| குறிஞ்சித்திணை | கபிலர் | - | 29 |
| மருதத்திணை | மருதன் இளநாகனார் | - | 35 |
| முல்லைத்திணை | சோழன் நல்லுருந்திரன் | - | 17 |
| நெஞ்சித்திணை | நல்லந்துவனார் | - | 33 + 1 |

கலித்தொகையின் உள்ளடக்கம்

- கலித்தொகையின் பாடல்கள் பல ஓரங்க நாடகம் போன்ற அமைப்பினைக் கொண்டுள்ளது. சுடர்த்தொடீஇ கேளாய்' எனத் தொடங்கும் பாடல், ஓரங்க நாடகப் பாங்கில் தலைவி தன் தோழியிடம் பேசும் முறையில் அமைந்துள்ளது.
- பெண்கள் பிறந்த வீட்டுக்கு உரியவர் அல்லர் என்னும் சிந்தனையைக் கலித்தொகை கூறுகிறது.

- சந்தனம், முத்து, இசை இவை மூன்றும் மலை, கடல், யாழ் என்னும் இடங்களில் பிறக்கின்றன. ஆயினும் தாம் பிறந்த இடத்திற்குப் பயன்படுவதில்லை. அவற்றைப் பயன்படுத்துவோர்க்கே உரியன. நம் மகளும் நமக்கு அத்தகையோளே' என்று வரும் பகுதி அமைந்தள்ளது.

**கலித்தொகையின் மரபுக்குறிப்பு**

- திண்ணைக்கு ஒரு புலவர் வீதம் பாடும் செய்யுள் அமைப்பு முறை.
- ஓரங்க நாடக அமைப்பு கலித்தொகையின் சிறப்பு
- கலிப்பா வகையால் இயற்றப்பட்ட ஒரே எட்டுத்தொகை இலக்கியம்.

**5. அகநானூறு**

நுலின் பெயரிலேயே 'அகம்' எனப்பட்டது இந்நூல் மட்டுமே அகத்திணை பற்றி நானூறு பாடல்களில் ஆனதால் அகநானூறு எனப்பெயர் பெற்றது. அனநானூற்றுப் பாடல்கள் மன்னர்கள், வள்ளல்கள், வரலாற்றுச் செய்திகள், இயற்கை வருணனை, உள்ளுறை, இறைச்சி முதலான செய்திகளை விரிந்துரைக்க இடந்தந்து நிற்கின்றன. நெடுந்தொகை, பெருந்தொகை நானூறு, அகப்பாட்டு என்பன வேறு பெயர்கள்.

அகநானூற்றின் உருவம் :

| | | |
|---|---|---|
| திணை | - | அகத்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| பாடல்கள் | - | 400 + 1 |
| புலவோர் | - | 158 பேர் |
| அடியெல்லை | - | 13 -31 |
| தொகுத்தவர் | - | உருத்திரன் சண்மனார் |

அகநானூற்றின் மூவகைப் பாகுபாடுகள்

| | | |
|---|---|---|
| 1-120 | - | களிற்றியானை நிரை |
| 121-300 | - | மணிமிடை பவளம் |
| 301-4000 | - | நித்திலக்கோவை |

எனப்பாடல்கள் அமைந்துள்ளன.

**அகநானூற்றின் உள்ளடக்கம்**

- அந்தணர்கள் வேதம் ஓதுதல், வேள்வித் தீ வளர்த்தல், தீ வலம் வருதல் என்பன அனைத்தும் ஆரியர்கள் புகுத்திய கூங்கு முறைகள் நல்லாவூர்கிழார் பண்டைய தமிழர் திருமண முறைகளைக் காட்டுகின்றார். பண்டைய தமிழர் திருமணத்தில் மக்களைப் பெற்றெழுத்த வாழ்வரசிகள் நால்வர் கூடி முன்நின்று திருமணம் நடத்தி வைத்தனர். அவர்களுக்கு உதவி செய்ய நின்றவர்களும் பெண்களே. திருமணத்தையே நடத்தி வகைக்கும் அளவிற்குப் பெண்கள் சமூக மதிப்பில் உலர்ந்து காணபட்டதை அறிய முடிகின்றது.

**அகநானூற்றின் மரபுக் குறிப்பு**

- எண் அடிப்படையில் அமைந்த திணைப் பாகுபாடு
- பண்டைத் தமிழர் திருமண முறையில் ஆரியரால் புகுத்தப்பட்ட தீ வளர்த்தல், தீ வலம் வருதல், அந்தணர் மந்திரம் ஓதுதல், தாலி கட்டுதல் என்னும் சடங்குகளின் ஊடுருவல் இல்லை.

**புறத்திணை நூல்கள்**

**6. பதிற்றுப் பத்து**

சேர அரசர்களைப் பற்றி மட்டுமே பாடும் இலக்கியம். பத்துச் சேர அரசர்களுக்குப் பத்து பாடல்கள் வீதம் நூறு பாடல்களைக் கொண்டு நூல் பதிற்றுப்பத்து, முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

**பதிற்றுப்பத்தின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | பாடாண்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| பாடல்கள் | - | 100 – 20 = 80 |
| புலவோர் | - | 10 – 2 = 8 பேர் |
| அடியெல்லை | - | 8 – 57 |

- ஒவ்வொரு பத்துப் பாட்டின் முடிவிலும் 1.துறை, 2.வண்ணம், 3. தூக்கு (இசை) 4. பாடலின் பெயர் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.
- நான்காம் பத்து அந்தாதித் தொடையால் ஆனது. இது பிற்கால அந்தாதிகளுக்கு முன்னோடி எனலாம்
- பாடாண்திணை என்னும் ஒரே திணை கொண்டு நூல் முழுவதும் பயின்று வரும் ஒரே நூல் பதிற்றுப்பத்தே
- பாடலின் சிறப்பான தொடர்கள், பாடலின் தலைப்பாகச் சூட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பத்துப் பாடல்களின் இறுதியிலும் 'பதிகம்' எனப்படும் பாடல்கள் காணப்படுகின்றன. இப்பதிகங்கள்

1. பாடினோர் பெயர்
2. செய்யுட்களின் பெயர்
3. புலவர் பெற்ற பரிசில்
4. அரசர் ஆண்ட கால அளவு
5. மன்னனின் பெற்றோர்
6. மன்னின் சிறப்புகள்

முதலான செய்திகளைக் கூறுகின்றன.

நூலில் வழக்கில் இல்லாத சொற்கள் மிகுதியாகப் பயின்றுள்ளன. எனவே இந்நூலை 'இரும்புக்கடலை' என அழைப்பர்.

பதிற்றுப்பத்தின் உள்ளடக்கம்

ஒரு அரசனைப் பற்றிப் பத்துப் பாடல்களில் பாடும் பதிக அமைப்பு முறை வந்ததால் செய்திகள் விரித்துக் கூறப்பட்டன வருணனைகள் மிகுந்தன.

பதிற்றுப்பத்தில் சேர மன்னர்களின் வீரமும் ஈரமும் கூறப்பெறுவது பொதுக்கூறு. பதிற்றுப்பத்து மன்னர்கள், முதல் மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்த சேர மரபினர் ஆவார்.

**பதிற்றுப்பத்து மரபுக்குறிப்பு**

- நூல் முழுவதும் பாடாண் திணையில் அமைந்த தொகை நூல்.
- பத்தின் அடிப்படையில் திட்டமைப்புச் செய்யும் தமிழரின் அணுகுமுறை நூலின் தலைப்பாக அமைந்துள்ள சிறப்பு.
- ஒவ்வொரு, பாடலின் முடிவிலும் துறை, வண்ணம், தூக்கு, பாடலின் பெயர் ஆகிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

- சிறப்பு மிக்க பாடல் வரிகள் ஒவ்வொரு பாடலின் தலைப்பாக அமைந்துள்ளது.
- சேர மன்னனும் ஆடந்தலை வல்லோனாகத் திகழ்ந்த பான்மை.

**7. புறநானூறு**

நூலின் பெயரிலேயே புறம் எனத் திணைப்பாகுபாடு புலப்பட உள்ள நூல் இது மட்டுமே 'புறம்' புறப்பாட்டு புறம்பு நானூறு, என்பன நூலின் வேறு பெயர்கள் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் திணை, துறை, பாடியோர் பாடப்பட்டோர் முதலான குறிப்புகள் உள்ளன.

**புறநானூற்றின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | புறத்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| பாடல்கள் | - | 399 + 1 கடவுள் வாழ்த்து, பாரதம் பற்றிய பெருந்தேவனார் |
| புலவோர் | - | 157 பேர் |
| அடியெல்லை | - | 4-40 |

**புறநானூறு பாடிய பெண்பாற் புலவோர் (15)**

1. ஒளவையார்
2. பாரிமகளிர்
3. வெண்ணிக்குயத்தியார்
4. ஒக்கூற் மாசாத்தியார்
5. காவற்பெண்டு

**புறநானூற்றின் உள்ளடக்கம்**

- புறநானூற்றுச் செய்யுட்களில் அரிய பல உவமைகள் காணப்படுகின்றன.

**சான்று**

| | | |
|---|---|---|
| அருவிக்கு | - | துகில் |
| அருளுக்கு | - | நீர் |
| தந்தைத்துணிக்கு | - | பாசியின் வேர் |
| கள்ளின் மயக்கத்திற்கு | - | தேளின் கருப்பு |
| கலிங்க ஆடைக்கு | - | பாம்பின் தோல் |
| பொறுமைக்கு | - | நிலம் |

**புறநானூறு கூறும் வாழ்வியல் விழுமியங்கள்**

வரலாற்று நிகழ்வுகளைக் கூறும் புறுநானூறு, வாழ்வியல் உண்மைகளையம் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்

(நலிவெருஉத்தலையார் - 195)

'உண்பது நாழி, உடுப்பவை இரண்டே'
'யாதும் உரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா'

(கணியன்பூங்குன்றனார் - 192)

**புறநானூற்றின் மரபுக்குறிப்பு**

- ஔவையார், பூதப்பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு உள்ளிட்ட புகழ்பெற்ற பெண் பாற் புலவர்கள் பலர் புறநானூற்றில் பாடியுள்ளனர்.
- வள்ளல்கள், புகழ்பெற்ற மன்னர்கள் பற்றிய வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது.
- வாழ்வியல் விழுமியங்களின் சேகரிப்புக் களஞ்சியம்.

**அகமும் புறமும் கலந்த நூல்**

**பரிபாடல்**

பரிந்து வரும் இசைப் பாடல்களால் ஆன பாவை பரிபாட்டு எனப்படும் புலனெறி வழக்கமாகிய அகத்தணைப் பாடல்கள், கலிப்பாட்டு, பரிபாட்டு வகைகளால் தாம் பாடவேண்டும் என்பது தொல்காப்பியர் காலம் வரை வழக்கில் இருந்தது.

‘நாடக வழக்கிலும் உலகிய வழக்கிலும்
பாடல் சான்ற புலன்நெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்
(தொல்-999)

என்பது இதற்கு நூற்பா. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களுக்கும், பலவகையான அடிகளுக்கும் பரிந்து இடம்கொடுக்கும் தன்மை உடையது பரிபாட்டு மேலும்,

1. தரவு
2. எருத்தம்
3. அராகம்
4. கொச்சிகம்
5. அடக்கியம் வாரம்

என்னும் உறுப்புகளுடனும் கலந்து இயங்கும் தன்மையினை உடையது பரிபாட்டு வகை.

**பரிபாடலின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | அகமும் புறமும் |
| பாவகை | - | பரிபாட்டு |
| பாடல்கள் | - | மொத்தம் 70 இடைப்பவை 22 |
| புலவோர் | - | 13 பேர் |
| அடியெல்லை | - | 32 – 142 |

**பரிபாடலின் உள்ளடக்கம்**

பரிபாடல் அகம், புறம் என இருதிணைகளும் கலந்து பாடப்பட்டுள்ளது.

**அகம்பற்றிய செய்திகள்**

வைகையில் புதுப்புனல் பெருக்கெடுத்து ஓடுகிறது. மதுரை நகரத்தார் அனைவரும் வையை அருகே ஒருங்கு கூடி நீராடி மகிழ்கின்றனர். தலைவன் ஒருவனின் காதற்பரத்தை, வரக்காலம் தாழ்ந்த தலைவனோடு ஊடல் கொண்டு பேசுகிறாள். காதற்பரத்தையின் ஊடலைப் பார்த்த தலைவன் ‘ஆமாம் அப்படித்தான் வைத்துக்கொள்’ என்னும் வகையில் பேசுகிறான்.

‘விளியா விருந்து விழுவோர்க்குக் கொய்தாய்.

தளிர் அறிந்தாய் தாம் இவை’

என்னும்வரிகள் சித்தரிக்கின்றன.

**2. புறம் பற்றிய செய்திகள்**

- பரிபாடலில் வையைப்பறிறய 8 பாடல்களிலும் அகம் சார்ந்த செய்திகள் காணப்படுகின்றன. ஏனைய திருமால், செவ்வேள் பற்றிய 14 பாடல்களும் இறைவனைப் பற்றிய பாடல்களே புறநானூறு பதிற்றுப்பத்து போன்று வீரம், செல்வம், கொடை முதலான செய்திகளைப் பரிபாடலில் காணமுடிவதில்லை. அகம் நீங்களாக உள்ள சமயப் பாடல்களே புறத்திணைப் பாடல்களாகக் கொள்ளக்கிடக்கின்றன.
- 9 என்னும் எண்ணுக்குத் 'தொண்டு' என்னும் தொன்மையான தமிழ்ப்பெயர் பரிபாடல் பதிவு செய்துள்ளது கண்டு உணர்தற்கு உரியது.

**பரிபாடலின் மரபுக் குறிப்பு**

- பரிபாடல் என்னும் பாவகையால் ஆன ஒரே தொகை நூல்.
- சங்க காலத்திற்ப் பிறகு பரிபாடல் என்னும் செய்யுள் வடிவம் போற்றப்படாமல் போயிற்று.
- தெய்வங்கள், அடிப்படையில் பகுப்புமுறை அமைந்த ஒரே தொகை நூல்.
- வையை ஆறு, மதுரை என்னும் ஊர் அடிப்படையிலும் பகுப்புமுறை அமைந்த ஒரே தொகை நூலும் இதுவெ.

**பத்துப்பாட்டு**

மூன்று அடி முதல் இருந்த சிறு சிறு பாடல்கள் தொகுக்கப்பட்டன. அவை 'எட்டுத்தொகை' என அழைக்கப்பட்டன. உதிரிப் பாடல்களில் மரபில் இருந்து நெடும் பாடல்களின் வளர்ச்சி நிலையைப் பத்துப்பாட்டின் வழி அறியலாம்.

'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிச்சி பட்டினப்
பாலை கபித்தொடும் பத்து'

- பத்துப் பாட்டுகள் 5 , 7, 8, 9 அகம்பற்றியன. பிற, புறம் பற்றியன.
- பத்துப்பாடல்கள் பாட்டு என முடியும் நூல்கள் -2
  1. முல்லைப்பாட்டு
  2. குறிஞ்சிப்பாட்டு
- பத்துப்பாட்டின் முதலும் முடிவும் ஆற்றுப்படை நூல்கள்
- பத்துப்பாட்டின் செம்பாதி ஆற்றுபடை நூல்களே

**1. ஆற்றுப் படை நூல்கள்**

ஆறு – நெறி வழி ஆற்றுப்படுத்துதல் = பெருள்பெற்று மகிழ்ந்த ஒருவன் பெறாதவரும் பெற்று மகிழவழிகாட்டுதல்.

**பத்துப்பாட்டின் ஆற்றுப்படை நூல்கள்**

1. திருமுருகாற்றுப்படை
2. சிறுபாணாற்றுப்படை
3. பொருநாராற்றுப்படை
4. பெரும்பானாற்றுப்படை
5. கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பன.

**1. திருமுருகாற்ப்படை**

பத்துப்பாட்டுள் முதற்பட்டாக இருப்பது திருமுருகாற்றுப் படை, பத்துப்பாட்டின் பத்து நூல்களும் கடவுள் வாழ்த்து போல் அமைந்துள்ளது. வேறு எந்தத் தெய்வத்திற்கும் வேறு எந்த நூலிலும் இவ்வளவு நீண்ட பாடல் இல்லை. திருமுருகாற்றுப்படைக்குப் ‘புலவராற்றுப்படை’ என்றும் பெயர்.

முருகாற்றப்படுத்துதல் என்பதன் விளக்கம்

- முருகாற்றுப்படுத்துதல் என்பது (அ) முருகனை ஆற்றுப்படுத்துதல்

**ஆ. முருகனிடம் ஆற்றுப்படுத்துதல்**

‘முருகாற்றுப்படுத்த உருகெழு நடுநாள்’ (அகம்.22)

- துன்பப்படுவோரைக் காக்குமாறு முருகனிடம் வேண்டுவதால் முருகாற்றுப்படுத்தல் என்றும் கூறினர்.
- நக்கீரர் காலத்திற்கு முன்பு வரையிலும் முருகனை ஆற்றுப்படுத்துதல் என்னும் மரபு இருந்து வந்தது.

**திருமுருகாற்றுப்படையின் உள்ளடக்கம்**

திருமுருகாற்றுப்படை, முருகன் எழுந்தருளி இருக்கும் இடங்களையும் வழிபடுமுறைகளையும் விரிவாக விவரிக்கின்றது. இதன் அடிப்படையில் திருமுருகாற்றுப்படையை ஆறு பரிசுகளாகப் பகுக்கலாம். அறுபடைவீடு குறித்து அதிகமாகப் பேசப்பட்டுள்ளது. இறைவனின் தலங்கள், முருகனின் சிறப்பும் பகிரப்பட்டுள்ளது.

**2. பொருநூராற்றுப் படை**

ஒருவரைப் போல வேடமிட்டுப் பாடுநர், பொருநர் எனப்படுவர் பெருநர் பலகையினர்.

1. ஏர்க்களம் பாடுநர்
2. போர்க்களம் பாடுநர்
3. பரணிபாடுநர்

**பொருநராற்றுப் படையின் உருவம்**

| | | |
|---|---|---|
| பொருள் | - | ஆற்றுப்படை |
| திணை | - | புறத்திணை |
| பாவகை | - | வஞ்சியடிகள் கலந்த ஆசிரியப்பா |
| அடியெல்லை | - | 248 வரிகள் |
| பாடியபுவலர் | - | முடத்தாமக் கண்ணியார் |
| பாட்டுடைத்தலைவா | - | கரிகாற்பெருவளந்தான் |

**உள்ளடக்கம்**

கரிகாற் பெருவளத்தான் பெருநர்க்குச் சுடச்சுட இறைச்சியை உண்ச் செய்தான். இறைச்சி அதிகம் உண்டு.

பல்லே மழுங்கிப் போயின இதனை,

‘கொல்லை உழுகொழு ஏய்ப்ப, பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி

எனும் பாடல் (பொருள் 117-118) படம்பிடித்துக் காட்டுகிறது. பாடினியின் கேசாதிபாத வருணனைச் சிறப்பு மிக்கது பல மரபுக் குறிப்புக்களைக் கொண்டது.

**3. சிறுபாணாற்றுப்படை**

பாணர்கள் மூவகைப்படுவர் அவரை

1. இசைப்பாணர்

2. யாழ்ப்பாணர்
3. மண்டைப்பாணர் (இரந்துண்டு வாழ்பவர்)

எனவகைப்படுத்துவர் இவருள் பாடிப்பாணர்.

1. சீறியாழ்ப்பாணர் (சிறிய யாழைக் கையில் வைத்திருப்பவர்)
2. பேரியாழ்ப்பாணர் (பெரிய யாழைக் கையில் வைத்திருப்பவர்) என இருவகைப்படுத்துவர்.

**சிறுபாணாற்றுப்படையின் உருவம்**

| | | |
|---|---|---|
| பொருள் | - | ஆற்றுப்படை |
| திணை | - | புறத்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| அடியெல்லை | - | 269 வரிகள் |
| பாடியபுலவர் | - | இடைகழி நாட்டு நல்லகர் நத்தத்தனார் |
| பாட்டுடைத்தலைவர் | - | ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் |

**உள்ளடக்கம்**

'மாவிலங்கை என்னும் தலைநகரில் இருந்து 'ஒய்மாநாடு' என்னும் பகுதியை ஆண்டவன் நல்லியக்கோடன் இவன் சங்க கால வள்ளல்களுள் ஒருவன் கடையெழு வள்ளல்களுக்குக் காலத்தால் பிந்தியவன். ஓவியர் குடியல் தோன்றியவன் ஓவியர்குடி நாகர்குடியினுள் ஒரு பிரிவாகும். ஓவியர் பெருமகன் என்பதே ஓய்மான் என மருவியது என்பர்.

விறலியின் கன்னம், கூந்தல், நுதல், நோக்கு, எயிறு (பல்) முதலான பத்து உறுப்புகள் உருணிக்கப்பட்டுள்ளன.

**4. பெரும்பாணாற்றுப்படை**

பெரியயாழை வைத்திருக்கும் பாணர்கள், பெரும்பாணர் எனப்பட்டனர்.

இடனுடைய பேரியாழ் முறையுளிக்கிழப்பி என்னும் தொடர் மூலம் பேரியாழ்ப்பாணர்கள் சுட்டப்படுகின்றனர்.

**பெரும்பாநாற்றுப்படை பெயர்க்காரணம்**

1. பெரிய யாழ்ப் பாணர்கள் ஆற்றுப்படுத்தப்படுவதாலும்
2. சிறுபாணாற்றுப் படையைக் காட்டிலும் அதிக அடிகளைப் பெற்றிருப்பதாலும்

பெரும்பாணாற்றுபபடை எனப்படுகிறது 'பாணாறு' என்னும் பெயரும் இந்நூலுக்கு உண்டு.

**பெரும்பாநாற்றுப் படையின் உருவம்**

| | | |
|---|---|---|
| பொருள் | - | ஆற்றுப்படை |
| திணை | - | புறத்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| அடியெல்லை | - | 500 வரிகள் |
| பாடிய புலவர் | - | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| பாட்டுடைத்தலைவர் | - | தொண்டைமான் இளந்திரையான் |

**உள்ளடக்கம்**

பாணனது யாழின் வருணனை, பாணவன் வறுமை, உப்பு வணிகர் செல்லும்வழி எயிற்றியவர் குடிசை, பாலை நிலக்காவைத் எயினர் இல்லிடம், குறிஞ்சி மக்கள் இயல்பு, கோவலர் குடியிருப்பு, முல்லை நிலத்து மக்கள், மருதநில மக்கள், வலைநர் வாழவிடம், அந்தனார் உறைவிடம் முதலான செய்திகள் விவரிக்கப்படுகின்றன.

**5. கூத்தராற்றுப்படை – மலைபடுகடாம்**

மலைக்கு யானையை உவமித்து மலையில் உண்டாகும் ஓசைகளைக் கடாம் என்று சிறப்பித்தமையால் இந்நூல் ‘மலைபடுகடாம் எனப்பெயர் பெற்றது. (கடாம் = யானையின் வாயில் இருந்து ஒழுகும் நீர்

கூத்தன் ஒருவன் பிற கூத்தர்களை ஆற்றுப்படுத்தலால் கூத்தராற்றுப்படை எனப்படுகிறது.

கூத்தறாற்றுப்படையின் உருவம்

| | | |
|---|---|---|
| பொருள் | - | ஆற்றுப்படை |
| திணை | - | புறத்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| அடியெல்லை | - | 583 வரிகள் |
| பாடியபுலவர் | - | இரணிய முட்டத:துப் பெருங்குன்கா்ப் பெருங் கௌசிகனார் |
| பாட்டுடைத்தலைவன் | - | நன்னன் சேய் நன்னை |

**கூத்தராற்றுப் படையின் உள்ளடக்கம்**

பேரியாழின் இலக்கணத்தைப் பற்றிய பெரும்பாணாற்றுப்படை விசாரிக்கின்றது. பேரியாழில் ‘திவ்வு’ என்னும் உறுப்பில் ஒன்பது ‘வார்க்கட்டு’ இருக்கும் என்பதைக் குறிக்க,

‘தொடித் திரிவு அன்ன தொண்டுபடு திவ்வின் என மலைபடுகடாம் (31) கூறுகின்றது. இதில் தொண்டு என்பது ஒன்பது என்னும் எண்ணிக்கைக் குறிக்கின்றது.

- கூத்தர்கள் எடுத்துச் சென்ற இசைக்கருவிகளைப் பற்றிப் பேசுகின்றது.
- பேரியாழின் இயல்பினை விளக்குகின்றன.
- மலைப்பாதையில் காட்சிகளை விவரிக்கிறது.

**அகம் சார்ந்த நூல்கள்**

**6. முல்லைப் பாட்டு (நெஞ்சாற்றுப்படை)**

முல்லைத் திணையைப் பாடியதால் முல்லைப்பாட்டு எனப்பட்டது. இல் இருத்தல் முல்லை என்பது இலக்கணம் வினைமேற் சென்ற தலைவன் வீடு திரும்பும் வரை தலைவி இல்லின் கண் இருந்து பிரிவுத்துயரை ஆற்றியிருந்த (தங்கியிருத்தல்) என்பது பொருள்

முல்லைப் பாட்டின் உருவம்

| | | |
|---|---|---|
| பொருள் | - | ஆற்றியிருத்தல் |
| திணை | - | அகத்திணை (முல்லைத்திணை) |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| அடியெல்லை | - | 103 வரிகள் |
| பாடியபுலவர் | - | நம்பூதனார் |

**முல்லைப்பாட்டின் உள்ளடக்கம்**

போர்மேற் சென்ற தலைவன் மழைக் காலத்திற்குள் போரை முடித்து சென்று திரும்பி வரவேண்டு மழைக்காலம் தொடங்கியதும் தலைவனின் வரவை எதிர்பார்த்துத் லைவி கா்த்திருக்கிறாள். தேரின் ஒலி எதிர்பார்க்கிறாள்.

‘இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறை ஆலின’ (87-88)

எனும் பகுதி காட்டுகின்றது.

### 7. குறிஞ்சிப்பாட்டு

மலையம் மலை சார்ந்த நிலமும் 'குறிஞ்சி' எனப்பட்டது. புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சித் திணையின் ஒழுக்கமாகும். குறிஞ்சி நிலமும் புணர்தல் ஒழுக்கமும் ஆகிய இரண்டனையும் இந்நூல் முழுக்க முழுக்கப் பாடுவதால் குறிஞ்சிப்பாட்டு எனப்படுவது பொருத்தமாகவுள்ளது. இந்நூல் 'பெருங்குறிஞ்சி' என்று நச்சினார்கின்னியர் குறிப்பிடுவார்.

**குறிஞ்சிப்பாட்டின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | குறிஞ்சித்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| அடியெல்லை | - | 261 |
| பாடியபுலவர் | - | கபிலர் |

**குறிஞ்சிப்பாட்டின் உள்ளடக்கம்**

- தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்றலைப் பேசுகின்றது.
- 99 வகை மலர்களை விவரிக்கின்றது
- தலைவனின் மனையறப் பாங்கு, தலைவன் ஆளுரைத்தலையும் விளக்குகின்றது.
- பண்டைத் தமிழர் திருமண முறை பேசப்படுகின்றது.
- தலைவி, தலைவன், தோழி செயல்பாடு பேசப்பட்டுள்ளது.

**புறம் சார்ந்த நூல்**

### 8. மதுரைக்காஞ்சி :

காஞ்சி = நிலையாமை, மதுரையைப் பாடுவதாலும் நிலையாமையெக் கூறுவதாலும், மதுரைக்காஞ்சி எனப்பட்டது. நூலில் 354 வரிகளில் மதுரையின் சிறப்புகள், நிகழ்வுகள், வரிவாதப் பேசிப்பட்டுள்ளன. எனவே கூடல் தமிழ் எனப்படுகிறது. பத்துப்பாட்டுள் மிகுதியான அடிகளை உடைய நூலும் மதுரைக் காஞ்சியே எனவே பெருவள மதுரைக்காஞ்சி எனச் சிறப்பிடுகிறது.

**மதுரைக்காஞ்சியின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | மருதம், புறத்திணை |
| பாவகை | - | வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பா |
| அடியெல்லை | - | 782 வரிகள் |
| பாடியபுலவர் | - | மாங்குடி மருதனார் |
| பாட்டுடைத்தலைவர் | - | தலையாலங்கானத்துக் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் |

**மதுரைக்காஞ்சியின் உள்ளடக்கம்**

பாண்டியனின் முன்னோர் குறித்த செய்திகள் அதிகமாகப் பேசப்பட்டுள்ளன. பாண்டியன் நெடுஞ்செழியன் பல மன்னர்களை வென்ற செய்தி பதியப்பட்டுள்ளது. நெடுஞ்செழியன் வெற்றி கொண்டு ஆண்ட ஊர்கள், அவனின் நாட்டு வளம், மதுரை நகரின் காட்சிகள், காஞ்சிக்காட்சிகள், மதுரைக்காஞ்சியின் மரபுக்குறிப்புகளும் பேசப்பட்டன. தத்துவக்கருத்துக்கள் அதிகம் உள்ளது.

அகமும் புறமும் கலந்த நூல்கள்

### 9. பட்டினப் பாலை

பட்டினம் = கடகம் கடல் சார்ந்த நெய்தல் நிலமும், நெய்தல் நிலமான காவிரிப் பூம்பட்டினத்தை இந்த நூல் நெடுகப் பாடுகின்றது. பாலை = பாலை நிலம், பிரிவு, இங்குப் 'பிரிவு' என்னும் பொருளில் வந்துள்ளது.

**பட்டினப்பாலையின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | நெய்தல் திணையும் பாலைத்திணையும் (அகமும் புறமும் கலந்த நூல்) |
| துறை | - | பொருள் வயின் பிரியக் கருதிய தலைவன் செலவழுங்குதல் |
| பாவகை | - | இடையிடையே ஆசிரியப்பா அமைந்த வஞ்சிநெடும்பாட்டு |
| அடியெல்லை | - | 301 வரிகள் |
| பாடிய புலவர் | - | கடியலூர் உருத்திபங்கண்ணனார் |
| பாட்டுடைத் தலைவர் | - | கரிகாற் பெருவளத்தான் |

**பட்டினப் பாலையின் உள்ளடக்கம்**

காவிரியின் சிறப்பு திவு செய்யப்பட்டுள்ளது. சோழ நாட்டின் சிறப்புகள், பண்டமாற்று வணிகமுறை. இயற்கை வளம் மிக்க இடங்கள், மக்களின் விளையாட்டு இடங்கள், நடுகற்களின் தோற்றம், தழையாடை அணிந்த மகளிர் வணிக் சிறப்பு தலைவர் செலவழுங்கியமை ஆகிய செய்திகள் பேசப்பட்டுள்ளது.

**பட்டினப்பாலையின் மரபுக்குறிப்பு**

- கடல் சூழ்ந்த காவிரிபூம்பட்டடினத்தைப் பாடியதால், நெய்தல் திணை, வினைமேற் செல்லும் தலைவன் மெலவழுங்கிய துறையைக் குறித்தமையால் பாலைத்திணை பாட்டுடைத் தலைவனைக் கூயமையால் புறத்திணை. இவ்வாறு அகத்திணையும், புறத்திணையும் இவ்வாறு அகத்திணையும் புறத்திணையும் பட்டினப்பாலையில் கலந்து வந்துள்ளது.
- பட்டினப்பாலை அகம் சார்ந்த நூல் இந்நூல் பாட்டுடைத் தலைவனைப் பெற்றிருப்பினும் அகப்பாட்டுடமை உடையது
- உப்புக்கு நெல் பெறும் நிலையைக் காட்டுவதன் வரியலாகப் பட்டினப் பாலைக் காலத்தில் ‘பண்டமாற்று’ இருந்த அறிய முடிகின்றது.

**10. நெடுநல்வாடை**

நெடுமை + நன்மை + வாடை = நெடுநல்வாடை பிரிவில் வருந்திய தலைவிக்கு, வாடைக்காற்று தலைவனின் பிரிவை நெடுமையாக்கி வருத்த நெடுவாடையாக இருந்தது. வினைமேற்சென்ற தலைவனம் பிறரும் தலைவியின் பிரிவை நினையாமல் ‘வினையே ஆடவர்க்கு உயிரே’ என்னும் கொள்கையினராக இருந்தனர். எனவே விடைக்காற்று அவர்க்கு உடலுக்கும், உள்ளத்திற்கும் நன்மைதரும் வாடையாக இருந்ததால், நல்வாடை யாக இருந்தது. தலைவன், தலைவி இருவர் பாலும் செயல்பட்ட வாடையின் இருவேறுபட்ட தன்மைகளயையும் ஒழுங்குபடுத்தி ‘நெடுநல்வாடை’ என நூலுக்குப் பெயரிடப்பட்டது. வாடை துன்பத்தைக் குறிப்பது நல்ல அன்பை உணர்த்தவது ‘நெடு’ என்பது அழயிாமையைத் தெரிவிப்பது.

**நெடுநல்வாடையின் உருவம்**

| | | |
|---|---|---|
| திணை | - | முல்லைதிணை, வஞ்சித்திணை |
| பாவகை | - | ஆசிரியப்பா |
| அடியெல்லை | - | 188 வரிகள் |
| பாடியபுலவர் | - | மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் |
| பாட்டுடைத்தலைவன் | - | தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் |

**நெடுநல்வாடையின் உள்ளடக்கம்**

கூதிர் (குளிர்) காலத்தில் மிகுதி பேசப்படுகிறது. கோளியல் அடிப்படையில் கட்டடக்கலை, நெடுநல்வாடையின் மரபுக் குறிப்புகளும் அதகிம் இடம்பெற்றுள்ளன. வேலுக்கு

வேப்பமாலை சூட்டல் பேசப்பட்டுள்ளது. வஞ்சித் திணையின் துறைகளுள் கொற்றவையைப் பாடியுள்ளது.

**சங்க இலக்கிய மேன்மைகள்**

**சங்க காலப் பெண்பாற் புலவர்கள்**

சங்க காலத்தில் 'நாற்பது பெண்பாற் புலவர்கள் இருந்தமையைக் சங்க இலக்கியங்கள் உரைக்கின்றன. சங்க ாலத்தில் பெண்கள் கல்வி பெற்றுப் புலமை மிக்கவராக இருந்தனர். மன்னர்களும் மதிக்கத்தக்க நிலையில் ஔவையார் போற்றப்பட்டார்.

- சங்க இலக்கியப் பெண்பாற்புலவரில் சோழ அரசமங்கை ஆதிமந்தியார் ஆவார்.
- அங்கப் பெண் பாற்புலவரில், பாண்டிய மன்னன் மனைவி பூதப்பாண்டியன் தேசி பெருங்கோப்பெண்டு.
- சேரநாட்டுப் பெண்பாற்புலவர் ஒருவரும் இல்லை.

**சங்க இலக்கியம் திணை இலக்கியம்**

திணை = நிலம், ஒழுக்கம் மலை, காடு, வயல், கடல், வளமை அற்ற நிலம் என்னும் இந்த ஐந்து வகைப்பகுப்புளுக்குள் உலகம் அடங்கி விடும் உலகின் நிலைத்த பகுப்புகளை இந்த ஐந்தனையும் சங்க இலக்கியங்கள் ஐந்திணை எனச் சுட்டுகின்றன. நிலததை அடிப்படையாகக் கொண்டு தான் பருவ நிலை மாறுதல்கள் ஏற்படுகின்றன. நிலம் மற்றும் பருவநிலை மாறுதல்களால் ஏற்படும் பொழுது பாகுபாடுகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு தான் நீர், மரம், பூ, பறவை, விலங்கு, உணவு முதலானவை தகவமைகின்றன. இவற்றின் மூலமாகவே உணவையும் தொழிலையும் மனிதன் அமைத்துக் கொள்கின்றான்.

முதற்பொருள், கருப்பொருட்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. உரிப்பொருள்கள், நிலமும் உரிப்பொருளும் பேசப்பட்டுள்ளன. புறத்திணைகளும், சூடும் பூக்களும் விளக்கப்பட்டுள்ளன.

**சங்க காலம் பொற்காலம்**

சங்க இலக்கியங்கள் தமக்கெனப் பல சிறப்புகளைக் கொண்டுள்ளன. உலக இலக்கியங்கள் அனைத்திலும் காதல், வீரம் என்னும் பொருண்மைகளைக் கொண்ட சங்கப் பாடல்கள் ஏட்டில் எழுதாத இலக்கியங்களாக, காற்றில் கலந்த கவிதைகளாக, வாழும் வாய்மொழி இலக்கியங்களாக மக்கள் நாவில் தவழ்ந்தன. பின்னேரே மெல்ல மெல்ல ஏட்டில் குடிகொண்டன.

**4. வாய்மொழி இலக்கிய வடிவம்**

சங்ககாலத்திற்கு முன்பே தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம் இந்நூலில்

1. உரை
2. பிசி (விடுகதை)
3. குறிப்பு (அங்கதம்)
4. முதுமொழி (பழமொழி)
5. வாய்மொழி (மந்திரம்)

உரை முதலான இலக்கியங்கள் எழுத, படிக்கத் தெரியாத மக்களிடம் கூட இன்றும் பய்னபாட்டில் உள்ளன. இத்தகைய வாய்மொழி இலக்கிய வடிவங்களில் இருந்து வளர்ந்த வடிவங்களே சங்க இலக்கியங்கள் வாய்மொழி இலக்கியத்தின் சாயல் சங்க இலக்கியப் பாடல் பொசிந்து நிற்கின்றன.

**ஆ) தனிப்பாடல் வடிவம்**

பாடப்படும் நெடும்பாடலுக்?குள் தனிப்பாடல் வடிவங்களும் கலந்து சங்க இலக்கியங்களில் உள்ளன. கொல்லேறு தழுவுதலைப் பற்றி வரிவாகப் கூறுவது முல்லை கலி.கொல்லேறுக் காட்சிக்கு நடுவில்

'எழுந்தது துகள்,
ஏற்றனர் மார்பு,
கவிழ்ந்தன மருப்பு,
கலங்கினர் பலர்

(முல்லைக்கலி) என்னும் வடிவம் காணப்படுகிறது.

**இ) காதல் நிலை இலக்கியம்**

ஏ.கே. இராமானுஜம் என்னும் அறிஞர் தேர்ந்தெடுத்த சங்க அகப்பாடல்களை The interior Landscape என்னும் தலைப்பில் மொழி பெயர்த்துள்ளனர். அம்மொழி பெயர்பப்பில் சங்கப் பாடல்களில் உள்ள காதல் நிலைகளை வியந்து போற்றியுள்ளார். டாக்டர் வ.சுப.மாணிக்கம் அவர்கள் 'தமிழ்க்காதல்' என்னும் நூலில் சங்க அகப்பாடல்கள் அனைத்தும் காதல் நிலை இலக்கியங்களே என்பதனை நிறுவுகின்றார்.

**ஈ) பெயர் குறியாப்பண்பு**

காதல் துறையில் பெயர் குறித்து எழுதினால் அகத் திணை மாண்பு சிதைவுறும் நிகழ்ந்த காதல்கள் வரலாற்றுச் சுவடு அற்றுக் காதல் மணமாக வீசுதல் வேண்டும். கரிவியலையும் உளவியலையும் தெளிந்த நம்முன்னோர் அத்திணையை நுண் இலக்கியமாகக் கெணர்டனர் எனவே பெயர் குறியாது விடுத்தனர் என்று டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் கூறுகின்றனார்.

**உ) அகத்திணையின் முதன்மை**

அகத்திணை, புறத்திணை இரண்டனையும் சமமாகக் கூறுவதைப் போல இலக்கியங்கள் தோற்றம் தருகின்றன ஆயின், தொல்காப்பியர் அகத்திணையைத்தான் முதலில் கூறுகின்றார். அகத்திணை ஏழு என்று கூறும் தொல்காப்பியர் அகத்திணைக்குப் புறனாகத்தான் புறத்திணையைக் கூறுகிறார். கலிப்பா, பரிபாடல் என்னும் இரு வகைப்பாக்களும் அகப்பொருளுக்கு உரியனவாகவே தொல்காப்பியர் கூறுகின்றார். பரிபாடல்

'காதற் காமம் காமத்தில் சிறந்தது'

என்று போற்றுகின்றது.

**ஊ) உவமை**

உவமைகள், சங்கப்பாடல்களின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. சங்கப் பாடல்களில் பல புலவர்களின் பெயர் தெரிந்திலது. அத்தகைய புவலர்களின் புகழ்பெற்ற தொடரால் அநதப் புலவர்களைக் குறிக்கின்றனர்.

1. அணிலொடு முன்றிலார்
2. ஊட்டியார்
3. செம்புலப் பெயல்நீரார்
4. ஓரேர் உழவனார்
5. குப்பைக் கோழியார்
6. செம்புலப்பெயல் நீரார்.

தொடர்களால் புகழ்பெற்ற இப்புலவர்களின் தொடர்கள் அனைத்தும் உவமைத் தொடர்களாகவும் இருப்பது சிறப்புக்கு உரியது.

**எ) உள்ளுறை**

சொல்லப்படும் உவமையில் ஒன்றுக்கு மேற்பட்ட உட்பொருள்களைக் கூற வேண்டி இருப்பின் உள்ளுறை உவமை உருவெடுக்கிறது. பொதுவாக, தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைக் குறிக்கின்ற இடத்தில் சங்கப் பாடல்கள் அவற்றை உள்ளுறை உவமை வாயிலாகவே வெளிப்படுகின்றன.

**ஏ) இறைச்சி**

இறைச்சி வளைந்தது நேரான பொருள் தராமல் வளைந்து மறைவாகப் பொருளை உட்பொதித்துக் கூறுவது இறைச்சி

'இலங்கும் அருவித்தே விலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள் பேணான் பொய்த்தான் மலை'

என்னும் (குறிஞ்சிப்கலி :5) பாடலில், பொய் பேசுபவன் மலையில் கூட அருவி பாடப்படுகிறது என்பது இறைச்சிப் பொருளாக நிற்கின்றது

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் வீரநிலை இலக்கியம் என்றும் நல்லதையே பாடும், பேசும் இலக்கியங்கள் ஆகும்.

**பதினெண் கீழ்கணக்கு நூல்கள்**
**1 அகநூல்கள்**
**கார்நாற்பது**

**கார்நாற்பதின் உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | மதுரைக் திண்ணங்ககூத்தனார் |
| காலம் | - | கி.பி. 4ம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 40 |
| திணை | - | அகத்திணை – முல்லைத்திணை |
| பாவகை | - | வெண்பா |

**உள்ளடக்கம்**

கார் = கார்காலம், மழைக்காலம் வினைவியின் தலைவன் பிரிந்து சென்றுவிட்டான். கார் காலத்தில் திரும்பவருவேன் என்றிருந்தான் தலைவன். கார் காலமும் வந்தது தலைவன் தன்பைப் பிரிந்து சென்றதில் இருந்து கார்காலத்தில் திரும்பிவரும்வரை தலைவி தன் மனத்தை ஆற்ற (தாங்கி) இருந்தார். ஆற்றி இருத்தல் முல்லை நிலத்திற்கு உரிய ஒழுக்கம்

- கார்நாற்பதில் முல்லைத் திணைக்கு உரிய முதல், கரு, உரிப்பொருள்கள் முறையாகக் கூறப்பட்டு உள்ளன. சங்கச் செய்யுட்களின் சாயலில் இது அமைந்துள்ளது.

**2. ஐந்திணை ஐம்பது**
**உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | மாறன்பொறையனார் |
| காலம் | - | கி.பி.4ம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 50 |
| திணை | - | ஐந்து அகத்திணைகளும் |
| திணைவைப்புமுறை | - | முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் |
| பாவகை | - | வெண்பா |

**உள்ளடக்கம்**

ஐந்திணைகளுக்கும் பத்துப்பாடல்கள் வீதம் 50 பாடல்கள் பாடப்பட்டதால் ஐந்திணை ஐம்பது எனப் பெயர் பெற்றது. ஐந்திணை ஐம்பதில் காணப்படும் திணைக்குப்பத்து பத்தாகப் பாடும் பழைய மரபு ஐங்குறு நூற்றின் தாக்கம் எனலாம்.

**3. ஐந்திணை எழுபது**

**உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | மூவாதியார் |
| காலம் | - | கி.பி. 5 ஆம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 70 |
| திணை | - | ஐந்து அகத்திணைகளும் |
| பாவை | - | வெண்பா |

**உள்ளடக்கம்**

- மூவதமஜயதத' தனது ஐந்திணை எழுபதில்,

'கள்ளர் வழங்கும் சுரம் என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி'

என்னும் பாடலைப் பாடியுள்ளார். இது பாலை நிலத்தின் கொடுமையை எடுத்தக் கூறும் தன்மையாகத் காணப்படுகின்றது.

- தும்முதல், பெண்களின் இடக்கண் துடித்தல், ஆநதை அலாகதல், முதலான நிமித்தங்கள் நூலில் கூறப்பட்டுள்ளன.
- நடுதல் வழிபாடு ஐம்படைத் தாலியைக் குழந்தைகளுக்கு அணிவித்தல் என்னும் பண்டைய படிக்க வழக்கங்கள் கூறப்பெறுகின்றன.
- நிமித்தஙகளின் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை உணர்வினை ஐந்திணை எழுபது எடுத்தியம்பியுள்ளது.

**4. திணைமொழி ஐம்பது**

**உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | கண்ணஞ்சேந்தனார் |
| காலம் | - | கி.பி. 5 ஆம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 50 |
| திணை | - | ஐந்து அகத்திணைகளும் |
| பாவகை | - | வெண்பா |

உள்ளடக்கம்

திணைக்குப் பத்துப் பாடல்கள் வீதம் பாடப்பட்டுளளது. குறிஞ்சி நிலத்தில் பாயும், அருவியின் ஓசைச் சிறப்பை இசைக் கருவிகளோடு ஒப்பிட்டுக் கண்ணன் சேந்தனர் கூறுகின்றார்.

ஐங்குநுறுாறு, ஐந்திணை ஐம்பது ஆகிய நூல்களில் காணப்படும் திணைக்குப் பத்தாகப் பாடும் பதிகமுறை, திணைமொழி ஐம்பதிலும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

6. திணைமாலை நூற்றைம்பது

உருவம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | கணி மேதாவியார் |
| காலம் | - | கி.பி. 5ம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 150 |

திணை - ஐந்து அகத்திணைகளும்
பாவகை - வெண்பா

**உள்ளடக்கம்**

- சமண சமயத்தவரான கணிமேதாவியார், களவியலை வெறுத்த சமணர்களும் இலக்கியச்சுவை கொள்ளுமாறு அகச்சுவைப் பாடல்களைப் பாடியுள்ளார்.
- திணைமாலை ஐந்தும் நம் பதிலும் கடவுள் வணக்கப்பாடல் கூறும் செய்யுள் காணப்படவில்லை.
- நூலின் கண் வடசொற் கலப்பு மிகுதியாக உள்ளது.
- கலித்தொகை போல் 150 செய்யுள் இந்நூலிலும் பாடப்பட்டுள்ளது.

**6. கைந்நிலை**

உருவம்

ஆசிரியர் - மாறோக்கத்து முள்ளி நாட்டு நல்லூர்க் காவிரியார் மகனார் புல்லங்காடனார்
காலம் - கி.பி. 5 ஆம் நூற்றாண்டு
பாடல்கள் - 60
திணை - ஐந்து அகத்திணைகளும்
பாவகை - வெண்பா

**உள்ளடக்கம்**

கை = ஒழுக்கம், ஐந்திணை ஒழுக்க நிலை கூறும் நூல் என்னும் பொருளில் 'கைந்நிலை' எனப்பெயர் அமைந்துள்ளது. நூலில் பாசம், ஆசை, இரசம், கேசம், இடபம், உத்தரம் என்னும் வடசொற்கள் கலந்துள்ளன.

திணைக்குப் பன்னிரெண்டு பாடலக்ள் வீதம் ஐந்திணைக்கும் மொத்தம் அறுபது பாடல்கள் கைந்நிலையில் காணப்படுகின்றன. ஐந்திணைகளையும் அறுபது பாடல்களில் கூறும் கைந்நிலையை ஐந்திணை அறுபது எனக் கூறுவது பொருந்தும்.

கல்லிடைக்குறிச்சிப் பக்கத்தையும் முள்ளிநாடென்ப எனற ஒரு குறிப்பு புதிதாக எழுதபபெற்றுள்ளது என்செய் பதிவு சாரதாப் பதிப்பக வெளியிட்டில் காணப்படுகின்றனது.

**இன்னிலை – கைந்நிலை**

பதினெண் கீழ்க்கணக்குநூல்களுள் கைந்நிலை, இன்னிலை ஆகிய இரு நூல்களைப் பற்றிச் சிந்து தெளிவற்ற நிலை நிலவுகிறது. இன்னிலை, கைந்நிலை என்பவை தனித்தனி நூல்களா? இன்னிலை சொல் என்பது காஞ்சிக்கு அடைமொழியா? இரண்டும் நூல்கள் ஆயின. அவை எங்கே? இத்தகைய ஆராய்ச்சி நடைபெற்றது வருகிறது. இன்னிலை என்னும் நூலைப் பாடியவர் பொய்கையார் பதினெண்கீழ் கணக்கு நூல்களுள் ஒநன்றாக இருக்குமோ என்கிறார் வ.உ.சி. இளம்பூரணார் உரையின் மூலம் கைநிலை என்பதே என்கிறார்.

**2. புறநூல்**

**7. களவழி நாற்பது**

**களவழி நாற்பதின் உருவம்**

ஆசிரியர் - பொய்கையார்
பாடல்கள் - 40
திணை - புறத்திணை – வாகைத்திணை
பாவகை - வெண்பா

**உள்ளடக்கம்**

களம் = போர்க்களம் போர்க்களம் பற்றிய நாற்பது பாடல்களைக் கொண்ட நூல் என்பது பொருள். பதினெண் கீழ்க்கணக்கில் புறப்பொருள் சார்நத ஒரே நூல் இ.்.து ஒன்றே.

'ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோன்றிய வென்றியும்'

என்பது தொல்காப்பியம்

- களவழி நாற்பது பாடலில் 'யானைப் போரே மிகுதியும் பாடப்பட்டுள்ளது. யானையின் வெட்டப்பட்ட துதிக்கையில் இருந்து குருதி கொட்டுகிறது.
- களவழி நாற்பதில் 'கார்த்திகைத் திருவிழா' உவமிக்கப்பட்டுள்ளது. போரில் வீரர்கள் சிந்தும் குருதி கார்த்திகை விழாவில் ஒருங்கே தோன்றும் விளக்குத் தொகுதியின் செம்மையைப் போல் இருக்கிறது எனப் பொய்கையார் கூறுகின்றனார்

**3. அறநூல்கள்**

**8. நாலடியார்**

**நாலடியார் உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | சமணமுனிவர்கள் |
| தொகுத்தவர் | - | பதுமனார் |
| பாடல்கள் | - | 400 |
| வேறுபெயர்கள் | - | 1. நாலடி நானூறு, 2. வேளாண்வேதம் |
| பொருள் | - | அறம்பற்றியது |
| பாவகை | - | வெண்பா |

**நாலடியார் சிறப்புகள்**

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றது.
2. நாலடியார் ஆன பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பல இருப்பினும் இந்நூல் மட்டுமே நாலடி எனச் சுட்டப்படுகிறது. ஆர் விகுதி பெற்று நாலடியார் எனக் சிறப்பிக்கப்படுகிறது.
3. டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் நாலடியாரை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**நாலடியார் தொடர்பான பழமொழிகள்**

*1.* ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

*2.* பழகு தமிழ்ச் சொல்லருமை நாலரண்டில் (நால் = நாலடியார்)

**உள்ளடக்கம்**

நாலடியாரும் திருக்குறளைப் போன்று அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என முப்பாலாகப் பகுக்கப்பட்டுள்ளது. வாழ்க்கை அறங்களை நாலடியார் மிகத் தெளிவாக எடுத்து முன் வைக்கின்றது. இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை பற்றிய கருத:துக்களை உரைக்கிறது.

**9. நாண்மணிக்கடிகை**

**உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | விளம்பிநாகனார் |
| ஊர் | - | விளம்பி |
| காலம் | - | கி.பி 4ஆம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 2 + 104 |

பாவகை - வெண்பா

உள்ளடக்கம்

நாண்மணிக்கடிகையின் முதல் இரண்டு பாடல்கள் கடவுள் வணக்கமாகக் காணப்படுகின்றன. நான்கு நான்கு கருத்துக்களைக் கொண்டு நூல் முழுவதும் பாடப்பட்டது போலக் கடவுள் வணக்க இரு பாடல்களும் திருமலைப்பற்றிய நான்கு கருத்துக்ளைக் கொண்டுள்ளன. அழுக்குச் சேர்நதாலும் நாண்மணி தன் பெருமையில் குறையாது. கழுவி எடுத்துக் கொண்டாலும் இருப்பினில் அழுக்கு சேரும் கீழ் மக்களிடம் அன்பு காட்டி புத்திமதி கூறினாலும் தம்முடைய கீழ்மைக் குணத்தை வெளிப்படுத்தி விடுவா் இவ்வழகிய கருத்திணை,

‘மாசுபடினும் மணி, தன் சீர் குன்றாதாம்
பூசிக் கொளினும் இரும்பின் கண் மாசு஌ட்டும்
பாசத்துள் இட்டு விளக்கினும் கீழ்தன்னை
மாசுடைமைக் காட்டிவிடும்.

என்னும்பாடல் (100) எடுத்துரைக்கின்றது

**10. இன்னாநாற்பது**

**உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியா் | - | கபிலா் |
| காலம் | - | கி.பி 50 முதல் 125 வரை என ந.மு. வேங்கட சாமி நாட்டார் கூறுகின்றார் |
| பாடல்கள் | - | 1 + 40 |
| பாவகை | - | வெண்பா |

**உள்ளடக்கம்**

முதற்பாடல் கடவுள் வாழ்த்தாகக் கபிலா் அமைத்துள்ளார். இதில் சிவன், பலராமன், திருமால், முருகன் என்னும் நான்கு கடவுளரையும் வணங்காமை இன்னா என்று கடவுள் வாழ்த்தில் குறித்துள்ளார். வாழ்வியலுள் காணப்படும் துன்பங்களின் மூலங்கள் இவை இவை எனக் கண்டு அவற்றைத் தொகுத்துக் கூறியிருக்கும் புதுமரபு தமிழிலக்கியத்தின் புது வரவு.

இன்னாதவற்றைக் கூறும் 40 பாடல்களைக் கொண்டது கபிலரின் சமயப்பொறுமை சீர்மை மிக்கது.

**11. இனியவை நாற்பது**

**உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியா் | - | பூதஞ்சேந்தனா் |
| காலம் | - | கி.பி. 5ம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 1 + 40 |
| பாவகை | - | வெண்பா |

**உள்ளடக்கம்**

வாழ்க்கைச் சோலையின் இன்பமூலங்கள் இவை இவை எனக்கண்டு அவற்றைத் தொகுத்துரைக்கும் இனியவை நாற்பதின் மரபு இன்னா நாற்பதின் தொடர்ச்சியாக உள்ளது. இனியவற்றைக் கூறும் 40 பாடல்களுக்கான கடவுள் வாழ்த்திலும்,

‘கண்மூன்று உடையான்தாள் சேர்தல் கடிது இனிதே
தொன்மாண் துழாய்மாலை யானைத் தொழிலினிதே.

என்னும் முறையில் இனியவற்றைக் கூறும் இயைபு ஒழுங்கு போற்றற்றாது. சிவன், திருமால், பிரமன் மூவரையும் கூறும் பூதஞ்சேந்தனார் சமயப்பொதுமை சிரும்பியாகக் காட்சியளிக்கின்றார்.

**12. திருக்குறள்**

**உருவம்**

ஆசிரியர் - திருவள்ளுவர்

**வள்ளுவரின் வேறு பெயர்கள்**

1. தெய்வப்புலவர்
2. நாயனார்
3. முதல்புலவன்
4. பெருநாவலர்
5. செந்நாப்போதார்
6. மாதானுபங்கி

**குறளின் வேறுபெயர்கள்**

1. திருவள்ளுவம்
2. தமிழ்மறை
3. பொதுமறை
4. முப்பால்நூல்
5. பொய்யாமொழி
6. தெய்வநூல்
7. வாயுறை வாழ்த்து
8. உத்தரசேதம்

பாவகை: குறள்வெண்பா

பெயர்க்காரணம் : திரு + குறள் = திருக்குறள்

குறள்: குறுகிய வடிவினை உடையது. முதல் அடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் பெற்று குறுகிய வடிவினைக் கெணர்டு இருப்பதால் 'குறள்' எனப்படுகிறது.

திருக்குறளுக்கு பலபேர் உரை எழுதியுள்ளனர். திருக்குறள் கருத்துக்ள பல சங்க இலக்கியக் கருத்துககருடன் காணப்படுகிறது. குறுந்தொகை, நற்றிணை, புறராஜா முதலான சங்க இலக்கியங்களில் தொடரும் கருத்துக்களும் கையாளப்பட்டுள்ளன.

**குறள் உலகப்பொதுமறை**

அனைத்துச் சமயத்தாருக்கும் அனைத்து நாட்டினருக்கும், அனைத்துக் காலத்திற்கும் பொருந்தும் உண்மைகளைத் திருக்குறள் கூறுகின்றது. இந்திய மொழிகள் பலவற்றுள் மொழியாக்கம் பெற்றுள்ளது. மராத்தி, வடமொழி, குஜராத்தி, பெங்காலி, மொழிகளில் மொழியாக்கம் பெற்றுள்ளது. மலையாளம், தெலுங்கில் 80க்கு மேலானோர் மொழியாக்கம் பெற்றுள்ளனர்.

மனத்தூய்மையின் மாண்பினையும், வாழ்வியல் விழுமியங்களையும், பெண்கள் மடலேறு இல்லை என்பதனையும் உரைத்துள்ளது. திருக்குறளின் மரப்புக்குறிப்புகள் நிறைந்துள்ளன. வடசொற்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. உலகமொழிகள் அனைத்திலும் மொழபெயர்க்கப்பட்டுள்ள உலகளாகிய ஒரே நூல் திருக்குறள் மட்டுமே. பதினெண் கீழ்க்கணக்கின் முப்பெரு அறநூல்களுள் தலையாயது திருக்குறள்.

**13. திரிகடுகம்**

**உருவம்**

ஆசிரியர் - நல்லாதனார்

காலம் - கி.பி. 5 ஆம் நூற்றாண்டு

பாடல்கள் - 1 + 100

பாவகை - வெண்பா

பெயர்க்காரணம்: சுக்கு, மிளகு, திப்பிலி, ஆகிய மூன்றும் உடல் நோயைத் தீர்ப்பன. அதனைப் போன்று அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டிலும் சுறியுள்ள மும்மூன்று கருத்துக்களும் உள்ளத்தின் நோயைப் போக்க வல்லன. எனவெ இந்நூறல் திரிகடுகம் எனப்படுகின்றனது.

முற்பாடல் நூலின் கடவுள் வாழ்த்தாக அமைந்து திருமாலைப் போற்றுகின்றது. நூலின் முதற் பாடலில் திரிகடுகம் கம்மேளம் மருந்து என்னும் 4 ஆவது வரியின் மூலம் இந்நூல் திரிகடுகம் எனப்பெயர் பெற்றிருக்கலாம்.

**14. ஆசாரக்கோவை**

**உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | பெருவாயில் முள்ளியார் |
| காலம் | - | கி.பி. 5ம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 100 |
| பாவகை | - | பல்வேறு வெண்பா வகைகள் |

**பெயர்க்காரணம் :**

ஆகாரம் = ஒழுக்கம் வாழ்க்கையில் கடை பிடிக்க வேண்டிய ஆதரரங்களைக் கோவைப் படுத்திக் கூறுவதற்கு ஆசாரக்கோவை எனப்படும்.

**ஆசாரக்கோவையின் உள்ளடக்கம்**

கொள்ளத்தக்க ஆகாரம் என்றும் தள்ளத்தக்க ஆகாரம் என்றும் இரு நோக்கில் முன்னியார் கருத்துக்களைப் பெய்துள்ளார். நீராடல், ஆடை அணிதல், உணவு கொள்முறைமை, உண்ணும் திசை, வாயைத் தூய்மை செய்யும் வகை, நீர் பருகும் முறை. தூங்கும் முறை முதலான கொள்ளத்தக்க ஆகாரங்களை முள்ளியார் கூறுகின்றார். எச்சியூடன் செய்யத்தகாதவை, நின்று கிடந்து உண்ணாமை அந்திப் பொழுது செய்வன தவிர்வன, சிந்திக்கலாகாதவை எனத்தள்ளத்தக்க அசாரங்கள் விரிந்துரைக்கப்படுகின்றன.

**பழமொழி**

உருவம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | முன்முறையரையனார் |
| காலம் | - | கி.பி. 5 ஆம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 400 |
| பாவகை | - | வெண்பா |

**பெயர்க்காரணம் :**

ஒரு கதையோ, வரலாற்று நிகழ்வோ கட்டி உரைக்கப்பட்டு பாடலின் இறுதியில் பழமொழி மூலம் நீதி சுட்டப்படுவதால் இந்நூல் 'பழமொழி' எனப்பெயர் பெற்றது.

**பழமொழி உள்ளடக்கம்**

மக்கள் வழக்கில் உள்ள பழமொழிகளோடு இலக்கிய வழக்குப் பழமொழிகளும் கலந்து பழமொழி நூலில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டு மன்னர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் நூலுள் கலந்து கிடக்கின்றன. உலக வழக்குப் பழமொழிகள், இலக்கிய வழக்குப் பழமொழிகளும் இடம்பெறுகின்றன.

'பாம்பறியும் பாம்பின் கால்,

குன்றில் மேல் இட்ட விளக்கு'

'கற்றலின் கேட்டலே நன்று'

வரலாற்றுச் செய்திகளும் காணப்படுகின்றன. புராணச் செய்திகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. மரபுக் குறிப்புகளும் விரவி உள்ளன.

**16. சிறுபஞ்ச மூலம்**

**சிறுபஞ்சமூலத்தின் உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | காரியாசான் |
| காலம் | - | கி.பி. 5 ஆம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | கடவுள் வாழ்த்து 1 |
| | | பாயிரங்கள் 2 |
| | | சிறுபஞ்சமூலச் செய்யுட்கள் 102 |
| பாவகை | - | வெண்பா |

**பெயர்க்காரணம் :**

ஐந்து எளிய வேர்மூலங்களைக் கொண்டது, சிறுபஞ்சமூலம் எனப்படும். பஞ்சமூலம் என்பதற்குப் பதார்த்த குணசிந்தாமணியும், பொருள் தொகை நிகண்டும் பின்வருமாறு பொருள் தருகின்றன. சிறுபஞ்ச மூலமாவன.

1. சிறுவழுதுணைவேர்
2. கண்டங்கத்திரிவேர்
3. நெருஞ்சி வேர்
4. சிறுமல்லி வேர்
5. பெருமல்லி வேர்

என்பன.

**சிறுபஞ்சமூலத்தின் உள்ளடக்கம் :**

சிறுபஞ்ச மூலப் பாடல்கள் ஒவ்வொன்றும் கற்கண்டாக இனிக்கின்றன. யாரையும் ஏளனமாக நினைக்கக்கூடாது. எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது என்பதனை ஒரு பாடல் குறிக்கின்றது.

சூல் நிற்காமல் வரும் துன்பம், சூல் கொண்ட பின் உண்டாகும் துன்பம், பெற்றெடுத்த பின் புனிற்று உடலில் இயலாத தளர்ச்சித்துன்பம், குழந்தையை வளர்க்கும் துன்பம், வளர்ந்த குழந்தையைச் சால்பு நெறியில் நிலை நிறுத்தப்படும் துன்பங்கள் ஆகியன நினைக்கின் அரிதான செயல்கள் (சிறு : 75)

**முதுமொழிக்காஞ்சி :**

**முதுமொழிக்காஞ்சியின் உருவம் :**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | மதுரைக் கூடலூர்க் கிழார் |
| காலம் | - | கி.பி. 5ம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | 100 |
| பகுப்புமுறை | - | அதிகாரங்களுக்குப் பத்துப் பாடல்கள் வீதம் |
| | | பத்து அதிகாரங்கள் பகுக்கப்பட்டுள்ளன. |

**அதிகாரங்கள்**

1. சிறந்த பத்து
2. அறிவுப் பத்து
3. பழியாப் பத்து
4. துவ்வாப் பத்து
5. அல்ல பத்து
6. இல்லைப்பத்து
7. பொய்ப்பத்து
8. எளியபத்து
9. நல்கூர்ந்த பத்து
10. தண்டாப்பத்து

பாவகை: குறள் தாழிசை

பெயர்க்காரணம் : முதுமொழி - மூத்தோர் சொல்,

காஞ்சி – மகளிர் இடையணி

மூத்தோர் சொற்கள் பலவற்றைக் கோர்த்த கோவை 'முதுமொழிக்காஞ்சி' எனப்படுகிறது.

**அதிகாரத் தொடக்கம் :**

ஒவ்வொரு அதிகாரத்திலும் முதல்பாட்டின் முதல்வரி "ஆர்கலி உலகத்து மக்கட்கு' எல்லாம் எனத் தொடங்குகின்றன. மற்றபடி அனைத்துப் பாடல்களும் ஒவ்வொரு வரியினைக் கொண்ட பாடல்களாக உள்ளன.

முதுமொழிக்காஞ்சியின் உள்ளடக்கம்

அனைத்துப் பத்துகளிலும் உள்ள ஒவ்வொரு பாடலும் தேர்ந்தெடுத்த முத்துக்களாக ஒளிர்கின்றன. முதல் ஐந்து பத்துகளில் இருந்து ஒவ்வொரு பாடலைக் காண்போம்.

இளமையில் சிறந்ததன்று மெய்பிணியின்மை
(சிறந்தன்று – சிறந்தது) (சிறந்த பத்து : 5)
ஈரம் உடைமை ஈகையின் அறிப.
(ஈரம் - இரக்கம்) (அறிவுப்பத்து : 2)
சிறியார் ஒழுக்கம் பிறந்தோடும் பழியார்
(பழியாப் பத்து : 10)
பழியோர் செல்வம் வறுமையில் ஒவ்வாது
(துவ்வாப்பத்து : 1)
ஈரல் இல்லாதது கிளை நட்பு அன்று
(அல்ல பத்து : 3)

**ஏலாதி**

**ஏலாதியின் உருவம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | கணிமேதாவியார் |
| காலம் | - | கி.பி. 5 ஆம் நூற்றாண்டு |
| பாடல்கள் | - | பாயிரம் 1 தற்சிறப்புப் பாயிரம் 1 செய்யுட் பாடல்கள் 80 |
| பாவகை | - | வெண்பா |
| பெயர்க்காரணம் ஏலம் | - | 1 பங்கு |
| இமவங்கப்பட்டை | - | 2 பங்கு |
| மிளகு | - | 4 பங்கு |
| திப்பிலி | - | 5 பங்கு |
| சுக்கு | - | 6 பங்கு |

என ஏலம் முதலான ஆறு பொருள்களையம் பொடி செய்த மருந்துக் கலவைக்கு ஏலாதி என்று பெயர் இந்த ஆறு மருந்துகளும் சேர்ந்து உடலுக்கு நன்மை விளைவிக்கும் அதுபோல் உள்ளத்திற்கும் உறுதிசேர்க்கும் ஆறு நிலை பேறுடைய கருத்தியல்களை ஒவ்வொரு பாடலும் கூறுவதால் இந்நூலுக்கு ஏலாதி என்று பெயர்.

**பிற அற நூல்கள்:**

**ஔவையார் நீதி நூல்கள் :**

1. ஆத்திசூடி
2. கொன்றை வேந்தன்
3. மூதுரை (வாக்குண்டாம்)
4. நல்வழி

என்னும் நான்கு நூல்களும் ஔவையாரின் நீதிநூல்கள் ஆகும். ஔவையார் பலர், இந்நீதி நூல்களைப் பாடிய ஔவையார் சோழர் காலத்தவர். கி.பி. 12ம் நூற்றாண்டினர் என்பார். மு.அருணாசலம் அவர்கள்.

**1. ஆத்திசூடி (கி.பி.12) :**

109 ஒற்றைவரிப் பாக்கள் கொண்டது. அகர நிரல் கொண்டு எழுதப்பட்ட முதல் இலக்கியம் மற்றும் நீதிநூல் இது. இனிமை, எளிமை, கருத்தாழம் மிக்க பாடல்கள் அனைவா் மனதிலும் பசுமரத்தாணி போலப் பதிந்து கிடக்கும் புகழ்பெற்றது.

அறம் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்

என அளக்கருத்துகளை அன்புடன் எடுத்துரைக்கின்றது.

**2) கொன்றை வேந்தன் (கி.பி. 12) :**

கொன்றை வேந்தனும் அகர நிரல் அமைப்பினைக் கொண்டுள்ளது. 91 ஒற்றை வரிப்பாக்கள் அமைந்தது.

'அன்னையம் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று'

என எளிமையும் இனிமையுமாக நீதிகளை ஔவையாா் எடுத்துரைக்கின்றாா்.

**3. மூதுரை (கி.பி. 12): (வாக்குண்டாம்)**

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் என மூதுரையின் கடவுள் வாழ்த்து தொடங்குகிறது. 'வாக்குண்டாம்' எனத் தொடங்குவதால் மூதுரைக்கு வாக்குண்டாம் என்றும் பெயா். கடவுள் வாழ்த்தாகத் துப்பாா் திருமேனி தும்பிக்கையான் என விநாயகரை வணங்கும் பழக்கத்தை ஔவையாரிடம் காண்கிறோம். கடவுள் வாழ்த்து நீங்கலாக 30 வெண்பாக்கள் உள்ளன.

பயன்கருதாது செய்யும் உதவிக்குத் தென்னை மரத்தை உவமிக்கின்றாா். இதனை
நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா – நின்று
தளரா வளா்தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்'

**4. நல்வழி (கி.பி 12)**

'பாலும் தெளிதேனும் பாகும் பகுப்பும்' எனத் தொடங்கும் புகழ்பெற்ற பாடல் கடவுள் வாழ்த்தாக உள்ளது. 'கோலம் செய்யங்கக்கரிமுகத்துத் தாமன் என விநாயகா் வணக்கம் கடவுள் வாழ்த்தாக அமைகிறது. கடவுள் வாழ்த்து நீங்கலாக 40 வெண்பாக்கள் உள்ளன.

ஈயாமையின் இழிவு பேராசை கூடாது. உழவின் உயா்வு. தீவினையே வறுமைக்கு வித்து முதலான பல அறங்கள் கூறப்படுகின்றன.

**5. அறநெறிச் சாரம் (கி.பி.13)**

ஆசிரியா் முனைப்பாடியாா் கடவுள் வாழ்த்துடன் 226 வெண்பாக்கள் உள்ளன. சமண சமய நூல் ஆயின. பொது நீதிகளை மிகுதியாகப் பேசுகின்றது.

மின்னும் இளமை உதாம் என மகிழ்ந்து
பின்னை அறிக என்றல் பேதைமை

எனவே நிலைமையயை உணா்ந்து அறம் செய்க என்று நீதி நவலிகின்றது.

**6. வெற்றி வேற்கை (அ) நறுந்தொகை (கி.பி.16) :**

ஆசிரியா் அதிவீரராமபாண்டியா். கடவுள் வாழ்த்தாக ஐங்கரனை (விநாயகா்) கூறுகிறாா். கடவுள் வாழ்த்தாக உள்ள இருவரிகளில் பிரணவம், சரணம், அற்புதம் என்னும் மூன்று வடசொற்கள் காணப்படுகின்றன.

ஆசிரியரே தம் நூலை வெற்றிவேற்கை என்னும் நறுந்தொகை என்றும் 'நூற்பயன்' பகுதியில் குறிப்பிட்டுள்ளார். மேலும், தன்னைக் கொற்கையாளி என்றும் குறித்துள்ளாள். 82 பாடல்கள் உள்ளன.

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும் (1) என்னும் புகழ்வாய்ந்த பாடல் வெற்றி வேற்கையின் சீர்மைசாற்றும் 'அழகு' எனப் பல பாடல்கள் தொடர்கின்றன.

**7) நீதிநெறி விளக்கம் ∴ கி.பி. 17:**

ஆசிரியர் குமரகுருபரர் கடவுள் வாழ்த்தில் உலகப் பொதுமையில் 'எம்பிநான்' என்று சுட்டுகின்றார். 102 வெண்பாக்கள் கொண்டது,

கல்வி, சொல்வண்ணம், பணிவுடைமை, ஆறுந்திறமை, வரி கொள்ளும் முறை, செங்கோன்மை, அமைச்சர் கடமை, நட்பு, மெய்யுணர்வு, வீடுபேறு முதலிய பல பொருண்மைகளில் குமரகுருபரர் விளக்கியுள்ளார்.

**8. நன்னெறி (கி.பி. 17):**

ஆசிரியர் துறைமங்கலம் சிவப்பிரகாசர் 17 ஆம் நூற்றாண்டு வழிபடு கடவுள். நூலின் பெயர், பாவண பாடல் எண்ணிக்கை ஆகிய செய்திகள் அனைத்தையும்,

மின்னெறி சடாமுடி விநாயகன் அடிகொடி
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே'

**9. உலகநீதி: (கி.பி. 18)**

ஆசிரியர் உலகநாதன் 13 ஆசிரிய விருத்தங்களைக் கொண்டுள்ளது. உலகநீதி புராணம் என்று ஆசிரியர் தமது நூலின் பெயரைக் குறிப்பிட்டு விநாயகர் வாழ்த்தாகக் கடவுள் வணக்கத்தை அமைத்துள்ளார்.

என்சீர் ஆசிரிய விருத்தமாக அமைந்துள்ள உலக நீதியில் 4-ஆம், 8 ஆம்சீர்கள் வேண்டாம் என முடிகிறது. ஒவ்வொரு பாடலின் ஈற்று மூன்று சீர்களும் வாழ்த்தாய் நெஞ்சே. (அ) கூறாய் நெஞ்சே என முடிகிறது. 11, 13 ஆம் பாடல்களில் இம்முறை மாறுகிறது.

'மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்'
கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'

என்னும் புகழ்பெற்ற தொடர்கள் உலகநாதரின் பதிவாகத் திகழ்கின்றன.

**10) நீதிநூல் (கி.பி.19) :**

ஆசிரியர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள். பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் முதல் தமிழ்ப் புதினத்தைத் தந்தவர். காலம் 1826-1889 இந்நூலுக்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் ஆசிரியப்பாவால் ஆன 187 வரிகள் கொண்ட சாற்றுகவி ஒன்றனைத் தந்துள்ளார்.

தெய்வம், மன்னன், ஆசிரியன், மக்கள், பெண்கள், உடன்பிறந்தார். பொய், களவு, கொலை, சூது, மது, கைக்கூலி (இலஞ்சம்) சோம்பல், சினம், பொறாமை, மீதூண், தற்புகழ்ச்சி நிலையாமை முதலான பலப்பல வாழ்வியல் நீதிகளை மாயூரம் வேதநாயகர் விரிகாக விளக்குகினறார். கணவன் மனைவியர் இயல்பு பற்றி மட்டும் 48 பாடல்களில் பாடியுள்ளார்.

'பயிரினை வேலிதான் மேய்ந்த பான்மை போல்
செயிர்உள நீதியைச் சிதைத்தோர் தீயன்சாண்
வயிறினை வளர்த்திட ஆங்கு மாநிதி
வெயிலுறு வெண்ணணெய் போல் விளியும் உண்மையே'

**11. புதிய ஆத்திசூடிகள் கி.பி. 20)**

ஔவையார் பாடிய ஆத்திசூடியை அடியொற்றிப் பல புதிய ஆத்திகடிகள் தமிழில் தோன்றி உள்ளன. ஆத்திசூடி இலக்கியம் எனத் தனியொரு வகைமையாக இனம்

காணக்கூடிய அளவில் பல ஆத்திசூடிகள் தமிழ் இலக்கியத்திற்குப் புதியவருவதாகத் தோற்றம் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| பாரதியார் | - | புதிய கத்திசூடி |
| பாரதிதாசன் | - | ஆத்திசூடி |
| வ.சு.ப.மாணிக்கம் | - | தமிழ்சூடி |
| ந.ரா.நாச்சியப்பன் | - | நெறிகடி |
| ச.மெய்யப்பன் | - | அறவியல் சூடி |
| தமிழண்ணல் | - | ஆய்வுசூடி |
| புலவர் சோ.ம. இளவரசு | - | 7 நீதிசூடி |

எனப் பாரதியார் உள்ளிட்ட பலரும் எழுதியுள்ளவை புதிய ஆத்திசூடி வரவுகள்.

இவற்றுள் டாக்டர் தமிழண்ணலின் ஆய்வுசூடி ஆராய்ச்சி நெறிமுறைகளை எடுத்துரைப்பது.

'அச்சம் தவிர்
உடலினை உறுதி செய்
ஐம்பொறி ஆட்சி கொள்
கிளை பல தாங்கேல்'

என்பன பாரதியாரின் புதிய ஆத்திசூடி

'அயல்மொழி பழகு'

'ஈ யென வாழேல்'

'நுவ்வினம் போல் இரேல்'

என்பன நா.ரா.நாச்சியப்பனின் ஆத்திசூடி.

பிற அறநூல்களின் மரபுப் குறிப்பு

1) தொல்காப்பியர் நீதி நூலிலும் நிலையினைச் செவியுறை, வாயுறை எனக் குறித்துள்ளார்.

2) உறை – மருந்து என்று பேராசிரியர் கூறுகின்றனார். வாயால் கூறப்படும் நீதி வாயுறை எனப்படும். காதால் கேட்டு உணரப்படும் நீதி செவியுறை என வழுங்கப்படும்.

3) நீதி நூல்களுள் திருக்குறள் இலக்கிய உலகிலும், உலக அளவிலும் தனித்ததொரு இடத்தை வென்றுள்ளது.

4) பிறநீதி நூல்கள் அனைத்தும் கால, வேதங்களைக் கடந்து நிலைத்து நிற்கும் நிலைபேறுடைய நீதிகளைக் கூறுகின்றன.

5) நீதி நூல்களுள் கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, உலகநீதி, நன்னெறி ஆகிய நூல்களில் கடவுள் வாழ்த்தாக விநாயகர் வணக்கம் காணப்படுகிறது.

**அலகு - 1 வினாக்கள்**

1. இலக்கிய வரலாற்றின் புதிய நோக்கினைத் தருக
2. தமிழ்மொழியின் தொன்மை மற்றும் சிறப்புகளை விவரி.
3. முச்சங்கங்கள் இருந்ததா?
4. சங்ககாலம் குறித்த காலக் கணிப்புகளைத் தருக.
5. தொல்காப்பியம் குறித்தெழுதுக.
6. சங்க இலக்கியங்களை விவரிக்க?
7. பத்துப்பாட்டு நூல்களை விவரி
8. சங்க இலக்கியங்களின் மேன்மையினை விவரி.
9. நீது இலக்கியங்களை விவரி
10. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை குறித்து விவரிக்க.

## அலகு-2

## காப்பிய இலக்கியங்கள்

### முன்னுரை

தமிழில் காப்பிய இலக்கியம் பல காலங்களில் பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கொண்டது. தொல்காப்பியத்திற்கு முன்பே பல வாய்மொழி வடிவக் காப்பியங்களும் எழுதப்பட்ட சில பெருங்காப்பியங்களும் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். இவ்வாறு முன்பு இலக்கணத்தைக் குறித்து மொழி மரபுகளைக் காக்கும் பெருநூல்களைக் குறித்து பேரிலக்கியங்களாம் தொடர்நிலைச் செய்யுளையும் அது குறிக்கலாயிற்று. காப்பிய இலக்கியம் தோன்றியுள்ளது.

### காப்பிய இலக்கிய காலம்

சிலப்பதிகாரமே தமிழின் முதற்காப்பியம் என்பது அதன் கட்டமைப்பு மொழிக் கூறு போன்றவற்றால் உறுதிப்படும். ஆட்சிக் காலம் இலங்கை வரலாற்றில் கி.பி.114-135 ஆகும். எனவே அதன் காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு எனத் தெளிவு. மணிமேகலைக் கதை சிலம்புக் கதையுடன் தொடர்புடையது. சாத்தனார் பற்றிய குறிப்புச் சிலம்பிலும் உண்டு. இரு நூல்களுக்கும் உள்ள ஒற்றுமைகளும் பலவாகும். சமயச் சார்பால் மணிமேகலை வேறுபடுகிறதென்பது உண்மையே ஆயினும் இவையிரண்டும் இரட்டைக் காப்பியங்கள் என்பன.

அடுத்துச் சோழர் காலத்தே தான் பெரும்பான்மையான காப்பியங்கள் தோன்றின. கி.பி.9ம் நூற்றாண்டு முதல் 12 ம் நூற்றாண்டு வரை சோழப் பேரரசு ஓங்கியிருந்த காலத்தே தோன்றியதைச் சோழர் காலக் காப்பியங்கள் என அழைக்கலாம். இங்ஙனம் தமிழில் காப்பிய காலம். இரண்டாக அமைவதால் முதற்காப்பிய காலம். பிற்காப்பிய காலம் எனவும் பகுத்துக் கூறுவர். நிலையான பேரரசுகள் ஆண்ட காலத்தே மக்கள் மன அமைதியுடன் விழாவிலும் மகிழ்ச்சியிலும் ஈடுபடுவர் காப்பியங்கள் உருவாகும் காலம் இத்தகையதே ஆகும். மூவேந்தர் ஆட்சியின் பயனாக அகமும் புறமும் வளர்ந்து கனிந்தவை இரட்டைக் காப்பியங்கள். சோழப் பேரரசின் பயனாக உருவானவை இடைக் காலத்தவை.

1. இரட்டைக் காப்பியங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை

2. ஐம்பெருங்காப்பியங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

3. ஐஞ்சிறுகாப்பியங்கள் - யசோதர காவியம், உதயண குமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம், சூளாமணி.

4. இராமாயணங்கள் - இராமகதை, கம்பஇராமாயணம்

5. புராணக் காப்பியங்கள் - பெரிய புராணம், கந்த புராணம்

6. பாரத நூல்கள் - பெருந்தேவனார் பாரதம், பாரத வெண்பா, வில்லி பாரதம், நளவெண்பா.

7. சமயக் காப்பியங்கள்

இசுலாமியம்: சீறாப்புராணம்

கிறித்துவம்: தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம்.

## இரட்டைக் காப்பியங்கள்

### சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் தோன்றிய வரலாற்றைக் காட்சிக் காதையில் காணலாம். மலைவாணர் பலர் கூடி வேங்கை மரத்தடியில் துயருற்றிருந்து கணவனுடன் விண்ணகம் போன ஒரு பெண்ணைப் பற்றிப் பேரியாற்றங்கரைக்கு மலைவளம் காண வந்திருந்த சேரன் செங்குட்டுவனிடம் கூறினர். அம்மன்னனுடன் அவன் மனைவி வேண்மாளும் இளங்கோவும் தண்டமிழாசான் சாத்தனும் சென்றிருந்தனர். மலைவாணர் கூற்றைக் கேட்ட சாத்தனார் ஒண்டொ மாதர்க் குற்றதையெல்லாம் எடுத்துக் கூறுகிறார். இங்ஙனம் அக்கதையைக் கேட்ட காரணத்தால், உணர்ச்சியால் உந்தப் பெற்ற இளங்கோவடிகள்

‘அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம்

உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்

ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதூஉம்

சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்

சிலப்பதிகாரம் என்னும் பெயரால்

நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்’

(பதிகம்)

சிலப்பதிகாரத்தை 30 காதைகளைப் பகுத்து, மூன்று காண்டங்களில் அமைத்து அருளினார். புகார்க் காண்டம் 10 காதைகள், மதுரைக் காண்டம் 13 காதைகள், வஞ்சிக் காண்டம் 7 காதைகள் இவற்றுள் வேட்டுவவரி, கானல் வரி போல் வரிப்பாடல்களாக அமைந்த காதைகளும் ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை போல் குரவையாடல்களாயமைந்த காதைகளும் உள மங்கல வாழ்த்து முதல் வரந்தரு காதை வரை கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக்கிக் காட்டுதலே இளங்கோவின் உட்கோளாகும்.

இளங்கோவடிகள் இசை நாடகப் பண்புகள் மிளிர இதனையாத்தமையால் இ∴து இயலிசை நாடகப் பொருட்தொடர் நிலைச் செய்யுள் எனப்படும். இடையிடையே ஒரு சிறிது உரைநடை வரக் கோத்தமையால் ‘உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுளுமாகும்.’ நாடகக் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், என்றெல்லாம் இன்று அது சிறப்பிக்கப்படுகிறது. ‘சிலப்பதிகாரம் என்று ஓர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு’ என்ற பாரதியார் “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்” எனப் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கோவலன் என்ற வணிக மகனை மணந்து கொண்ட கண்ணகி சில ஆண்டுகள் அவனுடன் இன்புற்று வாழ்ந்தாள். மாதவி என்ற கணிகை கடற்கலையரசியாய் அரங்கேறிய போது, அதனைக் கண்டு மனத்தைப் பறிகொடுத்த கோவலன் தன் வீட்டையும் மனைவியையும் மறந்து அவளுடன் உறைவானாயினான். பின்னர் மாதவியுடன் மாறுபட்டு, அவன் இல்லம் திரும்பினான். சிலம்புடன் வணிகம் செய்ய மதுரையை நோக்கி புறப்படும் போது கவுந்தியடிகள் என்ற சமணத் துறவி வழித் துணையான. புறஞ்சேரியை துறவிகள் தங்கும் இடத்தில் மாதரியிடம் கண்ணகி கோவலன் இருவரையும் ஒப்படைத்து ஊருக்குள் அனுப்பி வைத்தார்.

மாதிரி வீட்டில் மனைவி சமைத்த உணவினையுண்டு கோவலன் நகருக்குள் புறப்பட்டான். வழியிடையே பொற்கொல்லன் ஒருவனைக் கண்டு சிலம்பைக் காட்டினான். அவன் மன்னனுடைய தேவியினது காற்சிலம்பைக் முன்னமே திருடியவனாதலின் கோவலனை 'கள்வன்' என அரசனிடம் பிடித்துக் கொடுத்து விட்டான். அரசன் ஆராயாது கொல்லும்படி கட்டளையிட்டு விட்டதால் கோவலன் கொலையுண்டான். பின்னர் கண்ணகி, பாண்டியன் அவை சென்று வழக்காடி தன் சிலம்பு மணிப்பரல் உடையதெனக் கூறி அதனை உடைத்து மெய்ப்பித்தாள். பாண்டியன் தேவியின் காற்சிலம்பு முத்துப்பரல்களை உடையது. அதனால் தன் குற்றமுணர்ந்த பாண்டியன் அரியணையிலிருந்தவாறே விழுந்து உயிர் விட்டான். அவன் தேவியும் உடனுயிர் நீத்தான். சினந்தணியாத கண்ணகி மதுரையை எரியூட்டினாள். பிறகு மேற்கு நோக்கியே நடந்து சேல நாட்டு எல்லையை அடைந்த நெடுவேள் குன்றம் அடிவைத்து ஏறி வேங்கை மர நிழலிலிருந்து பதினான்காம் நாள் வானவனாகிய கணவன் வந்தழைக்க உடன் சென்றனள். இங்ஙனம் மதுரைக் காண்டத்துடன் அவலமாகக் கதை முடிகிறது. வஞ்சிக் காண்டத்தில் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டிக் கோயிலெழுப்பிய செய்தி இடம் பெறுகிறது.

**மணிமேகலை**

காப்பியத் தலைவன் பெயரால் இது 'மணிமேகலை' என்றும் 'மணிமேகலை களவு' என்றும் அழைக்கபட்டது. சிலம்பு போலவெ முப்பது காதைகளையுடைய தாயினும் வரிப்பாடல்கள், குரவைப் பாடல்கள் போல் வன இடைவிரவி வராமல் இது வேறுபட்டுள்ளது. மணிமேகலையாகிய காப்பியத் தலைவி பௌத்த சமயத்தை அழுந்தப் பற்றிப் புறச் சமயத்தாருடன் வாதிட்டவளாதலின், அவள் கதையைக் கூறும் சாத்தனார்

மணிமேகலை 'விழாவறை காதை'யில் தொடங்குகிறது. காவிரிப்பூட்டணத்தில் இருபத்தெட்டு நாள் நடைபெறும் இந்திரவிழா பற்றி அது விவரித்துக் கூறுகிறது.

'பசியும் பிணியும் பகையும் நீங்கி

வரியும் வளனும் சுரக்கென வாழ்த்தி'

விழா தொடங்குகிறது. இறுதியில் 'பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதையில் கதை முடிகிறது. இந்திர விழாவில் நாட்டியமாடுவதற்கு மாதவியும் வரவில்லை. மணிமேகலையும் வரவில்லை. அதனால் ஊரார் பழி சாற்றுவதாக மாதவியின் தாய் சித்திராபதி வயந்தமாலையிடம் கூறியனுப்புகிறாள்.

"மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை

அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்"

என்று விடை கூறக் காண்கிறோம். மணிமேகலை தன் பெற்றோர் உற்ற துயரைக் கேட்ட அளவில் கண்ணீா் சிந்த புத்த பகவானுக்குக் கொடுத்த மாலை தூய்மை இழந்தது. புதிய மாலை தொடுக்க உவவனம் செல்லும் போது உதயகுமாரன் மணிமேகலை மீது அன்பு கொண்டு புத்தபீடிகை பின்னால் மறைந்தாள். மணிமேகலா தெய்வம் அவளை மணி பல்லபத்தீவில் அழைத்து சென்று, பழம் பிறப்புஉணர்ச்சி ஏற்பட்டது. 'நீயும் உதயகுமாரனும் பழம் பிறப்பில் கணவன் மனைவியராக விளங்கியவர்கள். அதனால் உன் மனமும் அவன்பாற் சென்றது. உன்னைத் தனிமைப்படுத்த இங்கு தூக்கி வந்தேன்.' பிறகு வேற்றுரு எடுக்கவும், வான வழியாகச் செல்லவும், பசியை அடக்கவும் வல்ல மூன்று மந்திரங்களை நல்கிச் சென்றது.

அத்தரும பீடிகையைக் காக்கும் தீவதீலிகை தோன்றி ஆபுத்திரன் கையிலிருந்ததும் அன்னம் அள்ள அள்ள குறையாத அமுதசுரபி என்னும் 'அட்சய பாத்திரம்' மணிமேகலை கையில் கொடுத்தனர். ஆதிரை என்னும் கற்புக்கரசியுடம் முதன்முதல் பிச்சை பெற்றுப் பிறகு காது கேளாதோர், கண் தெரியாதவர்கள் முதலிய ஏழைகள் அனைவருக்கும் பசிப்பிணி தீர்த்தாள். உலகளவியல் உணவூட்டிப் பணி செய்து கொண்டிருந்த மணிமேகலை சித்தராபதி தூண்டுகோலால் தேடிச் சென்ற உதயகுமாரன் அவளுக்கு இன்னல்களை ஏற்படுத்தினான். பின்பு காயசண்டிகை வடிவமெடுத்து சிறைச் சாலைக்கு சென்று உணவூட்டி அறச்சாலையாக மாற்றினாள். அவளை தேடி வந்த கணவன் விஞ்சையன் மணிமேகலையை காயசண்டிகை என்று நினைத்து அவள் பின்னே தொடர்ந்தான். உதயகுமாரனை வாளால் வெட்டினான். பின்பு அவள் அவ்விடத்தை விட்டு சென்று விட்டு, மணிபல்லவன் இடத்தை அடைந்து அங்கிருந்து வஞ்சி மாநகர் சென்றாள். அங்கே கண்ணகி கோவலன் படிமங்களைக் கண்டு அழுதாள். தனது தாயினைக் கண்டு ஆண்வேடத்தை அகற்றிய அவள். அறவணவடிகளிடம் அவள் தவத்திறம் பூண்டு தருமம் கேட்டாள். அதனால் அவள் அக்காஞ்சியிலேயே பவத்திறம் அறுகென தோற்பவள் ஆயினாள்.

இவ்வாறு சிலப்பதிகாரம், மணிமேகலை ஐம்பெருங்காப்பியங்களில் பயின்று வருவதை அறிய முடிகிறது.

**பெருங்கதை**

இ∴து அகவற்பாவாலான காப்பியம், தமிழில் முதற்காப்பியங்கள் மூன்றும் அகவல் யாப்பால் அமைந்துள்ளமை கருதற்பாலது. பத்துப்பாட்டுப் போல, இவை கதை தழுவி இயல்பான வளர்ச்சியை உணர்த்தும். குணாட்டியர் என்பார் பைசாச மொழியின் எழுதிய கோசாம்பி நகர மன்னன் உதயணன்கதை இது. பிருகத் கதர் எனப்படும். இதனைப் பெருங்கதை என யாத்தனர் கொங்கு வேள் என்னும் அரசத்தமிழ்ப் புலவர் அதனால் இந்நூற்குக் கொங்குவேள் மாக்கதை எனவும் பெயருண்டு. இதுவே முதல் சமணக் காப்பியம்.

உதயணன் மலையின் பக்கத்தே பிறந்து, யூகி என்ற நண்பனுடன் வளர்ந்து தந்தை அரசையும் மாமன் அரசையும் தன் முயற்சியால் பெறுகிறான். இவன் யானையைத் தன்வயப்படுத்தும் கற்றலுடையவன்; யாழிசை வல்லவன். உச்சயினி நகர மன்னனால் சிறைப்படுத்தப்பட்டு, யூகியால் விடுவிக்கப் பெறுகிறான். உச்சயினி மன்னனது பட்டத்து யானையை அடக்கி அம்மன்னன் மகள் வாசவதத்தையை மணக்கிறான். பின்பு பத்மாவதியை மணக்கிறான். வாசவதத்தையின் மகன் நரவாண தத்தன் மதன மங்கையை மணக்கின்றான். அவளை வித்தியாதரன் ஒருவன் கைப்பற்றிச் செல்ல, உதயணன் வித்தியாதர உலகம் சென்று அங்குள்ள அரசர்களை வென்று, வித்தியாதரப் பெருமன்னனாய் வாழ்கிறான். இறுதியில் பகமாவதியின் மகனுக்கு அரசாட்சியை அளித்த விட்டு உதயணன் தவம் செய்யச் செல்கிறான்.

இதில் சிந்தாமணிக் காப்பியத்தின் வளர்ச்சிக்கான கூறுகளைக் காணலாம். இந்நூலில் ஊழின் வலி, நட்பினர் கடமை. அரசாட்சி முறை, நீத்தார் பெருமை, சமண சமயக் கொள்ளை ஆகியன விளக்கப்படுகின்றன. இந்நூல் இப்போது முதலும் இல்லாமலும் இடைப்பட்ட சில பகுதிகளின்றியும் கிடைத்துள்ளது. இதில் இலக்கியத் திட்ப நுட்பங்கள் பல செறிந்திருந்தும் கற்றறிந்தவர்களால் இது போதிய அளவு போற்றப்படாமை வியப்பைத் தருகிறது.

**ஐம்பெருங்காப்பியம்**

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி இவற்றில் முதல் இரண்டு காப்பியங்கள் இரட்டைக் காப்பியங்களை கருதப்படுகின்றன.

**சீவகசிந்தாமணி**

சோழ மரபினராய்ச் சமண சமயத் துறவியாய்த் திகழ்ந்த திருத்தக்க தேவரால் இக்காப்பியம் படைக்கப்பட்டது. விருத்தம் எனும் பாவிலான முதல் தமிழ்க் காப்பியம் என்று இது போற்றப்படுகிறது. இந்நூல் பதின்மூன்று இலம்பங்களையும் மூவாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுள்களையும் உடையது. சீவகன் கல்வி கற்றதைக் கூறுவது நாமகள் இலம்பகம். கட்டியங்காரனை வென்று நாட்டை அடைந்தது மண்மகள் இலம்பகம். சீவகன் ஆட்சி எய்தியது பூமகள் இலம்பகம். வீடு பேறுறக் காதலித்து முத்தியலம்பகம். பிற எட்டு இலம்பகங்கள் முறையே சீவகன் காந்தருவத்தை குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, மாமன் மகள் இலக்கணை ஆகிய எண்மரை மணந்தனைக் கூறுவனவாம். நண்பன் பதுமுகனுக்கு நந்தகோபன் மகள் கோவிந்தையை மணம் முடித்து வைத்தது கோவிந்தையாரிலம்பகம், இங்ஙனம் மணமாக உருவகித்தும் மணவினை பற்றியமே கூறுவதால் இதற்கு ‘மணநூல்’ என்ற பெயரும் உண்டு.

ஏமாங்கத நாட்டுச் சச்சந்தன், மனைவி விசையை மீது கழிபெருங்காதல் கொண்டு, அரசாட்சியைக் கட்டியங்காரன் என்ற அமைச்சனிடம் ஒப்படைத்தான். அவன் சூழ்ச்சி செய்து அரசனைப் புறஞ்சூழ்ந்து போரிட்டுக் கொன்று விட முயல்கையில் ஒரு மயில் பொறியில் கருவுற்றிருந்த தன் மனைவியை அனுப்பி விட்டுச் சச்சந்தன் போரில் மடிகின்றான். இவள் இடுகாட்டில் சீவகனைப் பெற்றுப் போட்டு விட்டுத் தவம் செய்யச் சென்று விடுகிறாள். கந்துக்கடன் என்ற வணிகன் சீவகனை எடுத்து வளர்க்கின்றான். அச்சணந்தி என்பவரிடம் கல்வி பயின்ற சீவகன் தன் நண்பனுக்கு கோவிந்தையை மணம் செய்வித்ததுடன் தானும் எண்மரைதன் பல்வேறு திறப்பாடு காரணமாக வென்று மணக்கிறான். நாட்டைக் கைப்பற்றி ஆட்சியையடைந்து, வாழ்ந்த பின் இல்வாழ்வின் நிலையாமையை நினைத்து, ஞானம் பெற்றுத் துறவு நிலையை அவன் அடைகின்றான்.

வயல்களில் தலைசாய்த்து விளங்கும் நெற்கதிர்களைக் காட்டி நாட்டு வளம் பாடும் தேவர் உவமைகளை அடுக்கி ஒரு கற்பனையைப் படைக்கிறார். பாம்பின் தோற்றம் போல் நாற்று வளர்ந்து, மேலல்லார் செல்வம் போல் தலை நிமிர்ந்து சிலநாள் நின்று, கற்றறிந்த பெரியோர் போலத் தலை கவிழ்ந்து நெற்பயிர்கள் காய்ந்தன என்கிறார் தேவர்.

“சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம் போல்

மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்

செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்தநூற்

கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே”

(நாமகள்)

**குண்டலகேசி**

இ∴தொரு பௌத்தக் காப்பியம். மறைந்து போன தமிழ் நூல்களுள் ஒன்று. உரையாசிரியர்களால் எடுத்தாளப்படும் சிறப்பு இதற்கும் உண்டு. புறத் திரட்டில் பத்தொன்பது செய்யுட்கள் காணப்படுகின்றன. விருத்தப்பாவால் இயன்ற இக்காப்பியம் யாப்பருங்கல விருத்தியுரையில் எடுத்தாளப்படுவதால் இது பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்பர். இதற்கு மறுப்பாக எழுந்த நீலகேசியின் காலம் கி.பி.9ம் நூற்றாண்டு. இதன் ஆசிரியர் நாதகுத்தனார்.

மணிமேகலை சமய வாதத்தைப் பற்றிப் பேசுகிறது. குண்டலகேசி. நீலகேசி பிங்கலகேசி போல்வன இவ்வகையிலான வாதக் காப்பியங்கள் என்பர். குண்டலகேசி பௌத்தத்தின்

பெருமையையும் அதன் மறுப்பாக எழுந்த நீலகேசி சமணத்தின் பெருமையையும் வாத அடிப்படையில் நிலைநாட்ட முயல்கின்றன. குண்டலகேசி (சுருண்ட கூந்தலையுடையவள்) என்ற பெண்ணின் கதையையும் நீலகேசி உரையிலிருந்தே தெரிந்து கொள்கிறோம்.

பத்திரை என்ற வணிகமகள், காளன் என்ற கள்வனை நேசிக்கிறாள். அரசனால் காவலில் வைக்கப்பட்டிருந்த அவனைத் தன் தந்தை உதவியால் மீட்டு மணந்து கொள்கிறாள். இருவரும் இனிதே வாழ்க்கையில், ஒருநாள் பத்திரை சினத்தால் கணவனைக் கள்வன் என்று திட்டவே அவன் அவளை வஞ்சமாகக் கொல்லக் கருதி மலையுச்சிக்கு அழைத்துச் செல்கிறான். அங்கே அவள் 'தற்கொல்லியை' முற்கொல்வன்' என நினைத்துச் சாகுமுன் கணவனை மும்முறை வலம்வர விரும்புவதாகக் கூறுகிறாள். அதற்கவன் இசையவே அவனை மலை முகட்டிலிருந்து கீழே தள்ளிக் கொல்கிறாள். பிறகு வாழ்வை வெறுத்த பத்திரை துறவு பூண்டு புத்த சமயம் சார்ந்த முத்தி பெறுகிறாள்.

'அறிவ தறிவார் அழுங்கார் உவவார்

உறுவது உறும் என்று உரைப்பது நன்று'

என இடுக்கண் வரும்போது அதனைத் தாங்கிக் கொள்ளும் மனப்பாண்மை வற்புறுத்தும் அழகு குறிப்பிடத்தக்கது.

**வளையாபதி**

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாக வைத்து எண்ணப்படும் வளையாபதி ஒரு காலத்தில் மிகவும் புகழோடு விளங்கியதென்பதை உரையாசிரியர் பலராலும் அது எடுத்தாளப்படுவதிலிருந்து அறியலாம். நாலடியாகவும், களடியாகவும் இரண்டடி வேறு எதுகை பெற்றும் வருவதால், வரிப்பாடல் போலவும் கலித்தளை போலவுமிருந்து வளர்ந்த யாப்புத் தன்மையை இதில் காணலாம்.

'செந்நெல் அங்கரும்பினோடு இகலும் தீஞ்சுவைக்

கன்னலங் கரும்புதன் கமுகைக் காய்ந்ளதமும்

இன்னவை காண்கிலன் என்று பூகமும்

முகில்களால் முகம்பு தைக்குமே'

நெல் கரும்புடன் போட்டியிட்டு அதனுயரம் வரை வளர்கிறது. கரும்பு கமுகைச் சினந்து மேலெழுந்து வளர்கிறது. இதைக் கண்ட கழுகு (பாக்கு மரம்) இதைப் பார்க்கக் கூசி, மேகத்தினூடே முகம் புதைக்கிறது! மேகத்தையும் எட்டிப் பிடித்துப் பாக்குமரம் வளர்கிறது என்பதைக் கூறும் கற்பனை நயம் இது. ஆசிரியர் பற்றி யாதும் தெரியவில்லை. வளையாபதி இதை வைசிக புராணத்தில் ஓரளவு கூறப்பட்டிருப்பதாகும்.

**ஐஞ்சிறுகாப்பியம்**

ஐம்பெருங்காப்பியம் என்று குறிப்பிடும் மரபிற்கு ஏற்ப ஐஞ்சிறு காப்பியம் எனக் குறிப்பிடும் மரபும் தமிழில் தோன்றியது. உதயணகுமார காவியம், நாக குமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி என்பன அவை. இவையனைத்தும் சமணக் காப்பியங்களாதல் குறிப்பிடத்தக்கது.

**உதயணகுமார காவியம்**

இ∴து உதயணன் கதையைக் கூறுகிறது. ஆயினும் இது பெருங்கதையினின்று வேறுபட்டதும் மிகப் பிற்பட்ட காலத்தில் எழுந்ததமாகும். ஆறு காண்டங்களும் 367 செய்யுட்களும் கொண்ட இந்நூல் காப்பிய அமைதி உடையதன்று எனக் கூறுவர்.

**நாககுமார காவியம்**

நூலாசிரியர் சமண சமயம் சார்ந்த துறவியாதல் வேண்டும் என்பதைத் தவிர வேறு குறிப்பெதுவும் கிடைக்கவில்லை.

**யசோதர காவியம்**

உயிர்க் கொலை தீதென்று நிலை நாட்டவும் கருமத்தின் பயனை வற்புறுத்தவும் நீதியைப் புகட்டவும் எழுந்த இச்சமண நூல் காப்பிய நலனில் அத்துணைச் சிறப்புடன் காணப்படவில்லை. சிலர் இதன் ஆசிரியர் பெயர். 'வெண்ணாவலுடையார்' என்று கூறுவர். உதயநாட்டுமன்னன் மாரிதத்தன் என்பவன். ஆவனிடம் உயிர்ப்பலி கூடாதென்று வற்புறுத்தற் பொருட்டு யசோதரன் என்பானின் பல பிறப்புக்கதை கூறப்படுகிறது. அசோகன் மகன் யசோதரன் அமிர்தபதி என்ற தன் தேவியுடன் அரியணை ஏறுகிறான். அரசி யானைப்பாகனின் பாடலைக் கேட்டு, இசையில் மயங்கிக் கள்ள உறவு கொள்கிறாள். தன் கணவனையும் மாமியையும் நஞ்சிட்ட சோறிட்டுக் கொல்கிறாள். இதன் காமத்தை மிகுவிக்கும் என்ற சமயக் கருத்தை விளக்க வந்ததே இக்காவியம் என்பர்.

**சூளாமணி**

இதுவும் ஒரு சமணக் காப்பியம். சிந்தாமணிக்கு அடுத்த நிலையில் போற்றப்படுவது. இதனைத் தோலாமொழித் தேவர் சிந்தாமணிக்குப் பிறகு இயற்றினார் என்பர். இது பன்னிரண்டு காண்டங்களையம் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களையும் உடையது. இது கதையும் ஸ்ரீபுராணம் எனப்படும் சமண மாபுராணத்தைத் தழுவியதென்பர். அங்கு இடம் பெறும் பலராமனும் கண்ணனும் போன்று இதில் திவிட்டன், விசயன் போன்ற இரு மன்னர்கள் இடம் பெறுகின்றனர். இவர்களின் பகைவனும் கஞ்சனைப் போன்றவனே ஆவான். திவிட்டன் விண்ணுலக மங்கை சுயம்பிரபையை மணம் செய்து கொள்கிறான். தமிழினிமை தழுவிய இக்காப்பியத்தில் சமண மதக் கருத்துக்கள். இடையிடையே விரவி வரக் காணலாம்.

**நீலகேசி**

இது 'நீலகேசித்தெருட்டு' எனவும் வழங்கும். இது குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்த வாதநூல். இயற்றியவர் பெயர் தெரியவில்லை. சமய திவாகர வாமன முனிவர் எழுதிய சிறந்த உரையொன்று இதற்கு உள்ளது. பத்துச் சுருக்கங்களையும் 895 செய்யுட்களையும் கொண்டது இந்நூல். இதனை வாமன தேவரின் உரையுடன் சக்கரவர்த்தி நயினார் பதிப்பித்துள்ளார்.

பாஞ்சால நாட்டில் உள்ள ஒரு நகருக்கு அருகே இடுகாடொன்றில் இடப்படும் உயிர்க் கொலையை முனிச்சந்திரர் என்ற சமண முனிவர் தம் தவ வலிமையால் தடுத்தார். அவரது தவத்தைக் கலைக்கம் பழையனூர் நீலிப்பேய் அரசி போல் தோற்றங்கொண்டு வந்தது. முயற்சியில் தோற்ற இவ்விளவரசி. பின்பு அவருக்கு மாணவியாகிச் சமண சமயத்தின் கொல்லாமை விரதத்தைப் பாரெங்கும் பரப்ப உறுதி கொண்டாள். அவள் பௌத்த சமயத் தலைவியான குண்டலகேசியையும், அர்த்த சுந்தரரையும் ஆசீவாக சாங்கியரையும் வாதில் வென்று அவர்களைச் சமணராக்கித் தான் சமணத் தலைவியாக ஆன கதை இது

சமணராக்கித் தான் சமணத் தலைவியாக ஆன கதை இது. நாட்டுவளம், நகர் வளம் பாடுவதில் இது சிறப்பு விளங்குகிறது.

கோடல், தோன்றி, காயா, முல்லை ஆகிய பூக்கள் மலரும் அழகிய காட்சியை நீலகேசி (கரிய கூந்தலை உடையவள்) என்று பொருள்படும். காப்பியப் புனைதிறனுடனும் சந்த இனிமையுடனும் வெளிப்படுத்தம் திறம் இது.

**கம்பராமாயணம்**

கம்பர் காலம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு என்பர். மற்றும் சிலர் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு என்றும் கூறுவர். கோசல நாட்டையும் வடநாட்டு மன்னர் பரம்பரையையும் பாராட்டும் நூலாயினும் சோழநாடு மற்றும் தமிழ்மன்னர்களின் ஈடும் எடுப்புமற்ற பெருமித நிலையின் சாயலையே நாம் கம்பனின் இராம கதையிற் காண்கிறோம். குதை என்றோ பெயர் சூட்டியிருக்க வேண்டும் என்பதைச் சிறப்புப் பாயிரம் உணர்த்துகிறது. வால்மீகியின் வடமொழிக் காப்பியத்தைக் கம்பர் அவ்வாறே மொழி பெயர்க்கவில்லை. அதன் சிறப்புக்களையெல்லாம் எடுத்துக் கொண்டு ஆழ்வார்களின் பக்தி பாசுரங்களையும் பின்பற்றித் தமிழரின் 'நாகரிகப் பண்பாட்டுக்கேற்பச் சிற்சில மாற்றங்களும் செய்து கொண்டு இந்நூலை யாத்துள்ளார்.

'கல்வியிற் பெரியவர் கம்பர்; கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும், கவிச்சக்கரவர்த்தி கம்பர். போன்ற தொடர்கள் அவர் பெருமையைப் பறைசாற்றுவன. கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று பாரதியார் பாராட்டுவதையும நோக்குக. இராமன் தனக்குப் பதவி கிடைக்கிறது என நயக்கவும் இல்லை. கிடைக்காத போது வெறுக்கவுமில்லை. இரண்டு நிலையிலும் அவன் முகம் செந்தாமரை போல் மலர்ந்தே விளங்கியது. சீதை அயலவன் நாட்டில் காவலில் இருந்த போதும் கற்பும் பொற்பும் விளங்கமாறு பொறுமையுடன் இராமன் வரவு நோக்கிக் காத்திருந்தாள்,. இதைக் கண்டு வந்த அனுமன் இராமனிடம் தன் சொல்லாற்றல் தோன்றச் சீதையை புகழ்ந்துரைத்தான்.

இக்காப்பியம் மனித உணர்வுகளின் சித்திரம், உயர்ந்த எண்ணங்களின் ஓவியம்; நிகரற்ற வாழ்க்கை அனுபவக் கருவூலம் வான்மீகியே இதனைப் படிக்க நேர்ந்தால், ஒரு புதுமையான காப்பியம் என்று போற்றுவாரே தவிர, தம் காப்பியத்தின் தழுவல் என ஒப்பார் எனலாம். இராமன் குகன், சுக்கிரீவன், வீடணன் மூவரையும் தன் தம்பிகளாகவே ஏற்றுக் கொண்டமை பற்றிக் கம்பர் தொடர்ந்து பாடிவரும் அழகு சமத்துவம்க் கோட்பாட்டிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். மிதிலைக் காட்சி, அங்கதன் அடைக்கலம், மாயாசகைப் படலும், தாரையின் விதவைக் கோலம், சீதையைப் பர்ண சாலையுடன் இராவணன் தூக்கிச் சென்றமை யாவும் வான்மீகத்தில் இல்லாமல் கம்பர் கதைச் சுவைக்காகவும், தமிழர் பண்பாட்டுச் சிறப்புக்காகவும் புகுத்தியன என்பர்.

'வன்மை இல்லை ஓர் வறுமை இன்மையில்

திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையில்

உண்மை இல்லை பொய் உரை இலாமையில்

ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்.'

எனவரும் பல பகுதிகள் கம்பரின் கற்பனைத் திறனை மட்டுமின்றிக் குறிக்கோள் நோக்கினையும் புலப்படுத்தும்.

**பெரிய புராணம்**

தொண்டர்சீர் பரவுவார் எனப்படும் சேக்கிழாரால் எழுதப்பட்டது. பெரிய புராணம் இதற்குத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெயருண்டு. இது பிறமொழிச் சார்பின்றித் தமிழ் நாட்டுக்கேயுரிய காப்பியமாக இடைக்காலத்தில் தோன்றியது. சுந்தரமூர்த்தி நாயனார் அறுபது நாயன்மார்களைப் பற்றித் திருத்தொண்டத் தொகை என்பதைப் பதினொரு பாடல்களாற் பாடினார். இவர் காலம் கி.பி.எட்டாம் நூற்றாண்டு பின்பு வந்த நம்பியாண்டாா நம்பி, 11-ஆம் நூற்றாண்டில், திருத்தொண்டத் தொகையில் குறிப்பிட்ட தொகையடியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாடல் விதம் 89 பாடல்களாக திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினாா. அதன் பிறகு பன்னிரண்டாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் அருண்மொழித் தேவர் என்ற சேக்கிழார் தோன்றி, அதனை விவரித்துப் பாடினார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் தாம் பாடிய பிள்ளைத் தமிழில் "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவன்" என்று இவரைச் சிறப்பித்துள்ளார். தமிழகத்தில் பல ஊர்களில் வாழ்ந்த சில இலங்களைச் சார்ந்த அடியார்களின் வரலாறு இது. அவை அனைத்தையும் அவரவர் இயல்பறிந்து, நேரிற்கண்டு கேட்டுப் பழகிய அனுபவ முதிர்ச்சியுடன் சேக்கிழார் பாடியுள்ளார். இறைவனே 'உலகெலாம்' என அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் தம் நூலைப் பாடினார் என்பர்.

நாயன்மார்களிடத்தில் சேக்கிழார் கொண்டிருந்த பக்தி அளவிடற்கரியது. அவர்களின் பெருமித வாழ்வை விளக்குமிடத்தில்,

'கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி

வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

எனச் சிறப்பாக எடுத்துரைக்கிறார். மேலும் இயற்கை வருணனையிலும் பிற புனைவுகளிலும் கூடப் பக்திச் சுவை வெளிப்படுத்தும் பாங்கு பெரிய புராணத்தில் உண்டு. நாயன்மார்கள் பாடிய பாடல்களுக்கான சூழ்நிலைகளை அப்பாடல்களுடன் வைத்துப் பின்னிக் கூறும் பாங்கும். கொலை முதலிய தீய சொற்களை வழுவியும் வாயாற் சொல்லாமல் கதை கூறும் திறமும் நினைத்து போற்றற்பாலன.

**கந்த புராணம்**

கச்சியப்ப சிவாச்சாரியாரால் எழுதப்பட்ட கந்த புராணம் ஆறு காண்டங்களையும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுள்களையும் கொண்டது. வடமொழியில் உள்ள சிவசங்கர சங்கிதையின் ஒரு பகுதியில் கூறப்படும் ஸ்கந்தனின் வரலாற்றை அது தமிழில் தருகிறது என்பர். இது சோழர் காலமி ஏற்றமுற்றிருந்த போது, சைவ சமயம் தழைத்தேங்கிய காலத்தில், அச்சமயவுண்மைகள் பல துலங்குமாறு எழுதப்பட்டது. கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சிபுரத்தில் ஆதி சைவ மரபில் தோன்றியவர். இவர் காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பர்.

**வில்லி பாரதம்**

கி.பி.17ம் நூற்றாண்டில் வில்லிபுத்தூராழ்வார் எழுதிய பாரதம் தோன்றிய பின் அதன் செல்வாக்கால் முன்னைய பாரதங்கள் வழிக் கொழிந்தன என்பர். இதற்கு வியாச பாரதமே 'முதனூல்' என்றும் 'அகத்தியபட்டர் எழுதிய பால பாரதம் முதனூல் என்றும் இரு கருத்துக்கள் உள. வியாச பாரதம் 18 சருக்கமும் நூறாயிரத்திற்கு மேற்பட்ட சுலோகங்களும் கொண்டது.

‘ஓரேனந் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்து

ஒருவன் அந்தப்

போரேனம் தனைத் தேடிக் கணங்களுடன் புறப்பட்டான்

புனங்கள் எல்லாம்’

வில்லிபுத்தூரார் வரம்பின்றி வடசொற்களைக் கலந்த சந்த இனிமை பொருந்தத் தம் நூலைப் பாடியுள்ளார். சொல்லணி, பொருளணிகள் மலிந்த இக்காப்பியம் 4300 பாடல்களைக் கொண்டது. தமிழகத்தில் பாரதக் கதையைத் திருவிழாக்களின் ஒரு மாதம் வரை கூட இரவு நேரங்களில் கூட்டத்தில் படித்து விளக்குவதுண்டு. அதனால் நல்லாப்பிள்ளை என்பார். கி.பி.18ம் நூற்றாண்டில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களை இதில் பாடிச் சேர்ந்தார். முருகப்ப உபாத்தியாயர் என்பவரும் இங்ஙனம் பல பாடல்களைப் பாடிப் பாரதத்தை மேன்மேலும் பெருக்கினார் எனக் கூறுவர்.

**நளவெண்பா-நளன் கதை**

முன்னைய இதிகாச புராணங்களில் காணப்பட்ட கிளைக் கதைகள் பல பிற்காலத்தில் தனிக் காப்பியங்களாயின அவ்வகையில் பாரதத்தில் இருந்து கிளைக்கதையான நளன் சரிதம். பிற்காலத்தில் தனி நூலாயிற்று. சிலப்பதிகாரத்தில் நளன் சரிதம் பற்றிய குறிப்பு ஊர்காண் காதையில் இடம் பெறுகிறது. கி.பி.13ம் நூற்றாண்டில் இறுதியில் வாழ்நதவராகிய புகழேந்திப் புலவர் வெண்பா யாப்பினால் நளன் சரிதையைப் பாடினார். தொண்டை நாட்டில் பொன் விளைந்த களத்தூரில் பிறந்த இப்பெரும் புலவர் மள்ளுவ நாட்டுச் சந்திரன் சுவர்க்கி என்ற மன்னனால் ஆதரிக்கப்பட்டவர். ‘வெண்பாவிற் புகழேந்தி’ என்றும் இவர் பாராட்டப் பெற்றார். நளவெண்பா மூன்று காண்டங்களையும் 424 வெண்பாக்களையும் கொண்டதாகும். நளதமயந்தியரின் இன்ப வாழ்க்கையைக் கூறவந்த புகழேந்திப் புலவர் சிறந்த உவமையமைத்துப் பாடுகிறார்.

‘ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி

இருவர் எனும் தோற்றம் இன்றிப்-பொருவெங்

கனற்கு ஏயும் வேலானும் காரிகையும் சேர்ந்தார்

புனற்கே புனல் கலந்தாற் போன்று’

செஞ்சிக் கலம்பகம் என்ற நூலும் இவரால் எழுதப்பட்டது. அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு மாலை, ஏணியேற்றம், பஞ்ச பாண்டவர் வனவாசம், இரத்தினச் சுருக்கம் போன்றவையாகும்.

**கிறித்தவக் காப்பியம்**

இத்தாலிய நாட்டுப் பாதிரியார் ஆகிய வீரமாமுனிவர் பல்வேறு கறைகளில் தமிழ்த் தொண்டாற்றிய அறிஞர் ஆவார். ஏசு பெருமானுடன் தொடர்புடைய சோசப்பின் வரலாற்றை அவர் 3615 பாடல்கள் கொண்ட தேம்பாவணிப் பெருங்காப்பியமாக எழுதியுள்ளார். சூசையப்பர் மேரியம்மையின் இல்லற வாழ்வைச் சிறப்பித்தும், துறவற வாழ்வின் மேம்பாட்டை விளக்கியும் இந்நூல் சுவை மல்கித் திகழ்கிறது. பாலத்தீன் நாட்டையும் செருசலேம் நகரையும் கூறுமிடத்தும், தமிழ்க்காப்பிய நாட்டுப் படலம், நகரப் படலங்களுக்குரிய புனைவு முறைகளையே ஆசிரியர் பின்பற்றுகிறார். தாம் பாடும் நாடும் நகரமும் பாலை நிலம்

சார்ந்தவை என்பதை முனிவர் மறந்து விடுகிறார். கம்பராமாயணம் போலவும் சிலப்பதிகாரம் போலவும் இசை துள்ளுகின்ற, கற்பனை வளம் நிறைந்த பாடல்களை இதிற் காணலாம். பாலத்தீன் பாட்டு இன்னிசை முழக்கங்கள் இவை

'காசி லம்புவ களித்த புள்ளினம்;

வீசி லம்புவ, மிடைந்த தும்பிகள்;

வீசி லம்புவ சிலம்பப் பண்;புகழ்

நாசி லம்புல, சிலம்பும் நாடெலாம்!'

எச்.ஏ.கிருஷ்ணப் பிள்ளை எழுதிய இரட்சணிய யாத்திரிகம் என்பதும் 3800 செய்யுள் கொண்ட காப்பியமாகும். சான் பனியனின் 'புனிதப் பயணியின் முன்னேற்றம்' எனும் நூலை அவர் தமிழ்ச் சுவையமைய, யமாகம் திரிபு முதலிய சொல்லணிகள் பொருந்தத் தமிழ்ப்படுத்தியுள்ளார்.

**இசுலாமியக் காப்பியம்**

தமிழ் மொழியில் எல்லாச் சமயங்களுக்கும் காப்பியங்கள் உள எனப் பாராட்டுவர். சமணத்திற்குச் சிந்தாமணி, பௌத்தத்திற்கு மணிமேகலை, சைவத்திற்குப் பெரிய புராணம், வைணவத்திற்குக் கம்பராமாயணம், இசுலாமியத்திற்குச் சீறாப்புராணம், கிறித்தவத்திற்கு தேம்பாவணி எனச் சுட்டிக் காட்டுவாகள். முதலில் சீதக்காதியாலும் பின்பு அபுல்காசிம் மறைக்காயராலும் போற்றப்பட்ட உமறுப்புலவர் 5027 பாடல் கொண்ட சீறாவை எழுதினார்.

சீறாப்புராணம் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றையும் போதனைகளையும் கூறுகிறது. செய்யத காதர் மரைக்காயர் என்பவரே செத்தும் கொடுத்த சீதக்காதி எனப் புகழப்படும் வள்ளலாவார். அவருடைய தூண்டு கோலாலும் உதவியாலுமே சீறா பாடத் தொடங்கப்பட்டது. அந்நூல் முடியுமுன் அவர் இறந்து விட்டார். படிக்காசுப் புலவரால் இச்சீதக்காதி வள்ளல் பாராட்டப்பட்டவர். சீறாப்புராணம் மூன்று காண்டங்களையும், தொண்ணூற்றிரண்டு படலங்களையும் கொண்டது. அரபுச் சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இசுலாமிச் சமய உண்மைகளும், நம்பிக்கைகளும் பற்றிய விரிவான நூலாயினும், சமரச நோக்கும் இதில் விளங்குவதை, இதன் கடவுள் வாழ்த்துப் பாடல் ஆகும்.

"திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்

தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த

மருவினும் மருவாய் அணுவினுக்கு அணுவாய்

மதித்திடாப் பேரொளி அனைத்தும்."

கம்பரும், தேவரும் தத்தம் காப்பியத்தில், தாம் எடுத்துக் கொண்டவை வேற்று நாட்டுக் கதைகளே யாயினும், அவற்றில் தமிழ் நாட்டுச் சாயலையும், தமிழ் மக்கள் சாயவினையும் கண்டு பாடினர். அதே மரபு வழியையே நாம் உமறு விடமும் வீரமாமுனிவரிடமும் காண்கிறோம்.

**பிற்காலத் தமிழ் காப்பியங்கள்**

ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம் போலவே கி.பி.17ம் நூற்றாண்டில் முதல் பல தமிழ்க் காப்பியங்கள் தோன்றியுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை கிறித்துவக் காப்பியங்கள்.

| **நூல்** | **ஆசிரியர்** |
|---|---|
| தேம்பாவணி | வீரமாமுனிவர் |
| இரட்சணிய யாத்திரிகம் | எச்.ஏ.கிருட்டினப் பிள்ளை |
| இயேசு காவியம் | கண்ணதாசன் |
| இயேசு மாகாவியம் | நிர்மலா சுரேஷ் |

இசுலாமியக் காப்பியங்கள்

| | |
|---|---|
| சீறாப் புராணம் | உமறுப்புலவர் |
| குத்பு நாயகம் புராணம் | முகியித்தீன் சேகணாப்புலவர் |

இராமாயணக் காப்பியங்கள்

| | |
|---|---|
| இரகுவம்சம் | அரசகேசரி |
| இராவண காவியம் | புலவர் குழந்தை |
| இராமாயண வெண்பா | சுப்பிரமணிய ஐயர் |

பிற்காலப் பிற காப்பியங்கள்

| | |
|---|---|
| மருமக்கள் வழி மான்மியம் | கவிமணி தேசிய விநாயகம் |
| பாண்டியன் பரிசு | பாரதிதாசன் |
| பூங்கொடி | முடியரசன் |
| செந்நீரோவியம் | பண்ணன் |
| பாரத சக்தி மகாகாவியம் | சுந்தானந்த பாரதியார் |
| உதயம் | கலைவாணான் |

இவ்வாறு பிற்காலத்தில் தோன்றிய தமிழ்க் காப்பியங்கள் வகைகளை உள்ளடக்கியுள்ளதாகும்.

**வினாக்கள்**

1.காப்பிய இலக்கியங்களின் காலத்தை விளக்குக?

2.இரட்டைக் காப்பியங்கள் என்றால் என்ன?

3.ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் சிறு குறிப்பு தருக?

4.பிற்கால காப்பியங்களை தொகுத்த எழுதுக?

5.இசுலாமிய காப்பியங்களின் குறிப்பு வரைக?

## அலகு-3
## பக்தி இலக்கியமும், தமிழ் வளர்ச்சியும்

### பக்தி இலக்கியம்

ஆங்கிலம் வணிகத்தின் மொழி : இலத்தின் கூட்டத்தின் மொழி கிரேக்கம் இசையின் மொழி, செருமன் தத்துவத்தின் மொழி, பிரெஞ்சு நூலின் மொழி, இத்தாலி காதலின் மொழி, என்று கூறுவது பொருந்தும் எனின் தமிழ் பக்தியின் மொழி, என்று கூறுவதும் பொருந்தும் என்று தனிநாயக அடிகளார் தெளிவுபடுத்துகின்றார். களப்பிரர் காலத்திற்கு பிறகு சோழர் ஆட்சியல் கி.பி. 7, 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் 'ஆலயப்பணியே ஆண்டவன் பணி' என்னும் சிந்தனை வேரூன்றியது. சங்க இலக்கியங்கள் மன்னரையும் பாடின பக்தி இலக்கியங்கள் இறைவனையும் இறையடியாரையும் சிறப்பித்தன. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் (திரு)நீறில்லாத நெற்றி பாழ் என்னும் எண்ணம் மக்கள் மனத்தில் ஊன்றப்பட்டது. நாடெங்கும் கோயில்கள் எழுப்பப்பட்டன. இயற்றப்பட்ட இலக்கிய வகைமைகள் அனைத்தும் சைவ சமயச் சார்புடையவளாகத் திகழ்ந்தன. இதன் விளைவாகவே சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்தவம், இஸ்லாம்.. போன்ற பல சமயங்கள் தமிழில் தோன்றின. சமங்களின் தோற்றத்தின் காரணமாக, அதனைப் பின் தொடர்ந்து பல சமயத்தமிழ் இலக்கியங்களும் வெகுவகை தமிழில் தோற்றம் பெற்றன.

### தமிழ் வளர்ச்சி

பக்தி இயக்கத் தோற்றத்தின் வாயிலாக, பல தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இவ்விலக்கியங்களை இரண்டு வகையாகப் பகுக்கலாம். 1.சமயம் சார்ந்த இலக்கியங்கள், 2.சமயம் சாரா இலக்கியங்கள்

### சமயம் சார் இலக்கியங்கள்

சைவ, வைணவத்தில் அதிகமான சமயம் சார்ந்த தமிழ் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. காப்பியங்கள், சிற்றியலக்கியங்கள், பிள்ளைத்தமிழ், உலா, மடல், திருமுறைகள், எனக் கூறலாம். கம்பராமாயணம், மகாபாரதம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் கிறித்தவக் காப்பியங்கள், இஸ்லாமியப் படைப்புகள், பௌத்த இலக்கியங்கள் சமணக் காட்டியங்கள், எனப் பலத்தோற்றம் பெற்றன.

### சமயம் சாரா இலக்கியங்கள்

தங்களின் சமயம் சாராமலும், பல தமிழ்க்காப்பியங்கள், இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் எனச் சமயப் பெரியோர்களால் தோற்றம் பெற்று, தமிழ்மொழி மாபெரும் வளர்ச்சியை பக்தியும், சமயமும் ஒரு காரணமாக அமைந்தன எனில் அது மிகையாகாது.

### பௌத்தமும் தமிழும்

புத்தமதக் கருத்துக்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. மதுரைக் காஞ்சியில் புத்த சமண மதப்பள்ளிகள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. போதிதர்மர் சீனம் சென்று பௌத்த சமயத்தை வளர்த்தார். வடக்கேயிருந்து தென்னகத்தில் பரவிய பௌத்தம் தமிழகம் வழியாக ஈழத்திற்குச் சென்று பரவியது.

### பௌத்த பக்தி இலக்கியங்கள்

பௌத்த சமயப் பரப்புதலின் பொருட்டு பௌத்தர்கள் பக்தி தொடர்பான பல நூல்களைத் தமிழில் எழுதியுள்ளனர். அவற்றை,

1. மணிமேகலை
2. குண்டலகேசி
3. விம்பிசாராக்கதை
4. அபிதர்மாவதாரம்
5. திருப்பதிகம்
6. சித்தாந்தத் தொகை

மணிமேகலை ஒப்பற்ற புத்தமதத் தமிழ் காப்பியம் தம்மபதக் கருத்துக்கள் பலவற்றை அழகிய தமிழில் மொழி பெயர்த்துத் தருகிறது. இக்காப்பியம் தமிழர்கள் எத்தனை அளவு புத்தமத அறிவும் உணர்வும் பெற்றிருந்தனர் என்பதை இந்நூலால் அறியலாம்.

குண்டலகேசி புத்தமதச் சார்பான விவாதங்களைத் தரும் காப்பியம் விம்பிசாரகதை காரியப்பாவால்கனது. ஒரே ஒரு செய்யுளே கிடைத்தள்ளது. சித்தாந்தத் தொகை சமய விளக்க நூல். துதி நூலாகிய திருப்பதிக்கத்தில் ஓரிரு பாடல்களே கிடைக்கின்றன. புத்தமித்திரனாரின் வீரசோழியம் ஓர் ஐந்திலக்கண நூல் புத்ததத்தார் எழுதிய அபிதம்மாவதாரம் பற்றியும் கேள்விப்பட்டுகிறோம் கவிமணி எழுதிய ஆசிய ஜோதி புத்தமத உண்மைகளை எளிய நடையில் கூறுகிறது.

**பிற பௌத்த இலக்கியங்கள்**

இளம்போதியார் என்பவர் நற்றிணையின் 72ம் பாடலான ‘பேணுப்பேணார் பெரியார் என்னும் பாடலை எழுதியுள்ளார். இவரது பெயர் கொண்டு இவர் பௌத்த சமயத்தவர் என இனங்காணப்படுகிறார்.

**பௌத்த இலக்கணங்கள்**

14 ஆம் நூற்றாண்டில் வீரசோழியம் என்னும் ஐந்திலக்கண நூலைப் புத்தமித்தரனார் எழுதியுள்ளார். இரவது மாணவர் பெருந்தேவன் என்பவர் உரை எழுதியுள்ளார். வீரசோழன் பெயரால் வீரசோழியம் என அழைக்கப்படுகிறது. சோழமன்னர்களின் வெற்றி வரலாறுகள் இந்நூலின் மூலம் அறியலாகிறது. வீரசோழியக் காரிகை வீரசோழியத்தின் எதிர்நூலாகக் காணப்படுகிறது.

**பௌத்த உரைகள்**

கி.பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் புத்தத்ததர். அக்காலத்து எழுந்த பாலிமொழி பௌத்த நூல்கள் பலவற்றிற்கு உரைகள் பல எழுதினார். புத்த சமயக் கொள்கைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

புத்த சமயத்திற்கு சமண வைதீக சமயங்களின் இருமுனைத் தாக்குதல் தொடர்ந்து இருந்து வந்தது.

பௌத்தர்கள் தமது சமயப்பரப்புதலை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

பௌத்த சமயப் பரப்புதலுக்கு ஏதுவாக சமய நூல்களை மட்டுமே இயற்றினர்.

இக்காரணங்களால் புத்த சமயம் கொஞ்சம் கொஞ்சமாக நலிவுற்றது. பௌத்த சமய எதிர்ப்பாளர்களால் புத்த சமய நூல்கள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அறிஞர் கருத்து.

**சமணமும் தமிழும்**

கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரிய மன்னன் காலத்தில் வட இந்தியாவில் சமணம் தோன்றியது. பத்திரபாகு என்னும் முனிவர் மூலம் சமணம் தமிழகத்தில் நுழைந்தது. மெல்ல மெல்ல சமணர்கள் அரசியல் செல்வாக்கில் செழித்தனர்.

**1. சமண பக்தி இலக்கியங்கள்**

1. இராமாயணம், 2. சிற்றிலக்கியங்கள் 3. புராணங்கள், 4. சித்தாந்த நூல்கள், 5. பெருங்காப்பியங்கள், 6. உரைநடைநூல்கள், 7. சிறுகாப்பியங்கள் என 7 வகைமைகளாகப் பகுக்கலாம்.

சங்க கால உலோச்சரனார் சமணர் எனக் கருதுவர். கணியன் என்ற சொல் சமணரைக் குறிக்கும் என்பார். நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனாரும் சமணரே அகப்புறப் பாடல்களில் ஒரு சிலவற்றில் சமண சமயக் கருத்துக்கள் உள தொல்காப்பியரையும் திருவள்ளுவரையும் இளங்கோவடிகளையும் சமணர் என்று ஒரு சில அறிஞர்கள் விவாதிக்கின்றனர். பெருங்கதையும், சிந்தாமணியும், வளையாபதியும் ஐஞ்சிறு காப்பியங்களும் சமணக் காப்பியங்களாகும்.

**பிறசமண இலக்கியங்கள்**

**1. சமண சங்க இலக்கியங்கள்**

1. சங்க இலக்கியத்துள், நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் என்னும் சமணப் புலவர் நற்றிணையில் 383 ஆம் பாடல் பாடியுள்ளார்.

2. உலோச்சனார் என்னும் புலவர் 35 சங்கப் பாடல்களைக் பாடியுள்ளார். உலோச்சனம் மயிரை வேரொடு பிடுங்குதல் சணமத் துறவியாகும் போது உலோச்சனம் செய்தது சமணம்.

**சமண நீதி நூல்கள்**

1. நாலடியார், 2. சிறுபஞ்சமூலம், 3.பழமொழி, 4. ஏலாதி இது மட்டுமில்லாமல் சமணர் நூல்களாக திரிகடுகம், இனியவை நாற்பது, திணைமாலை நூற்றைம்பது. நான்மணிக் கடிகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் காணலாம். மனிதர்களுக்கு தேவையான அளக்கருத்துகளையும், நோய்களை குணப்படுத்தும் மருத்துவ முறைகளையும் குறிப்பிடும் வகையில் அமைகின்றது.

புகழ் வாய்ந்த இலக்கண நூல்களை சமணர்கள் படைத்துள்ளார். அவற்றுள் அவிநயம், யாப்பருங்காலம் யாப்பருங்கலன் காரிகை, நேமிநாதம், வச்சணந்தி மாலை, நன்னூல், நம்பியகப் பெருமாள் போன்றவையாகும். ‘காரிகை கற்றுக் கவிபாடுவதை விட பேரிகை கொட்டிப் பிழைப்பதே மேல்’ என்பது யாப்பருங்கலக் காரிணையில் ஒட்டி காணப்படும் பழமொழி.

வச்சணந்திமாலை இந்திரகாளியம் என்னும் நூலின் வழிநூல் வெண்பாப் பாட்டியல் என்னும் பெயரும் இதற்கு உண்டு.

**சமண நிகண்டுகள்:**

செய்யுள் வடிவில் ஆனது. தொல்காப்பிய உரியியல் மரபியல்களின் வளர்ச்சி பெற்ற வடிவம் நிகண்டு எனபலாம். நிகண்டு 12 தொகுதிகளைக் கொண்டது. மொழியில் காணப்படும் அரிய சொற்களையும் வரையறுத்துப் பொருள் கூறுவது நிகண்டு. நிகண்டில் உள்ள 11 ஆம் தொகுதியான சொல் விளக்கப்பகுதியின் உரை நடை வடிவமே அகராதி எனலாம்.

‘இனிமையும், நீர்மையும் தமிழ் எனலாகும் எனத் ‘தமிழ்’ என்னும் சொல்லுக்கு விளக்கம் தந்து புகழ்கொண்டது இந்நிகண்டு. ‘சலாம்’ என்ற இசுலாமியச் சொல்லும் சேர்த்து விளக்கப்பட்டுள்ளது.

**சமண உரையாசிரியர்கள்**

சமண உரையாரிசிரியர்கள் பவர் அவருள் நச்சினார்கிகினியர், இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், மயிலைநாதர், குணசாகரர், காளிங்கர், வாமனமுனிவர், பதுமனார் முதலானோர் குறிப்பிடத்தக்கோர்.

| **உரையாசிரியர்கள்** | **உரை செய்த நூல்** |
|---|---|
| 1. நச்சினார்கினியர் | தொல் எழுத்ததிகாரத்திற்குதொல்பொருள் |
| 2. இளம்பூரணர் | தொல் பொருள் |
| 3. அடியார்க்கு நல்லார் | சிலப்பதிகாரம் |

| | |
|---|---|
| 4. மயிலைநாதர் | நன்னூல் முதல் உரை |
| 5. குணராகரர் | யாப்பெருங்கலங்காரிகை |
| 6. காரிங்கர் | திருக்குறள் |
| 7. வாமனமுனிவர் | நீலகேசி |

**மொழி பெயர்ப்பு நூல்**

அருங்கலச் செப்பு சமணர் செய்த மொழி பெயர்ப்பு நூல் ஆகும். வடமொழியில் சமந்திர பத்ரா சாரியார் செய்த இரத்தின கரண்டகத்தின் மொழி பெயர்ப்பு அருங்கலச் செப்பு.

**பிறசமண நூல்கள்**

நெல்லிலக்க வாய்பாடு சிறுகுமு வாய்பாடு என்னும் நூல்கள் கணிதம் தொடர்பானவை. சினேந்திரன் மாலை சோதிட நீதி என்பன சோதிட நூல்கள்.

இத்துணைத் தமிழ்ப்புலமை வாய்ந்த சமணர்கள் தமிழில் தொடாத துறைகள் இல்லை எனலாம் சுடு பாறையில் இடத்தல், குகைகளில் வாழ்தல், உண்ணா நோன்பிலிருந்து உயிர் துறத்தல்.

**சைவமும் தமிழும்:**

ஆங்கிலம் வணிகத்தின் மொழி இலத்தின் சட்டத்தின மொழி கிரேக்கம் இசையின் மொழி செருமன் தத்துவத்தின் மொழி பிரெஞ்சு தூதின் மொழி. இத்தாலி காதலின் மொழி என்று கூறுவது பொருந்தும் எனின் தமிழ் பக்தியின் மொழி என்று கூறுவதும் பொருந்தும் என்று தனிநாயக அடிகளார் தெளிவுபடுத்துகின்றார்.

க. சைவத் திருமறை நூல்கள்
கா. சைவ சாத்திர நூல்கள்
கி. சைவ பக்தி நூல்கள்
கீ. சைவ மடங்களின் தமிழ்ப்பணி

**சைவத் திருமறை நூல்கள்**

முறை-நூல் திருமுறை - திருநூல்கள், இறைவனைப் பற்றி சைவ அடியார்கள் பாடியுள்ள திருநூல்கள் ‘திருமறை’ என வழங்கப்படுகின்றன. மொத்தம் பன்னிரண்டு திருமுறைகள் உள்ளன.

**திருஞான சம்பந்தர் : (1, 2, 3, திருமுறைகள்)**

இயற்பெயர் ஆளுடையபிள்ளை மூன்று வயதில் குளக்கரையில் இவரை அமரச் செய்து விட்டு இவர் தந்தை சிவபாத இருதயர் நீராடச் சென்றார். பசியால் அமுத பிள்ளைக்கு உமையம்மையே நேரில் வந்து பொற்கிண்ணத்தில் ‘ஞானப்பால்’ ஊட்டினார்.

‘தோடுடைய செவியன் விடையேறி
ஓர் நூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளம் கவர் கள்வன்

திருஞானசம்பந்தரின் அனைத்துப் பதிகங்களிலும் எட்டாவது பாடல் இராவணன் கயிலை மலையை எடுத்துத் துன்புற்றதையும், ஒன்பதாவது பாடல் மாலும் அயனும் காண இயலாத சிவபெருமானின் பெருமையையும், பத்தாவது பாடல் சமண பௌத்த சமயங்கள் துன்பம் தரும் தீங்கினை உடையன என்றும் பாடும் பாங்கினைக் கொண்டுள்ளன.

**திருநாவுக்கரசர் (4, 5, 6 ஆம் திருமுறை)**

இயற்பெயர் மருள் நீக்கியார் பெற்றோர் 'அற்ற' இவரைத் தமக்கை திலகவதியார் வளர்த்தார். வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன் அடியேன் என்று திருவதிகை விரட்டாமை இறைவனிடம் கண்ணீரோடு வேண்டினார். என் கடன் பணி செய்து கிடைப்பதே என்னும் கொள்கையில் நின்று உழவாரப்பணி மேற்கொண்டார்.

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கு இளவேனிலும்
மூசு வண்டறை பொய் கையும் போன்றறே
ஈசன் எந்தை இணையடி நிழவே''

**சுந்தரர்**

இயற்பெயர் ஆருரர். அழகில் மயங்கிய நாசிங்க் முனையரையர் என்னும் மகனாக வளர்ந்தார். கணிணயர் குலத்துப் பரவையார் மீது காதல் கொண்டார். இவரது காதலுக்குச் சிவபெருமானே பாலமாக இருக்க உதவி புரிந்தார். இதனை,

'பரவை என்னும் என் காதலிக்கும் எனக்கும்
பற்றாக உள்ள பெருமானே'

தன்னை அடிமை என்று கூறிய இறைவனைப் பித்தர் எனக் கோபித்துப் பேசினார். இறைவன் சுந்தரைப் கட்கொண்டபின் 'பித்தர்' எனத் தொடங்கிப்பாடுமாறு பணித்தார். சுந்தரரும்

'பித்தாபிறை சூபி! பெருமானே அருளாளா
எத்தாநன்மறவாதே நினைக்கிறேன் மனத்து உன்னன'

**மாணிக்கவாசகர் 18 ஆம் திருமுறை**

கி.பி.9 ஆம் நூற்றாண்டினர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்த தென்னவன் பிரம்மராயன் என்னும் பட்டம் பெற்றார்.

திருவாசகம் திருக்கோவையார்.

திருவாசகத்தில் தும்பி ஊதுதல் பொற்சுண்ணம் இடித்தல், தெள்ளேணம் கொட்டுதல், அம்மானை ஆடல், ஊரலாடல் முதலியன நாட்டுப்புற விளையாடல்கள் ஆகும்.

திருக்கோவையார் 'பானவ பாடிய வாயால் கோவை பாடுக என இறைவன் கேட்டுக்கொண்டார். எனவே மாணிக்கவாசகர் திருக்கோவையார் பாடினார் என்பர். கோவைச் சிற்றிலக்கியங்களில் மூத்தது இந்நூல் திருச்சிற்றம்பலக் கோவை எனவும்படும்.

'பல்கால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார்
மூன்றிலும் முழங்கும்'
என்று இலக்கிணத் கொத:து இயம்புகின்றது.

9ம் திருமுறை ஒன்பதின்மர் பாடியன

1. திருமாளிகைத்தேவர்
2. கருவூர்த்தேவர்
3. சேந்தனார்
4. பூந்துருத்திகாடவநம்பி
5. கண்டராதித்தர்

6. வேணாட்டடிகள்
7. திருவாலி அமுதனார்
8. புருடோத்தம நம்பி
9. சேதிராயர்

**10ஆம் திருமுறை: திருமூலர்**

வடநாட்டுயோகி, திருத்தலங்களைத் தரிசித்து வரும்பொழுது திருவாவாடுதுறைக்கு அருகிலுள்ள சாத்தனூருக்கு வந்தார். கூடுவிட்டுக் கூடு பாயும் அட்டமாசித்திகளும் அறிந்த யோகியாதலால் மூலன் உடலின் புகுந்து ஒரு ஆடு,மாடுகளைக் கொண்டு வந்து ஊர்சேர்ந்தார். திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. எளிமையும், இனிமையும் ஆழமும் நிறைந்த பாடல்கள் நிலையாமை, உண்மைகள், கள்ளுண்ணாமை முதலான வாழ்வியல் அறங்கள்.

'உடம்பார் அழியின் உயிநார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்ந்தேன் உயிர் வளர்த்தேனே'

11 ஆம் திருமுறை – பன்னிருவர் பாடியன
1. திருவாலவாயுடையர்
2. காணுக்கால் அம்மையார்
3. கல்லாடதேவ நாயனார்
4. நக்கீரதேவ நாயனார்
5. கபிலதேவ நாயனார்
6. பரணதேவ நாயனார்
7. சுதிராசுடிகள்
8. எம்பெருமான் அடிகள்
9. ஐயடிகள் காடவர் கோன்
10. சேரமான் பெருமாள் நாயனார்
11. பட்டினத்தடிகள்
12. நம்பியாண்டவர் நம்பிகள்

பரமதத்தன் புனிதவதி இறைவன் மீது கொண்ட அன்பின் காரணமாக அவளை விட்டு, வேறு ஒருத்தியுடன் வாழ்ந்தான். எனவே புனிதவதி இறைவனிடம் பேயுரு கொண்டார். 'கயிலை மீது தனலயாலேயே நடந்து சென்றார். இறைவனை அம்மையே என அழைக்கப்பட்டார். காரைக்கால் அம்மையார் 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்' பாடினார்.

**சேக்கிழார் - 12 கம் திருமுறை**

தமிழ் உயிர் எழுத:து 12. இதைப் போல சைவத்தின் உயிர் நூல்கள் 12 திருமுறைகள். பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக வைத்து எண்ணப்படுகிறது.

'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்'

என்று சேக்கிழார் பாடினார் இப்பாடல் பெரியபுராணத்தின் முதல் பாடலாக அமைந்துள்ளது.

**சைவ சாத்திர நூல்கள்**

சைவ சித்தாங்களை உணர்த்தும் 14 நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும் இதனை,

'உந்தி, களிறு, உயர்போதம், பித்தியார்

பிந்திருபா, உண்மை, பிரகாசம் - வந்த அருள்
பண்புவினா போற்றி, கொடி, பாசமிலா நெஞ்சுவடு
உண்மை நெறி, சங்கற்பம் உற்று'

என்னும் பாடல் வரிசைப்படுத்தும்

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞான போதம்
4. சிவஞான சித்தியார்
5. இருபா இருப.்.து
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பன்
9. வினாவெண்பா
10. போற்றிப்ப.்.றாடை வெண்பா
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மை நெறி விளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

போன்ற நூல்கள் ஆகும். இவற்றில் உண்மை நெறி விளக்கம் என்ற நூலில் மெய், வாய், கண், மூக்கு, செவி, சுவை, மொழி, கை போன்றவர்கள் விளக்கங்களுடன் கூறுகின்றன.

**சைவ பக்தி இலக்கியப் புலவர்கள்**

சைவப் புலவர்கள் தமிழைக் கருவியாகக் கொண்டு பக்தி நூல்கள் பலஎழுதியுள்ளனர். அவை காலம்பகம், பிள்ளைத்தமிழ் உலா, சுந்தாதி இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, முதலான பல சிற்றிலக்கிய வகைமைகளின் வளர்ச்சிக்கு துணை நின்றன. கி.பி. 15, 16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த குறிப்பிடத்தக புலவர்கள் வளர்த்த சைவபக்தி இலக்கியங்களை இப்பகுதி கூறுகின்றது.

'ஏறுமயில் ஏறிவிளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞான மொழி பேசமுகம் ஒன்றே'

எனப் பல புலவர்கள் நூல்களை இயற்றியுள்ளார்.

இரட்டைப் புலவர்கள் ஒருவர் முடவர், மற்றொருவர் குருடர், குருடரின் தோள் மீது முடவர் அமர்ந்து கொள்வர். முடவர் வழி சொல்லுவார். பாடுவதிலும் ஒருவர் பாதிப்பாட்டைப் பாட மற்றவர் மீதிப்பாட்டைப்ப ாட வல்லவராக இருந்தனர். இவர் தம் பெயர்கள் 'இளஞ்சூரியர், முதுசூரியர் இவரது ஒற்றுமை கருதி இரட்டைப் புலவர்கள், எனப்பட்டனர். புரந்தவள்ளல், கொங்கு மன்னன் பரபதி ஆட்கொண்டான்.

தில்லைக்கலம்பகம், திருவாமாத்துர்க்கலம்பகம், கச்சிக்கலம்பகம், மாதைக் கலம்பகம் முதலான பல கலம்பகங்களைப் பாடியுள்ளார். கணயாய் கலம்பகத்திற்கு இரட்டையர்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றனர்.

**பிறசைவப்புலவர்கள்**

காளமேகப் புலவர், குமரகுருபரர், துறைமங்கலம் சிவப்பிரகாசின் சைவ எல்லப்ப நாவலார். அந்தக்கவி வீரராகவ முதலியார், படிக்காசுப்புலவர், திரிகூடராசப்பக் கவிராயர், தாயுமானவ சுவாமிகள்.. எனப்பலர் சைவத்தைத் திளைக்கச் செய்து, தமிழ் சைவ நூல்கள் பல இமயற்றியோர் ஆவர்.

**சைவமடங்களின் தமிழ்ப்பணி**

சைவத்திருமுறைகள், சரித்திர நூல்கள் பக்தி இலக்கியங்கள் மட்டுமின்றி சைவமடங்களும் தமிழைக்கட்டிக்காப்பதிலும் தமிழை வளர்ப்பதிலும் பெருந்துணை புரிந்துள்ளன. அவைகளாவன. 1.தருமபுர ஆதினம், 2. திருவாவடுதுறை ஆதினம், திருப்பனந்தாள் காசிமடம், போன்ற மடங்குளும் சைவ நுல்களை எழுதியும், வெளியிட்டும் தமிழ்ப்பணி புரிந்து வருகின்றனர்.

**வைணமும் தமிழும்**

திருமாலைச் சமயக் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் எனப்படும். வைணவ சமயத்து இறை அடியார்கள் பன்னிருவரும் ஆழ்வார்கள் எனப்படுவர் திருமாலின் அருளில் அன்பில் ஆழ்ந்து தம்மை மறந்தவர்களே ஆழ்வார்கள் என வழங்கப்பட்டனர். திருமால் வழிபாடு தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியம், பதினென்கீழ்க்கணக்கு நூல்கள், கம்பராமாயணம், வில்லிபாரதம் எனப்பல நூல்களில் தொன்றுதொட்டு காணப்படுகிறது.

**இலக்கியங்களில் வைணவம்**

**அ. தொல்காப்பியத்தில் வைணவம்**

தொல்காப்பியத்தில் நானிலங்களும் அவற்றிற்கு உரிய தெய்வங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. முல்லை நிலத்தைக் குறிப்பிடும் பொழுது

‘மாயோன் மேய காடுறை உலகம்’

‘மாயோன் மேய மன்பெரும் சிறப்பில்
தாவா விழுப்புகழ் பூவை நிலையும்’

எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். (மேய மேசிய பொருந்திய) காடுகள் செறிந்த முல்லை நிலத்தின் கடவுள் மாயோனாகிய திருமால் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. சங்கஇலக்கியங்களில் வைணவம்**

சங்க இலக்கியங்களில் முல்லைக்கனி, மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பெரும்பானாற்றுப்படை, பரிபாடல் ஆகிய நூல்களில் திருமாலைப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன.

**இ. சிலம்பில் வைணம்**

சிலப்பதிகாரத்தில் ‘ஆய்ச்சியர் குரவையில்’ மாயவன்குழல் ஊதும் சிறப்பு கூறப்பட்டுள்ளது. அதுவும் தொன்மை வாய்ந்த வடிவமான ‘நாட்டுப்புறப்பாடல் வடிவத்தில்’ திருமாலின் சிறப்பினை வைத்துப் பாடுவதன் மூலம் வைணவத்தின் மக்கள் செல்வாக்கினை இளங்கோடிகள் புலப்படுத்துகின்றார்.

**ஈ. பதினெண்கீழ்கணக்கு நூல்களில் வைணவம்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ‘நான்மணிக்கடிகை, திரிகடுகம், கார்நாற்பது, களவழி நாற்பது ஆகிய நூல்களில் வைவண சமயப் புலவேரரால் இயற்றப்பட்டன. இதன்மூலம் வைணவ சமயப் புலவர்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் வாயிலாகவும் வைணவக் கருத்துக்களை ஆங்காங்கு கூறியுள்ளனர் என்பது புலனாகும்.

**ஊ. கம்பராமாயணத்தில் வைணவம்**

கம்பராமாயண ‘பாலகாண்டத்தின் தொடக்கத்தில் உள்ள பாடல் வைணவ சமயத்தத்துவத்தை விளக்குகிறது.

‘உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைய ஒத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி வாவிளை யாட்டுரை யாரவர்

தலைவர் அன்னவர்க் கேசரன் நாங்களே'

என்னும் பாடல் முழுமையும் வைணத்துவம் நிரம்பியுள்ளது. திருமால் தான் உலகைப்படைத்தார். அவர் தான் உலகத்தில் உள்ள பொருள்களின் உள்ளுக்குள்ளே இருக்கிறார். அவர்தான் அவற்றை அழிக்கிறார் என்பது வைணவத் தத்துவத்தின் உயிர்நாடி.

**ஊ) வில்லிபாரத்தின் வைணவம்**

'பாண்டிடவர்க்கத் துணையாகக் கண்ணன்' இருப்பதனை வில்லிபாரதம் கூறுகிறது. நல்லவர்க்குத் துணையாக இறையாற்றல் விளங்கும் என்பதனையே இது எடுத்துக்காட்டுகின்றது. இவற்றின் மூலம் இலக்கியங்களில் வைணவம் இழையோடுவதனை அறியலாம்.

**வைணவ ஆழ்வார்கள் பன்னிருவர்**

**அ) பொய்கையாழ்வார் : (கி.பி. 6(அ) 8 ஆம் நூற்)**

காஞ்சிபுரத்தின் திருவெ.்.கா கன்னும் இடத்தில் உள்ள தாமரைப் பொய்கை'யில் தோன்றியமையால் பொய்கையாழ்வார் எனப்படுகிறார். திருமாலின் சங்காகிய 'பாஞ்சசன்னியத்தின் அவதாரம் இவர் பாடிய பிரபந்தம் முதல் திருவந்தாதியாக அமைகிறது. 100 பாடல்கள் ஆனது.

**ஆ) பூதத்தாழ்வார் (கி.பி.ம (அ) 8ம் நூற்)**

'மாமல்லபுரம்' எனப்படும் திருக்கடல் மல்லையில் குருக்கத்தி (மாதவி) மலரில் தோன்றினார் என்பர். கதாயுத்தின் அவதாரம் 'பூதம்' என்னும் சொல்லைப் பாடல்களில் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளதால் இப்பெயர் பெற்றார். இவர் பாடிய பிரபந்தம் இரண்டாம் திருவந்தாதியாக அமைகிறது.

**இ) பேயாழ்வார்**

சென்னை மயிலாப்பூரில் செவ்வல்லிப்பூவில் பிறந்தார். திருமாலின் 'நந்தகம்' என்னும் வாளின் அம்சம் பக்திப்பரவசத்தில் மெய்மறந்து ஆடிப்பாடித் துள்ளிக் குதித்தபடி இருந்ததால் பேயாழ்வார் எனப்பட்டார் இவர் பாடிய 100 பாடல்கள் மூன்றாம் திருவந்தாதி எனப்படுகிறது.

**ஈ) திருமிழை ஆழ்வார் (கி.பி.7 ஆம் நூற்)**

சொந்த ஊர் தொண்டை நாட்டில் உள்ள திருமழிசை இவருக்குப் 'பக்திசாரர்' என்னும் பெயரும் உண்டு 'நாராயணனைப் பாடும் வாயால்' நரனைப் பாடேன் என்றவர். குமரகுருபரர் தனது பாடலில், 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே'' எனத் திருமபுரிசை ஆழ்வாரைப் புகழ்கின்றார்.

**உ) நம்மாழ்வார் கி.பி. 9 ஆம் நூற்**

ஊர் ஆழ்வார் திருநகரி என்னும் தீருக்குருகூர் இவர் தந்தை மாறன் காரி, பரந்தன் நெடுஞ்கடையனின் அமைச்சர் நம்மாழ்வார் குழந்தையாய் இருந்தபோது இவரது பெற்றோர் இவரைப் பெருமாள் கோயிலில் இறக்கிவிட்டனர். நம்மாழ்வர் தவழ்ந்து சென்று 'புளியமரத்தடியில் பதுமாசனம்' இட்டு யோகத்தில் அமர்ந்தார் என்பர். அந்தப் புளியமரத்தை ஆதிடேனின் அவதாரம் என்பர். வைணவர் இன்னும் அப்புளியமரத்தை 'திருப்புளி ஆழ்வார்' என்பர். குழந்தை முதலே யோகத்தில் இருந்த இவர் அசைவு தரும் காற்றாகிய சடம் என்னும் வாயுவைச் சினந்து அடக்கயமையால் சடகோபர் என்படுகின்றார். திருமாலே சடகோபன் என அழைத்தமையால் நம்மாழ்வார் எனப்படுகின்றார். 'வேதம் தமிழ் செய்த மாறன் என்று சிறப்பிக்கப்படுகிறார்'. இவரது நூல்களுள் திருவாய்மொழியைத் திராவிட வேதம் என்பர்.

**ஊ) மதுரகவி ஆழ்வார் (கி.பி. 9 ஆம் நூற்)**

ஊர் பண்டிநாட்டுத் திருக்கோரூர் இவர் வடநாட்டில் பயணம் மேற்கொண்டிருந்தபோது ஓர் ஒளிப்பிழம்பு வழிநடத்தி வந்து 'நம்மாழ்'வாரிடம் கொண்டு வந்து சேர்த்தது என்பர். யோக நிலையில் இருந்த நம்மாழ்வாரையே தனத ஞானசிரியராக இவர் ஏற்றுக்கொண்டார் நம்மாழ்வார் மீது இவர் பாடிய 11 பாடல்கள் கண்ணிறுண் சிறுத்தாம்பு என்னும் பாடலின் முதல்வரியால் பெயர் பெற்றுள்ளது.

**எ) குலசேகர ஆழ்வார் (கி.பி. 9 ஆம் நூற்)**

ஊர் சேதநாட்டுத் திருவஞ்னசிக்களம் திருடவர்தன் என்னும் மன்னனின் மகன் தம் பாடல்களில் இவர் தம்மைக் கொல்லிக் காவலன், கூடல்நாயகன், கோழிக்கோன் எனக்கூறிக்கொள்வதால் பாடல் சோழ நாடுகளுக்கும் தலைவராய் இருந்தார் எனத்தெரிகிறது. திருமால் பக்தியால் அரசு துறந்தவர். அதற்கும் பலபடி மேலே சென்று திருவேந்தர் கட மலையில் பறவையாய், மீனாய், ஆறாய், கொடிமரமாய், படியாய்ப்பிறக்கும் பேறு கிடைக்க வேண்டும் என வேண்டுகிறார்.

இவர் தமிழில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்த மலையும் செய்துள்ளார். கண்ணனின் பிள்ளைமை இன்பங்கள் அனைத்தும் யசோதை பெற்றாளே எனத் தேவரி புலம்புவதாகக் கற்பனை செய்துள்ள செய்யுட்பகுதி தேவகிபுலம்பல்.

**ஏ) பெரியாழ்வார் (கி.பி. 9 ஆம் நூற்)**

ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர் இயற்பெயர் சிஷ்ணு சித்தர் பட்டார்பிரான் எனப்படுவார் குழந்தைக் கண்ணனின் பிறப்பு, தாலாட்டு, அம்புலி, நீராட்டல், பூச்சூட்டல், சாப்பிடல் கிளமை விளையாட்டு அனைத்தையும் பெரியாழ்வார் உணர்ந்து பாடியுள்ளார். ஸ்ரீவில்லிபுத்தூரில் திருமாலுக்குப் பூமாலை கட்டி இறைபணி புரிந்தார்.

'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல கோடி ஐறாயிரம்

என்று திருமாலுக்குப் பல்லாண்டு பாடி பாமாலையும் சாத்தியவர் இருப்பல்லாண்டு பாடியமையால் 'பெரியாழ்வார்' என அழைக்கப்படுகின்றனார்.

**ஐ) ஆண்டாள்**

பன்னிரு ஆழ்வாருள் பெண்பாலர் இவர் ஒருவர் மட்டுமே. பெரியாழ்வாரின் நந்தவனத்தில் துளசிச் செடிகளுக்க இடையே கிடைக்கப் பெற்றார் என்பர். இவரைப் பெரியாழ்வார் பெற்றெழுத்துப் பைந்தொடி' எனப் போற்றவர். திருமாலையே மணக்க வேண்டும் என்னும் வேணவா கொண்டிருந்தார். ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை பெருமாள் சூடியதால், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி எனப்டுகிறாள். இவ்வாறு இறைவானையே ஆண்டதால் ஆண்டாள் என்றும் சிப்பிக்கப்படுகிறாள்.

ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்கள் நோம்பு பற்றியது நாச்சியார் திருமொழி ஆண்டாள் இறைவன் மீது கொண்ட காதல் மணத்தைக் காட்டும்.

**ஒ) திருப்பாண் ஆழ்வார் (கி.பி. 9 ஆம் நூற்)**

பாணர் குடியினர் எனவே இவருக்குக் கோயிலினுள் நுழைய அனுமதி இல்லை. எனவே காவிரிக்கரையிலிருந்தே கோயில் கோபுரம் பார்த்துதொழுது இசைபாடி இறைவன வணங்கினார். பின் கடவுளின் அருளால் இறைவனை நேரே கண்டவர். திருமாலை வணங்கி அமலனறி பிரான் என்னும் 10 பசுரங்களைப் பாடினார். 'பாதகமலன்' என்று தொடங்கி கண்கள் முடிய பதாதிகேச வர்ணனை செய்துள்ளார்.

**ஓ) தொண்டரடிப்பொடி ஆழ்வார் (கி.பி. 9ம் நூற்)**

இயற்பெயர் விப்ரநாராயணன் திருவீரங்கத்தில் மாலைசரித்தும் பொறுப்பினை மேற்கொண்டிருந்தார். தேவதேவி என்னும் விலைமாதின் வலையில் சிக்கி வழிபாடு மறந்து சிறைத்தண்டனைக்கு ஆளானார். அரங்கன், ஆழ்வாரை மீட்டார். தன் தவறுக்கு வெட்கினார் ஆழ்வார். பாவம் நீங்க திருமால் கொண்டகளின் பாதத்துகளினை உட்கொண்டு பாவ மன்னிப்பு தேடினார். அது கொண்டே இவர் கொண்டர் அடிப்பொடி என அழைக்கப்படுகிறார். இவர் திருபள்ளியெழுச்சி (10 பாடல்கள்) திருமாலை (45 பாடல்கள்) ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவரது திருப்பள்ளியெழுச்ச மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சியுடன் ஒப்பிடும் சிறப்பு பெற்றது.

**ஔ) திருமங்கையாழ்வார் (கி.பி.9 ஆம் நூற்)**

சோழநாட்டுத் திருமங்கை நாட்டில் ‘திருக்குறையலூர்’ ஊரினர் நீலன் என்னும் படைத்தலைவனின் மகன், இவர் பிறருக்குக் காலன் போன்று இருந்ததால் பரகாலன் எனப்பட்டார். திருமங்கைப் பகுதியின் குறுநில மன்னனாக இருந்ததால் திருமங்கை மன்னன் எனப்பெற்றார். இவர் பெரிய திருமொழி, திருகுறுந்தாண்டகம். திருநெடுந்தாண்டகம், திருவெழுக் கூற்றியிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்னும் நூல்களைச் செய்தார் இவருடைய பாடல்களில் நாட்டுப்புற வடிவங்கள் காணப்படுகின்றன.

**கிறித்தமும் தமிழும்**

கலம் தரு திரு’வின் நெருட்டு கி.பி 15 ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர், டேனிஷ்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலான ஐரோப்பியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தனர் வளமைநிலையில்

‘முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி’

தமிழகம் விளங்கியது. ஆகையால் மேலை நாட்டினர் தமிழகத்தில் சிலம்புக் காலம் முதலே ஊடுருவி இருந்தனர். அச்சு இயந்திரம், தாள், மை முதலான அறிவியல் வளர்ச்சிகளால் தமிழ்மொழி அச்சில் ஏற அடிப்படையாக இருந்தனர். இதன்மூலம் செய்யுளுக்குள் சிறைப்பட்டு இருந்த தமிழ் உரைநடைச் சுதந்திரம் பெற்றது. கதைகள், கட்டுரைகள், இதழ்கள், அகராதிகள், திறனாய்வுப் போக்குகள் முதலான தமிழ் வளர்ச்சிப் பாதைக்கு மேலை நாட்டார் வருகை, தீபமாகச் சுடர்விட்டது. கிறிஸ்தவர் தமிழ் பணியை,

i. மேலை நாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி
ii. ஈழநாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி
iii. தமிழ்நாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி
iv. கிறித்தவர் அல்லாதவரின் கிறித்தவத் தமிழ்ப்பணி
v. கிறித்தத் தமிழ்பணியில் விளைந்த தமிழ் மறுமலர்ச்சி எனப்பகுக்கலாம்.

1. மேலைநாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி

**மேலை நாட்டுக் கிறித்தவருள்,**

1. இராபர்ட்டி நொடில
2. வீரமாமுனிவர்
3. சீகன்பால்
4. ரேனியஸ்
5. கால்டுவெல்
6. எல்லிஸ்
7. ஜி.யூ. போப்
8. லாசிரஸ்

ஆகியோர் குறிப்பிடத்தக்கோர்

இவர்கள் இயற்றிய இலக்கியங்களாவன மந்திர மாலை, ஞானோபலதேசகாண்டம், ஏசுநாதர் சரித்திரம், ஞானதீபிகை, தேம்பாவணி, திருக்காவஜர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அடைக்கல நாயகிவெண்கலிப்பா, கருணாகரப் பதிகம் எனப் பல நூல்களைத் தமிழுக்கு வழங்கியுள்ளனர்.

**இலக்கண்ப பணி**

செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம் போன்ற பல இலக்கண நூல்களைக் தந்துள்ளனர்.

**ஒப்பிலக்கணப்பணி :**

பேச்சுத்தமிழ் வழக்காற்றைப் பற்றிச் செய்யப்பட்டது 'கொடுந்தமிழ் இலக்கணம்' இதனை வீரமாமுனிவர் இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செய்தார்.

**மொழிபெயர்ப்புபணி**

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பாக்களை இலத்தீனில் வீரமாமுனவர் மொழியாக்கம் செய்துள்ளார். பைபிளை முதன் முதலில் தமிழில் சீகன்பால்கு மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். புதிய ஏற்பாடும் தமிழ் மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறள், நாலடியார் புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு ஆகிய நூல்களை ஜி.யூ. போப் மொழி பெயர்த்துள்ளார்.

**பிறபணிகளாவன**

அகராதிப்பணி, தொகுப்புப்ணி, எழுத்துச்சீரமைப்புபணி, உரைநடைப்பணி, உரைசயாசிரியர் பணி, சிவடிப்பணி, வரலாற்றுப் பணி, இந்தியப்பணி போன்றவற்றின் மூலம் தமிழுக்கு அளப்பறிய தொண்டாற்றியுள்ளனர்.

**ஈழ நாட்டுக் கிறித்தவர்களின் தமிழ்ப்பணி**

மேலை நாட்டுக் கிறித்தவர்களின் தமிழ்ப்பணி போன்றே, ஈழு நாட்டுக் கிறித்தவர்களின் தமிழ்ப்பணியும் போற்றுதலுக்கு உரியது. அவர்களுள் நல்லூர் ஞானப் பிரகாசர், கனகசபைப்புலவர், சதாசிம்பிள்ளை, பிலிப்பு தெ.மெல்லோ, தனிநாயக அடிகள் போன்றோர் குறிப்பிடத்தக்கோர். இவர்கள் அகராதிகள், இலக்கியங்கள், சிற்றிலிக்கியங்கள் போன்றவற்றைப் படைத்துள்ளனர்.

**iii) தமிழ்நாட்டுக் கிறித்துவர்களின் தமிழ்ப்பணி**

தமிழ்நாட்டுக் கிறித்தவர்களும் தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றியுள்ளனர். வேதநாயகசாஸ்திரிழயார் பெத்லேகக்குறவஞ்சி நுலைப் படைத்தவர் மேலும் பட்டணம் பிரவேசம் ஞானத்தச்சன் நாடகம் ஞானக்கும்மி, ஞானஉலா, பராபரன்மாலை, பேரின்பக்காதல் போன்றவற்றை இயற்றியுள்ளர்.

2) மாயூரம் சேத நாயகம்பிள்ளளை நீதிபதியாக இருந்தவர். புதின இலக்கியத்தின் தந்தை கிறித்துவப் படைப்புக்களாக. திருவருள் மாலை, திருவருள் அந்தாதி, தேவமாத அந்தாதி, தேவதோத்திர மாலை படைத்துள்ளார். மேலும் பெண்மதிமாலை, பெண்கல்வி பெண்மானம் உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். மொழிபெயர்ப்பும் செய்துள்ளார்.

3. எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

'ஜான்பனியன் எழுதிய The pilgrim's progress என்னும் நூலைத் தமிழில் 'இரட்சணியயாத்திரகம்' என்னும் பெயரில் மொழி பெயர்ப்புச் சமய இலக்கியத்தை உருவாக்கினார். 'கிறித்தவக் கம்பர்' என்று போற்றப்படுவர். தவிர இரட்சணிய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள் போன்றவவையும் படைத்துள்ளார்.

**பிறதமிழ்க்கிறித்தவர்கள்**

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், வீரகுணபாண்டியனார், ஜான் சாமுவேல், முத்துசாமிப்பிள்ளை, தேவநேயப்பாவணர், மற்றும் பலர் தொண்டாற்றியுள்ளனர். இவைகள் பல கிறித்தவ சமயம் சார்ந்தும், பல சமயம் சாராத்தமிழ் இலக்கியங்களாகவும் உள்ளன. மேலும் திரு.வி.க. பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் போன்றோர் கிறித்தவர் அல்லாமல் இருந்து கிறித்துவத் தமிழ்ப்பணி புரிந்தோர் ஆவார்.

**இசுலாமியமும் தமிழும்**

முகம்மது நபி அசல்களால் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அரபு நாட்டில் இசுலாமிய சமயம் தோற்றுவிக்கப்பட்டது. இசுலாமியர்களை இலக்கியங்கள் சோனார், துருக்கர் எனக்குறிப்படுகின்றன. கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் 'மாலக்காபூரின் படையெடுப்பு' தமிழகத்தின் மேல் நிகழ்ந்தது அதன்பிறகு அரை நூற்றாண்டு மொகலாய ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றது.

*i)* இசுலாமியப் புவலர்களின் பாடல்கள்
*ii)* இசுலாமியப் காப்பியங்கள்
*iii)* இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்
*iv)* இசுலாமிய ஆசிமெய்ஞ்ஞான இலக்கியங்கள்
*v)* இசுலாமிய சமய இலக்கியங்கள்
*vi)* இசுலாமிய நாட்டுப்புறப் பாடல்கள்
*vii)* இசுலாமிய நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்
*viii)* இசுலாமியப் பழமொழிகள்
*ix)* இசுலாமிய ஒப்பிலக்கியம்
*x)* இசுலாமிய உரைவகை – எனப்பகுக்கலாம்.

**1.இசுலாமியப் புலவர்களின் பாடல்கள்**

**1) உமறுப்புலவர் (1642-1703)**

உமறுப்புலவரால் இயற்றப்பட்டது. இசுலாமியர்களின் மரக்கொள்கைகளை முன்னிருத்தி எழுத்படப்டுள்ளத, சீறாப்புராணத்தின் மூன்றாம் காண்டமான 'றுபுவத்துக்காண்டம்' முற்றுப்பெறாமல் இருந்தது. இக்குறையை நீக்க நீக்க காயல்பட்டினத்தைச் சேர்ந்த 'அகமது மரைக்காயர்' என்பவர் 1732ல் பாடிய பகுதி 'சின்னச்சீறா' என்றழைக்கப்படுகிறது. இந்நூல் 39 படலங்களையும் 1829 விருத்தங்களையம் கொண்டது.

**2) குணங்குடி மஸ்தான் (1785-1835)**

இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகில் உள்ள குணங்குடியில் பிறந்தார். மெய்ஞ்ஞானப் பாடல்களைப் பாடும் 'சூபிப்புலவர்' இவர் இவருடைய பால்கள் பட்டினத்தார், வள்ளலார், தாயுமானவர், பாடல்களுக்கு ஒப்பாக இலங்குகின்றது.

நிராமயக்கண்ணி, பராபரக்கண்ணி, ரகுமான்கண்ணி, மனோன்மணிக்கண்ணி, முதலான பல பாடல்களைப் பாடியுள்ளார். பொதுவாக மஸ்தான் சாகிடின் பாடல்களை முகியித்தீன் சதகம், அகத்தீசன் சதகம், கண்ணிப் பாடல்கள் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**3. சேகணாப்புலவர் (புலவர் நாயகம்)**

குணங்குடி மஸ்தானின் பள்ளித்தோழர் 'குத்பு நாயகம்' என்னும் புராணம், திருமணிமாலை என்னும் காப்பியம், நாயைகந்தாதி, மக்காக்கலம்பகம், தோத்திரமாலை முதலான நூல்களை இயற்றியுள்ளார். ஓறாப் புரணத்தை அச்சேற்றியவர் இவரே.

**4. சவ்வாதுப்புலவர்**

நாகைக்கலம்பகம், மதீனத்து, அந்தாதி மொஹைதீன் ஆண்டவர், பிள்ளைத்தமிழ் முதலான பல சிற்றிலக்கியங்களைப்ப பாடியுள்ளார். காளமேகப் புலவரைப் போல வசைபாடுவதில் பெயர் பெற்றவர் பண்டமிழ் ஜவ்வாது வாயெல்லாம் நஞ்சு' என்றே இவரைக் குறிப்பிடுவர். பாடல்கள் புனைந்தே பெரும்பொருள் ஈட்டிய சிறப்பிற்கு உரியவர்.

**5. வண்ணக்களஞ்சியப்புலவர்**

வண்ணக்கசிகைள விரைந்து பாடும் ஆற்றலா் - ஆதலால் இவருக்கு இப்பெயர் சுலைமான் நடியன் வரலாற்றை இராசநாயகம் என்னும் பெயரில் காப்பியமாகப் பாடியுள்ளார். தீனவிளக்கம், அலிபாதுஷா நாயகம் ஆகியனவும் படைத்துள்ளார்.

**6. செய்குத்தம்பாவலர்**

20ம் நூற்றாண்டின் இணைய்ற 'சதாவதானி' இவர் ஒரே சமயத்தில் 'நூறு நிகழ்வுகளைக் கவனகம்' செய்யவல்லவர். சென்னை விக்டோரியா மண்டபத்தில் திரு.வி.க. முதலான சான்றோர் முன்னிலையில் நூறு கவனகம் செய்துகாட்டிச் 'சதாவதானி' என்னும் பட்டம் பெற்றார்.

ஆறுமுகநாவலா், இராமலிங்க வள்ளலாரின் அருட்பாவை மருட்படா என வழக்கு தொடர்ந்த பொழுது துணிந்து அவருக்கு எதிர்க்குரல் கொடுத்தவர் இவரே. இதன் மூலம் வள்ளலாரின் பெருமையை நிலைநாட்டினார். நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, ஷம்சித்தாசின்கோவை, திருநாகூர்த் திரிபந்தறி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தாந்தி, இன்னிசைப்பாமாலை, நீதிவெண்பா முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

**7. இக்கால இசுலாமியர் புலவர்கள்**

21ம் நூற்றாண்டு இசுலாமிய கவிஞர்கள் பல்கிப்பெருகியுள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க சிலரைக் காண்போம்.

**கவிக்கோ அப்துல் ரகுமான்**

இளங்கலைத் தேர்வில் முதன்மைப் பெற்றமைக்காகப் பல்கலைக் கழகத்தின் ஜி.யூ.போப் தங்கப்பதக்கதிலிருந்து சாகித்திய அகாடமி விருது வரை பல்வேறு சிறப்புகளைப் பெற்றவர் மத்திய அரசின் செம்மொழி வாரிய உறுப்பினர்.

கற்களைக் கடவுளென வழிபட்டு வந்தனர். தாயீ்ஃப் நகரவாசிகள் நெறியாம் இறைவனைப் பற்றி எடுத்துரைக்கச் சென்ற நபி (ஸல்) மீது கற்களை எறிந்தனர். இந்நிகழ்வினைக் கல்வெட்டு என்னும் கவிதையில் விளக்குகின்றார்.

**இன்குலாப் :**

குஜராத்தில் இருந்த கபிரிஸ்தான் ஒன்றனுள் சமயத்தின் பெயரால் இசுலாமியருக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை இன்குலாப் ஏதாவது ஒரு குரல்' என்னும் கவிதையில் எடுத்துக்காட்டுகிறார். வன்புணர்ச்சிகள், இடிக்கப்பட்ட பள்ளி வாசல்கள், கொளுத்தப்பட்ட குடிசைகள், என சமய வன்முறைகள் நிகழ்கின்றன.

**மேத்தா**

பிறந்த ஊா் பெரியகுளம் ஒரு நூல்களை எழுதியுள்ளார். 350 திரைப்படப்பாடல்களை இயற்றியுள்ளார். தமிழக அரசின் பாவேந்தர் விருது கலைமாமணி விருது மற்றும் பாரதிவிருது. இலக்கிய வேந்தர் விருது, சாதனையாளர் விருதுகளைப் பெற்றுள்ளார் 'ஆகாயத்துக்கு அடுத்தவீடு' என்னும் கவிதை நூலிற்குச் சாகித்திய அகாடமிவிருது' வென்றுள்ளார்.

**இசுலாமியக்காப்பியங்கள்**

சிறந்த இஸ்லாமியக் காப்பியம் ஓறாப்புராணம், உமறுப்புலவர் இதன் ஆசிரியர் 17 ம் நூற்றாண்டு சீரத் என்னும் சொல்லின் சீறா என்பது இஸ்லாமணியத்தின் மற்றொரு காப்பியம் முகியத்தீன் புராணம் (குத்புநாயகம்)

**இசுலாமியச்சிற்றலக்கியங்கள்**

தமிழின் சிற்றிலக்கியங்கள் போலவே இசுலாத்திலும், சிற்றிலக்கிய நூல்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. அம்மானை, அந்தாணி, ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ், கோவை, நொண்டி நாடகம் முதலானவை அவை யாவன, அம்மானை, நபி அவதாரி அம்மானை அந்தாரி பிச்சை இபுறாகீம் புலவர் பாடிய 'திருமதீனத்து அந்தாதி' திரு மக்காத்திரிபு அந்தாதியைக் குலாம் காதிறு நாவலர் பாடியுள்ளார். நாகை அந்தாதி இயற்றியுள்ளர். 'ஆற்றுப்படை'' மதுரைச் சங்கத்துப்புலவர் ஆற்றுப்படையைக் குலாம் கறிறுநாவலர் பாடியுள்ளார். பிள்ளைத்தமிழில் நபிகள் நாயகத்தின் பிள்ளைமைப் பருவ நகிழ்வுகளைச் செய்து அனபியா சாகிபு நபிகள் நாயகப்பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார்.

**இசுலாமியச் சமய இலக்கியங்கள்**

முனாஜாத்து, மாலை, திருப்புகழ், கீர்த்தனை, ஒழுக்கவகை, சமய வகை நூல்கள் பல இசுலாமிய சமய இலக்கியங்களாகக் காணக் கிடக்கின்றன. திருப்புகழ், கிர்த்தனை, ஒழுக்கவகை நூல்கள் சமய வகை நூல்கள் படைக்கப்படட்டுள்ளன.

**இசுலாமிய நாட்டுப்புறப் பாடல்கள் :**

தமிழின் நாட்டுப்புறப்பாடல் வகைகளைப் போலவே இஸ்லாமிய நாட்டுப்புற நூல்கள் பல சிறந்தன.

1) தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், தொழிற்பாடல்கள், ஏற்றப்பாடல்கள், கும்மிப்பாடல்ள், காதற்பாடல்கள் போன்றவையும் இசுலாமிய இலக்கியங்களாகப் படைக்கப்பட்டுள்ளன.

**இசுலாமிய நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் :**

படைப்போர் இலக்கியங்கள், இஸ்ஸா இலக்கியங்கள், மஸ் அலா இலக்கியங்கள், நாமா இலக்கியங்கள் பல படைக்கப்பட்டுள்ளன. மேலும் இசுலாமியப் பழமொழிகள், ஒப்பிலக்கியங்கள், உரைவகைகளும் தமிழில் தோற்றம் பெற்றள்ளன. இவ்விதமாகத் தமிழ் வளர்வும், சிறப்பும் பெற்றுத் திகழ்கிறது.

**வினாக்கள்:**

1. பக்தி இலக்கியம் என்றால் என்ன?
2. பக்திஇலக்கியத்தினால் தமிழில் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகளை விவரி
3. சமயமறுமலர்ச்சி என்றால் என்ன?
4. பௌத்தமும் தமிழும – குறிப்புரைக்க
5. கிறத்தவ இலக்கியம் என்றால் என்ன?
6. கிறித்தவ இலக்கியத்தினால் தமிழில் ஏற்பட்ட வளர்ச்சியினை விளக்குக
7. சைவமும் தமிழும் விளக்குக
8. வைணவம் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளை விவரி
9. இசுலாமிய இலக்கியங்களைத் தருக
10. இசுலாமியப் புலவர்களைப்பற்றி எழுதுக.

## அலகு-4

## சிற்றிலக்கியங்கள்

**சிற்றிலக்கியம்:**

சங்ககால இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் என்று கால அடிப்படையிலும் அக இலக்கியம், புற இலக்கியம் என்று மனித உணர்வு அடிப்படையிலும் பக்தி இலக்கியம், சமுதாய இலக்கியம் என்ற நோக்க அடிப்படையிலும் இவை போன்று பல்வேறு கூறுகளாக இலக்கியங்கள் பகுக்கப் பெறுகின்றன. இப்பகுப்பு முறைகளில் ஒன்றுதான் இலக்கியத்தைப் "பேரிலக்கியம்" என்றும் சிற்றிலக்கியம் என்றும் வகைப்படுத்தும் முறையாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் உணர்த்தி மக்களை நன்னெறிப்படுத்தும் இலக்கியங்கள் "பேரிலக்கியங்கள்" எனப்படும். உறுதிப் பொருள்கள் நான்கனுள் ஒன்றோ சிலவோ குறைத்து வந்து கற்பனை தெய்வப்போற்றல், தனிமனிதப் போற்றல் முதலானவற்றிற்கு மிகுதியும் இடம் தருவன சிற்றிலக்கியங்கள். தமிழில் நெடும் பாடல்களாய் அமைந்த பிரபந்த வகைகளைச் சிற்றிலக்கியம் என்றும் குறிப்பிடுகிறோம். இதன் தோற்றத்திற்கான வித்தும் வளர்ச்சியும் சங்க காலத்திலேயே காணப்படுகின்றன.

**காலம்:**

ஏனைய இலக்கிய வகைகளைப் போலவே சிற்றிலக்கிய வகையும் தமிழில் காலந்தோறும் கிளைத்து வந்திருக்கிறது. ஐந்தருவி போல இடையறாது சிற்றிலக்கியமாகிய அருவி. தமிழில் கொட்டிய வண்ணம் இருந்ததென்று தான் கூற வேண்டும். சங்க இலக்கியத்திலேயே இவ்வகைமைகள் பல கிளை விட்டன. அவற்றுள் தலைமையானது. ஆற்றுப்படை பிற வகைமைகளுக்கான வித்துக்களையும் அங்கே காண்கிறோம். நீதியிலக்கியங்கள் சில சிற்றிலக்ககிய வகைமைகளாகவே செழித்தன. பக்தி இலக்கியம் சார்ந்த சிற்றிலக்கியங்களும் பல்கின. அடுத்துத் தலைமை வாய்ந்த பிள்ளைத்தமிழ், தூது, உலாப் போன்ற பல சிற்றிலக்கியங்களும் தழைத் தோங்கின. அதன் பிறகு இன்று வரை முன்னைய மரபுகளின் வழிபட்ட சிற்றிலக்கியங்கள் சாத்திர சமயத் தோத்திரம் பாட்டுத் துறைகளனைத்திலும் தோன்றி வந்துள்ளன. பதினைந்து, பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளை நாம் சிற்றிலக்கியக் காலமென்றே அழைக்கலாம் எவ்வாறு பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கியக் காப்பிய காலமென்றும் அதன் மேலோங்கிய தன்மையாற் கூறுகிறோமோ. அது போல் நாயக்கர் காலத்தைச் "சிற்றிலக்கியக் காலம்" என்று அழைக்கலாம்

**சிற்றிலக்கியத்தின் இலக்கணம்:**

டாக்டர் தமிழண்ணல அவர்கள் சிற்றிலக்கியக் கட்டமைப்பு பற்றி விளக்குகிறார். அதில் சிற்றிலக்கிய நூல்கள் நெடும் பாட்டு போல்வன. முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேலான. பலதுறை சார்ந்த பெருநூல்கள் போலல்லாது ஒரு சிலதுறைகளைப் பற்றிய செய்திகளையே உள்ளடக்கின. சுருங்கிய அமைப்பில் அமைவன. வச்சணந்தி மாலை,பன்னிருப்பாட்டியல் இலக்கண விளக்கப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல் முதலியன இவற்றில் பெரும்பான்மையான நூல்களைப் பற்றி விளக்கம் தருகின்றன. பிரபந்த மரபியலில் 96 நூல்களும் கூறப்பட்டுள்ளன.1732 ல் செய்யப்பட்ட சகரகராதி 96 நூல்களுக்கும் விளக்கம் கூறுகிறது என்கிறார் தமிழண்ணல். சிற்றிலக்கியம் காப்பியரின் விருந்து வகை சார்ந்ததென்பது புலனாகிறது.இலக்கியம் உணர்த்தும் உறுதிப் பொருட்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவை. இந்நான்கு உறுதிப் பொருட்களில் ஒன்று குறைந்தோ அல்லது ஒன்றுக்கு அதிகமாகக் குறைந்து வந்தாலோ அவ்விலக்கியத்தைச் சிற்றிலக்கியம் என்பர்.

இறைவன் இறைவி குறுநில மன்னர்கள் குறுநிலத் தலைவர்கள் வள்ளல்கள் போன்றவர்களின் புகழ்பாடுவதற்குத் தோன்றியது. பாட்டுடைத் தலைவனின் வரலாறு கொடைப் பண்பு, வீரம், வெற்றி ஆகியவற்றைப் புகழ்ந்து போற்றும் மரபு கொண்டவை சிற்றிலக்கியங்கள் என்கிறார் தமிழண்ணல்.

**சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்:-**

பழையன கழிதலும் , புதியன புகுதலும் இலக்கியம் முதல் பண்பாடு வாழ்க்கை முறை வரை நிலவும் நியதியே சிற்றிலக்கியங்களும் சங்க காலந் தொட்டு பல்வேறு வகை தொகைகளாக உருவங்கள் மாறி வளர்ந்து வருகின்றன.

தொல்காப்பியர் காலத்தில் இடம் பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாக துளிர்த்து ஏழாம் நூற்றாண்டில் உலவாக மரமாகி 9-ம் நூற்றாண்டில் கலம்பமாகக் கிளைத்து 11-ம் நூற்றாண்டில் பிள்ளைத்தமிழ் மொட்டாகி 14-ம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து 18ம் நூற்றாண்டில் குறவஞ்சியானது என்று சிற்றிலக்கியங்களின் வளர்ச்சி பற்றி நிரல்படக் குறிப்பிடுகிறார்.

**வகை தொகை:**

பாட்டியல் நூல்கள் என்பன இவ்விலக்கிய வகைமைகளின் இலக்கணம் கூற வந்த நூல்களாகும். அவை பல்வேறு எண்ணிக்கைகளைத் தருகின்றன. பன்னிரு பாட்டியல 63 இலக்கிய வகைகள் பற்றியும்,வெண்பாப் பாட்டியல் 55 வகை பற்றியும், நவநீதப் பாட்டியல் 53வகை பற்றியும் சிதம்பரப்பாட்டியல் 63 வகை பற்றியும் இலக்கண விளக்கப்பாட்டியல் 90 வகை பற்றியும் கூறுகின்றன பிரபந்த மரபியல். பிரபந்த தீபிகை சதுரகராதி, தொன்னூல் விளக்கம் முதலியவற்றில் 96 இலக்கிய வகைகள் பற்றிக் கூறப்படுகின்றன.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை தொல்காப்பியக் காலத்தில் வழங்கிய நாற்பத்திரண்டு வகைகள் பற்றியும் பாட்டியல் நூல்களில் கூறப்படாத எண்பத்தைந்து சிற்றிலக்கிய வகைகள் பற்றியும் எடுத்துக கூறியுள்ளார். இவை அகம் பற்றியவை. புறம் பற்றியவை, வாய்மொழி இலக்கியம் பற்றியவை யாப்புப் பற்றியவை, என ஐந்து பெரும்பிரிவுகளாக நோக்கத்தக்கன. மேலும் அந்தாதி என முடிவன. கோவை என முடிவன. மாலை என முடிவன. விருத்தம், மஞ்சரி, பத்து என முடிவன நோக்கத்தக்கன. இவற்றுள் தலைமை வாய்ந்தவையாய்க் காணப்படுவன பதினான்கு வகைககளே எனலாம். அவை ஆற்றுப்படை, அந்தாதி, மாலை, பத்து(பதிகம்), கோவை, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறிஞ்சி என்பனவாம். இவற்றுள் பள்ளும் குறவஞ்சியும் இசை நாடக இலக்கியத்தின் பாற்படும்.

சிற்றலக்கியத் தோற்றம் அகப்பாட்டு, புறப்பாட்டு, பத்திமைப்பாட்டு, நாட்டுப்புறப்பாட்டு என்ற நான்கின் வழிப்பட்டதாகும். தலை மகனின் உளரையும் பேரையும் பாராட்டுதற்கே பல சிறு நூல்கள் தோன்றியுள்ளன. ஊர் எண் செய்யுள், பெயர் எண்,செய்யுள், ஊரின்னிசை,ஊர் நேரிசை, ஊர் வெண்பா பெயர் இன்னிசை. பெயர் நேரிசை, பெயர் மாலை என்று பல சிறு நூல்கள் தோன்றின.

அந்தாதி என எடுத்துக் கொண்டால் அந்தாதி. நூற்றந்தாதி, ஓவியந்தாதி, கலியந்தாதி எனப் பல நூல்கள் கிளைத்தன எனினும் பதிற்றுப் பத்தந்தாதி என்ற வலையே பெரும் சிறப்புப் பெற்றுப் பல நூல்களைத் தோற்றுவித்தது. சிற்றிலக்கியப் பட்டியல் கீழே தரப்படுகிறது. இதில் காணாத பல நூல்களை நம் பாட்டியல் நூல்கள் தருமிடங்களுங்களும் உள. இதிலிருந்து விடுபடுவனவும் உள.

1. அங்கமாலை
2. அட்டமங்கலம்
3. அனுராகமாலை
4. அரசன் விருத்தம்
5. அலங்காரப் பஞ்சகம்
6. ஆற்றுப்படை
7. இணைமணிமாலை
8. இயன்மொழிவாழ்த்து
9. இரட்டைமணிமாலை
10. இருபா இருப.்.து
11. உலா
12. உலாமடல்
13. உழத்திப்பாட்டு
14. உமிஞைமாலை
15. உற்பவமாலை
16. ஊசல்
17. ஊர் இன்னிசை
18. ஊர் நேரிசை
19. ஊர் வெண்பா
20. எண் மாலை
21. எழுகூற்றிருக்கை
22. ஐந்திணைச் செய்யுள்
23. ஒருபா ஒருப.்.து
24. ஒலியந்தாதி
25. கடிகை வெண்பா
26. கடைநிலை
27. கண்படைநிலை
28. கலம்பகம்
29. காஞ்சிமாலை
30. காப்புமாலை
31. காப்பியம்
32. குழமகன்
33. குறத்திப்பாட்டு(குறவஞ்சி)
34. கேசாதிபாதம்
35. கைக்கிளைமாலை
36. கையறுநிலை
37. கோவை
38. சதகம்
39. சாதகம்
40. சின்னப்பூ
41. செருக்களவஞ்சி
42. செவியறிவுநூஉ
43. தசாங்கத்தயல்
44. தசாங்கம்
45. தாண்டகமாலை
46. தாண்டகம்

47. தாரகைமாலை
48. தானைமாலை
49. தும்பைமாலை
50. துயிலெடைநிலை
51. தூது
52. தொகைச்செய்யுள்
53. நவமணிமாலை
54. நயனப்பத்து
55. நாமமாலை
56. நாற்பது
57. நான்மணிமாலை
58. நூற்றந்தாதி
59. நொச்சி மாலை
60. பதிகம(பத்து)
61. பள்ளு
62. பயோதரப்பத்து
63. பரணி
64. பல்சந்த மாலை
65. பவனிக் காதல்
66. பன்மணிமாலை
67. பாதாதி கேசம்
68. பிள்ளைத்தமிழ்
69. புகழ்ச்சி மாலை
70. புறநிலை
71. புறநிலை வாழ்த்து
72. பெயர் நேரிசை
73. பெயரின்னிசை
74. பெருங்காப்பியம்
75. பெருமகிழ்ச்சிமாலை
76. பெருமங்கலம்
77. போர்க்கெழுவஞ்சி
78. மங்கலவள்ளை
79. மடல்
80. மாலை வகை
81. முதுகாஞ்சி
82. மும்மணிக்கோவை
83. மும்மணிமாலை
84. மெய்க்கீர்த்தி
85. வசந்த மாலை
86. வரலாற்று வஞ்சி
87. வருக்கக் கோவை
88. வருக்க மாலை
89. வாகை மாலை
90. வாதோரண மஞ்சரி
91. வாயுறை வாழ்த்து
92. விருத்த இலக்கணம்

93. விளக்குநிலை
94. வீர வெட்சிமாலை
95. வெற்றிக் கரந்தை மஞ்சரி
96. வேனில் மாலை

இன்று 300க்கு மேற்பட்டவை. இனங்காணப்பட்டுள்ளன. இவற்றுள் தலைமை வாய்ந்த பன்னிரண்டைப் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்வது நலம்.

**கலம்பகம்**

'கதம்பம்' என்ற சொல்லுடன் தொடர்பான பொருளுடையது இச்சொல் என்பர். பல்வேறு உறுப்புக்களைக் கொண்டு அகமும் புறமுமாய்க் கலந்து, பல்வேறு பாவினங்களால் பாடப்படுவதால் இப்பெயர் பெற்றது. கலம் + பகம் எனப் பிரித்துக் கலம் என்பது பன்னிரண்டு என்றும். பகம் என்றால் அதிற்பாதி என்றும் கொண்டு, பதினெட்டு உறுப்புகளை உடையது கலம்பகம். இதன் உறுப்புகள் நூல்தோறும் மிக்கும் குறைந்தும் வருகின்றன. புயவகுப்பு, தலம், வண்டு, அம்மானை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், கார், தூது, குறம், பிச்சியார், கொற்றியார் முதலியன உறுப்பு வகைகள், ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, தாழிசை இதில் விரவி வரும். அந்தாதித் தொடையால் நூறு பாடல்கள் வரை பாடப் பெறும்.

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனைப் பாராட்டிப் போற்றும் நந்திப் கலம்பகமே காலத்தால் முற்பட்டது. இது தோன்றிய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாகும். இந்நந்திவர்மன் காலம் கி.பி. 825 – 850 என்பர். நந்திவர்மனின் மாற்றாந்தாய் மகன் ஒருவன் புலமைமிக்கவன் என்றும் அவன் நந்தியைக் கொல்வதற்கு அறம் வைத்துப் பாடியதே இந்நூல் என்றும கூறுவர். அது தெரிந்தும் இந்நூலை அரங்கேறச் செய்து தமிழ்ச்சுவை பருகி மகிழ்வுற்று, இறுதிப் பாடலைப் படிக்கும் போது பந்தல் தீப்பிடித்து, நந்திகலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும் ''கலம்பகமே கொண்டு காயம்விட் தெள்ளாறை நந்தி'' என்றும் தமிழ் நூல்கள் நந்தியைப் போற்றும்.

நந்திக் கலம்பகம் சொற்சுவை. பொருட்சுவை, கற்பனை வளம் மிக்கது. ''ஊசல்'' மகளிர் மன்னன் புகழ் பாடியது.

''ஓடரிக் கண் மடநல்வீர்! ஆடாமோ ஊசல்
உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப் பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மென்மலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்
கூடவர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலய மார்த்தாண்டன்
காடவர்க்கு முன்தோன்றல் கைவேலைப்பாடிக்
காஞ்சிபுர மும்பாடி ஆடாமோ ஊசல்''

நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் பத்தாம் நூற்றாண்டில் பரவியது. கண்பாய கலம்பகம், தில்லைக் கலம்பகம், இரட்டையர்கள் என புகழ் பெற்றனர். இதுகாறும் 63 கலம்பகங்கள் பற்றிக் குறிக்கப்படுகிறது.

**தூது**

தன் கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்கும்மாறு ஒருவரைத் தன்சார்பாளராக அனுப்புவதே தூது இலக்கியம் எனப்படும். புறம் சார்ந்த தூதுகள்பல. ஔவையார் அதியன் தூதனுப்பத் தொண்டைமானுழைத் தூது சென்றது. பக்தி இலக்கியத்தில் 'தூது' என்னும் துறையமைந்த பாடல்களை பலவுள – திருஞான சம்பந்தர் பாடல் வருமாறு.

''சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்

முறையாலே உணத்தருவன மொய்பவளத் தொடுதாளம்

துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்

பிறையாளன் திருநாமம் எனக்கொரு கால் பேசாயே!''

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் கி.பி.14ஆம் நூற்றாண்டில் பாடிய, சை சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாய ''நெஞ்சுவிடுதூது இவ்வகையில் முதல் நூல். காலப்போக்கில் தூது விடும் பொருள்கள் புதிது புதிதாய் அமைந்துள்ளன.

''இயம்புகின்ற காலத்து எதினமயில் கிள்ளை

பயம்பெறு மேகம் பூவை பாங்கி – நயந்த குயில்

பேதை நெஞ்சும் தென்றல் பிரமரம் ஈரைந்துமே

தூதுரைத்து வாங்கும் தொடை''

அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்ற பத்துமே முன்பு தூதுவிடும் தகுதியுடையவனவாகக் கருதப்பட்டன. பின்பு பணம். தமிழ், புகையிலை, காக்கை என இவ்வாறு அவை பல்கின செருப்புக்கூடத் தூது வரும் பொருளாயிற்று!.

பலபட்டைச் பொக்கநாதப்புலவரின் அழகர்கிள்ளைவிடுதூது கற்பனை வளம் மிக்கது. சுப்பிரதீபக்கவிராயரின் கூளப்ப நாயக்கன் 'விறலிவிடுதூது' இன்பத்ததை சார்ந்தது(18 ஆம் நூற்றாண்டு) தமிழ்விடுதூது எனும் பெயரால் இரு நூல்கள் உள.அறுபது தூது நூல்கள் பற்றி இன்று அறிய முடிகிறது.

**உலா:**

திருவீதி உலாவரும் தெய்வத்தைக் கண்டு தேவரடியார்கள் மயங்குவதாகப் பாடுவது ஒரு நாட்டுப் பாடல் மரபு . அதுபோல அரசர்கள் உலாவரும் போது ஏழு பருவமங்கையரும் கண்டு காதல் கொண்டு மயங்குவதாகப் புனையலாயினர். பேதை (5-7 வயது)பெதும்பை (8-11) மங்கை (12-13) மடந்தை (14-19) அரிவை (20-25) தெரிவை (26-31) பேரிளம்பெண் (32-40) ஆகிய மகளிரின் இயல்பும் ஆடல் பாடலும் நன்கு புனையப்படும். அவர்கள் தலைமகனைக் கண்டு காதல் கொள்ளுகிற விதமும் அவர்களுடைய வயதிற்குத்தக அமையும்.

முத்தொள்ளாயித்திலேயே தென் கூறுகள் காணப்பட்டன.

''தாயர் அடைப்ப மகளிர் திறந்திடப்

தேயத் திரிந்த குடுமியவே – ஆய்மலர்

வண்டுலா அங் கண்ணி வயமான் தேர்க் கோதையைக்

கண்டுலா அம் வீதிக் கதவு!''

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கயிலாய ஞானவுலா என்பது காலத்தால் முற்பட்டது. இது தெய்வீக உலா என்றும் ஆதி உலா என்றும் சிறப்பித்து அழைக்கப்படும். உலா வரும் இறைவனின் மாட்சியும் காட்சியும் விரித்துப் பேசப்படுகின்றன.பதினொன்றாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவருலாவும் குறிப்பிடத்தக்கன.மூவருலாவில் விக்கிரம சோழனுலா குலோத்துங்க சோழனுலா. இராசராச சோழனுலா ஆகிய மூன்று உலாக்கள் இடம் பெற்றுள்ளன. சோழா வரலாற்றை அறியத் துணை நிற்பன மூவருலா அறுபத்தொன்பது உலாக்கள் கிடைத்திருப்பதாக முனைவர் ந.வீ.செயராமன் குறிப்பிடுகிறார்.

**பரணி:**

''ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மாணவனுக்கு வகுப்பது பரணி''

என இலக்கண விளக்கப் பாட்டியல் இதற்கு இலக்கணம் கூறும் போர்க்கள வெற்றியைப் புகழ்ந்து பாடுவதே பரணியாகும். அப்போர்கள் எங்கு நடைபெற்றனவோ . அவ்விடத்தின் பெயரால் அவை அழைக்கப்படும். புறத்திணையில் இடம் பெறும் கள வேள்வி களவாழ்த்து முன்தேர்க்குரவை , பின்தேர்க்குரவை போல்வன பரணியிலக்கியம் தோன்ற அடிப்படையாகும் . பழங்காலத்தில் ஏர்க்களம் பாடும் பொருநரேயன்றிப் போர்க்களம் பாடும் பொருநர்களும் இருந்தார்கள் . அவர்களின் வாய்மொழிப் பாடலின் வழி வந்ததே பரணியிலக்கியம்.

போர்க்களத்தின் தெய்வம்(காளி) கொற்றவை அவ்வெற்றித் தெய்வத்தை வழிபடும் விழாவே பரணியாகும். இது அத்தெய்வத்திற்குரிய நாளாகிய பரணி நட்சத்திரத்திற்கொண்டாடப்பட்டது. கூளிகள் என்பன பேய்கள் போர் நடைபெறாமையால் வாடிய கூளிகள் காளியிடம் முறையிட அவள் விரைவில் போர் வர இருக்கிறது. வயிறார உண்ணலாம் என்று கூறுகிறாள். இவ்வாறு தொடங்கிப் போர் நிகழ்ச்சிகளை வருணிப்பனவே இந்நூற்பகுதியாகும்.

சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியே காலத்தால் முற்பட்டதாகும். கலிங்கத்தை நோக்கிச் சோழப்படை செல்லும் மாட்சியைச் சயங்கொண்டார் அழகாகப் புனைகிறார்.

''நீலமா மணிச் சிவிகை வெள்ளமும்

நித்திலக் குலக் கவிகை வெள்ளமும்

காலினால் வரும் யமுனை வெள்ளமும்

கங்கை வெள்ளமும் காண்மின் என்னவே!''

அவலம் தன் கணவன் போரிலே உயிர் நித்ததைக் கோட்ட மனைவி . போர்களத்திற்கு ஓடி அவன் தன் மீது பாய்ந்த அம்புகளால் தள்ளாடிய படிவிழ! அவன் உடல் தரை மகள் மீது படும் முன் தாங்கிக் கொண்டாளாம். மேலும் அவன் விண்ணுலகம் போனதும் தேவ மகளிர் அவளைக்கண் கூடும் முன் தானே சென்று அவனை வரவேற்க வேண்டும் என்று அவள் தன் உயிரை உடனே விட்டுவிட்டாளாம் ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணி புராணத் தொடர்புடையது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுந்தது தத்துவராயர் மோகவதைப்பரணி எனவும் வைத்தியநாத தேசிகர் பாசவதைப் பரணி எனவும்

பாடியன தத்துவ நோக்கில் எழுந்தவையாகும். பதினேழு பரணிகள் பற்றி இன்று அறிய முடிகிறது என்பர்.

**பிள்ளைத்தமிழ்:**

தலைவனையோ கடவுளையோ குழந்தையாகப் பாவித்துக் கொண்டு பத்தப் பருவங்களாக அமைத்துப் பாடுவது பிள்ளைத்தமிழ் எனப்பட்டது. ஒரு பருவத்திற்குப் பத்து விருத்தங்களாக நூறு பாடல்கள் பாடப்படும். இதனை ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற்பிள்ளைத்தமிழ் என இரண்டாகக் கூறுவர். காப்பு,செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆண்பாலுக்குரியன. பெண்பாலுக்கு இறுதி மூன்றையும் நீக்கிவிட்டுக் கழங்கு, நீராடல், ஊசல் போல்வன பாடப்படும் ஆழ்வார் பாடல்களில் இவ்வகைமைக்கான வளர்ச்சி நிலைகளைக் காணலாம்.

ஒட்டக்கூத்தர் பாடிய இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழே காலத்தால் முற்பட்டது என்பர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் உருப் பெற்ற இதனைச் சிறப்புறுத்தியவர் குமரகுருபரர். அவர் பாடிய மீனாட்சி சுந்தரம் பிள்ளைத்தமிழும். முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழும் நிகரற்றவை. பகழிக்கூத்தரின் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழும் பத்துப்பிள்ளைத்தமிழ் பாடிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சேக்கிழார் பிள்ளைத்தமிழும் குறிப்பிடத்தக்கவை. 'பிள்ளைத்தமிழே பெரிய தமிழ்'' என்று போற்றுமளவு இது தமிழலக்கியத்தில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. ஏறத்தாழ 120 பிள்ளைத்தமிழ் நூல்கள் பற்றி அறிகிறோம்.

இன்றும் கம்பர் பிள்ளைத்தமிழ் காந்தி பிள்ளைத்தமிழ், மறைமலையடிகள், பிள்ளைத்தமிழ் எனப் பல தோன்றிய வண்ணம் உள்ளன.

**ஆற்றுப்படை:**

பரிசில் பெற்றான் ஓர் இரவலான் தன் எதிரே வரும் வறுமைப்பட்ட இரவலனை விளித்து நான் பரிசில் பெற்று வந்த வள்ளலின் சிறப்பையும் வீரத்தையும் கொடைப் பண்பையும் விளக்கி, நீயும் சென்று பரிசில் பெறலாம் எனக் கூறி அங்குச் செல்வதற்குரிய வழிவகைகளைக் கூறி ஆற்றுப் படுத்துவதே ஆற்றுப்படையாகும். இதற்கான இலக்கணம் தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகிறது.

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுநீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் (தொல் 1037)

கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோரில் பரிசில் பெற்றவர் வழியின்கண் பெறாத வரைத் காண்பது ஒரு பகுதியாகும். செல்வம் பெற்றவன்ஒரு புறமும் வறியவன் மறுபுறமுமாக இவர்கள் உறழத் தோன்றுவான் பெற்றவன் தான் பெற்ற பெருவளம் பற்றியும் பெற்றமுறை. தந்தவன் சிறப்பு முதலியன பற்றியும் விவரிப்பான சங்க இலக்கியத்தில் பதிற்றுப்பத்திலும், புறநானூற்றிலும் சிறு சிறு ஆற்றுப் படைத்துறை அமைந்த பாடல்கள் உள.

பத்துப்பாட்டில் செம்பாதி ஆற்றுப்படைகள் என்பது முன்னர்க் கூறப்பட்டது. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்பன அவற்றுள் பொருநராற்றுப்படை காலத்தால் முற்பட்டதாதல் கூடும் என்ற கருத்தும உண்டு. இடைக்காலத்தில் ஆற்றுப்படைகள் வளரவில்லை. பிற்காலத்தில் கச்சியப்பமுனிவர் திருமேனி இரத்தினக்கவிராயர். தொழுஆர்வேலாயுத முதலியார்,குலாம் காதிறு நாவலர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஆகியோர் முறையே தணிகையாற்றுப்படை,

புலவராற்றுப்படை, நெஞ்சாற்றுப்படை, இறையனாற்றுப்படை ஆகியவற்றை எழுதி இவ்வகைமையைப் போற்றினார்.

**குறவஞ்சி**

குறவஞ்சி நாட்டியம், குறவஞ்சி நாடகம் என்றும் அழைப்பர். இந்த இலக்கிய வகையில் குறத்திக்கு முதன்மை கருதிக் குறவஞ்சி என்றனர். சங்க காலத்திலும் குறி சொல்லும் மகளிர் இருந்தனர். குறுந்தொகையில் ஔவையார் இவர்களை ‘‘அகவன்மகள்’’ என்று அழைக்கின்றார். குறவஞ்சி தனி இலக்கியமாக வளர்ந்தது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டு எனலாம். பன்னிருபாட்டியல்,

‘இறப்பு நிகழ்வெதிர் வெண்ணு முக்காலமும்

திறம்பட உரைப்பது குறிப்பது குறத்திப் பாட்டே’

எனினும் நமக்குக் கிடைக்கும் முதற் குறவஞ்சி கி.பி.18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய திரிகூடராசப்ப கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சியேயாகும். இன்று நாற்பதுக்கு மேற்பட்ட குறவஞ்சி நூல்கள் உள்ளன.

உலாவரும் தலைவன் மீது காதல் கொள்ளும் தலைவி காதல் துன்பத்தால் தவிக்க, தலைவனிடம் தோழியைத் தூது அனுப்புவாள். இவ்வேளையில் மலைவளம் பாடும் குறத்தி குறி பார்த்து நன்மையக்குமென நல்வார்த்தை கூற. தலைவிதரும் ஆடை அணிகலன்களை அணிந்து குறித்தி மகிழ்வுடன் செல்லும் போது எதிர்ப்படும் குறவன் புத்தாடை கண்டு குறத்தி மீது ஐயக் கொண்டு கடுமொழி கூற இருவரும் ஊடல் கொண்டு இறுதியில் மனம் திருத்தி இறைவனை வாழ்த்துவதாகவே, குறவஞ்சி நூல்கள் அமையும்.

அழகர் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி, விராலிமலைக் குறவஞ்சி, பாம்பண்ண கவுண்டர் குறவஞ்சி, திருச்செங்கோட்டுக் குறவஞ்சி, நகுமலைக் குறவஞ்சி இவை தவிர மெய்ஞானக் குறவஞ்சி, தத்துவக் குறவஞ்சி ஆகியவையும் பாடப்பட்டுள்ளன.

**பள்ளு**

பள்ளு இலக்கியம் பள்ளேசல், பள்ளு நாடகம் எனவும் வழங்குவர். இதன் எண்ணிக்கையின் மிகுதி கருதி ‘‘நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது’’ என்பர். தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்பு எட்டனுள் இது ‘‘புலன்’’ என்னும் வகையில் அடங்கும். தொல்காப்பியம் புறத்திணையியலில் சுட்டும் ‘‘ஏரோர் களவழி’’ சிலப்பதிகாரம் காட்டும் ஏர் மங்கலம், பின்னால் தோன்றிய உழத்திப்பாட்டு இவையே பின்னர்க் காலப்போக்கில் தனி இலக்கியமாகிப் பள்ளு இலக்கியமாய் மலர்ந்தது. பள்ளர்களுடைய வாழ்க்கையை மிகுதியும் பேசுவதால் பள்ளு எனும் பெயர் பெற்றது. மருதநில இலக்கியம், அம்மண்ணின் மைந்தர்களை உள்ளவாறு காட்டும் யதார்த்த இலக்கியம்.

பள்ளு நூல்களில் பெருமை வாய்ந்தது முக்கூடற்பள்ளு. 17ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் மூன்று நதிகள் கூடுமிடத்தில் முக்கூடல் உள்ளன. இங்குள்ள இனாவன் அழகர் (திருமால்) பள்ளன் பெயர் அழகர் குடும்பன் மூத்தபள்ளி முக்கூடற்பள்ளு. இளையபள்ளி மருதூர்ப்பள்ளு இம்மூவர்க்கும் இடையே நடைபெறும் சண்டை சுவையானது. அக்காலச்சமூக வரலாற்றைச் சுட்டுவது இயற்கை வருணனை நன்கு அமைந்தது. எடுத்துக்காட்டாக மழைக்குறிப்பாடல் அமையும் விதம்.

‘‘ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறி – மலை

யாளமின்னல் ஈழமின்னல் சூழ மின்னுதே

நேற்றுமின்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே – கேணி

நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே''

ஏனைய பள்ளு நூல்கள் திருச்செந்தூர்ப்பள்ளு, திருவாரூர்ப்பள்ளு, வைசியப்பள்ளு, வையாபுரிபள்ளு, கனகராயன் பள்ளு, திருமலை முருகன் பள்ளு, வடகரைப் பள்ளு, திருவிடை மருதூர்ப்பள்ளு, பறாலை விநாயகர் பள்ளு, திருநீலகண்டன் பள்ளு, ஞானப் பள்ளு, செண்பகராமன் பள்ளு, ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**சதகம்**

நூறுபாடல் கொண்ட நூலுக்குச் சதகம் என்று பெயர். ஐங்குநுறூறும், பதிற்றுப்பத்தும் தோன்றிய தமிழில் நூறு பாடல் கொண்ட நூல் தோன்றுவது புதுமையன்று. மாணிக்கவாசகரின் திச்சதகமே முதற்சதகமாகும். இது உள்ள முருக்கும் பக்திப்பாட்டாகும். அவை நீதி போதனையும் தத்துவமும் உணர்த்தும் நூல்களால் விளங்கின. இங்கு மண்டல அடிப்படையில் நாட்டு வரலாறு, நூல்களின் சிறப்பு உணர்த்தும் ''சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், ஈழமண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், நந்த மண்டல சதகம் என்பன மண்டல சதகங்கள்'' என அழைக்கத்தக்கன. இவை நாட்டுவளம், புகழ், மன்னர், கவிஞர், வள்ளல்கள் வரலாறுகளைக் கூறுவன.

**மடல்**

மடல் என்பது அகத்திணையில் ஒரு துறையாகும், அவ்வடிப்படையில் பாடிய புலவரில் ஒருவர் 'மடல்' பாடிய மாதங்கீரனார் எனச் சங்க நூல்களில் சிறப்பித்து அழைக்கப்பட்டார். திருமங்கையாழ்வார் பெரிய திருமடல், சிறிய திருமடல் என்று நீண்ட பாசுரங்களை எழுதினார். தமிழில் கடவரே மடலேறுவதாக அச்சுறுத்துவதும், மடலேறுவதும் உண்டு. மகளிர்க்கு அது மரபன்று ஆயினும தம்மைத் தலைவியாகப் பாவித்துப்பாடும் திருமங்கையாழ்வார் மடற்கூற்று மகளிரிடமும் அமையலாம் என. இறைவன் மீது கொண்ட காதல் புலப்படப் பாடுகின்றார். இது தவிர வளமடல் அல்லது இன்பமடல் எனச் சிருங்காரச் சுவை மிக எழுதியனவையும் உள. வருண குலாதித்தன் மடல் போன்றவை அவை அந்நாளைய சிற்றரசர்களை மகிழ்விப்பதையே நோக்கமாகக் கொண்டு இவ்வின்பமடல்கள் எழுதப்பட்டன.

**குமரகுருபரர்**

ஐந்து வயது வரை ஊமையாக இருந்த இவர் பெற்றோருடன் சென்று திருச்செந்தூர் முருகளை வழிப்பட்டபோது பேசும் ஆற்றல் பெற்றார். உடனே கந்தர் கலிவெண்பா என்ற நூலைப் பாடினார். பதினேழாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியவளம் கொழிக்கச் செய்தவர் இவர். மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், காசிக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர், நான்மணிமாலை, சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிவகாமியம்மைகுளம் முதலியன இவர் இயற்றின. செம்மாந்த நடையில் உயர்வு நவிற்சியாகப் பாடுவதில் இவர் வல்லவர். வடநாட்டில் சென்று தமிழ் பரப்பியவர். முகலாய மன்னரிடம் அவர் மொழியில் பேசி உதவி பெற்றவர். துளசிதாசரும் இவருடைய பேச்சுக்களினால் உந்தப்பட்டே இராமாயணம் பாடினார் என்பர் நாயக்கராட்சியில் தமிழ் வளர்ந்து விடாமல், மீண்டும் நிலை நிறுத்திய அறப்போர் மறவர் இவர்.

**துறைபங்கலம் சிவப்பிரகாசர்**

பதினேழாம் நூற்றாண்டைச் சிறப்பித்த தமிழ்ப் புலவர்களில் குமரகுருபரரை அடுத்து விளங்கியவர் சிவப்பிரகாரசர் இவரும் முன்னவர் போலத் துறவு பூண்டார். இவர் ஒரு வீரசைவர். துறைமங்கலம் ஊரிலே வாழ்ந்தவர். இதழ் ஒட்டாமல் இதழ் இயையும் எழுத்துக்களின்றி – பாடுவது நிரோட்டகம் எனப்படும் யமகம் என்ற சொல்லணி அமைந்த

நிரோட்டக யமக அந்தாதியை இளமையிலேயே பாடிப்புகழ் பெற்றவர். இவர் திருவெங்கைக் கலம்பகம், கோவை என்ற இரு நூல்களை எழுதினார். திருநெல்வேலியில் வாழ்ந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம் கல்வி கற்றார். அவர் மீது கலம்பகம், தாலாட்டு, பிள்ளைத்தமிழ், திருப்பள்ளி எழுச்சி, தூது ஆகிய இலக்கிய வகைகளை எழுதினார். நன்னெறி என்பது இவரெழுதிய நூலாகும். ''பிரபுலீங்கலீலை'' வீர சைவசமயத்தை விளக்கும சிறந்த காப்பியம். கன்னட மொழியிலிருந்து அது பெயர்க்கப்பட்டது. ஏசுமத நிராகரணம் என்ற நூல் கிறித்துவ சமயத்தை மறுத்து இவரேழுதியது.

**தாயுமானவர்**

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே

அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் - அன்பே

மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே''

என்னும் பராபரக் கண்ணி, எளிய நடையில் எழுதப் பெற்ற அரிய கருத்துப் பேழை, சித்தர்கள் கருத்துக்கள் போல் இறைவனைத் தொழப் பூவும், பூசனையும் தேவையில்லை. உள்ளத் தூய்மையும் அன்பும், எல்லோரும் இன்புற நினைப்பதும் அதற்கு ஆவண செய்வதும் தாம் இறைவனுக்கு உகந்தவை. இறைவன் இன்பமே இருக்கிறார் என்ற கருத்தை விதைக்கிறார் தாயுமானவர்.

**இராமலிங்க வள்ளலார்**

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' எனக் கூறும் அருள் வள்ளல் இராமலிங்க அடிகள். கலையுரைத்த கற்பனையே மெய்யெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண், மூடிப் போகட்டுமென மூடக்கொள்கைகளின் முடை நாற்றம் வீசுகின்ற போலி சமயக் கோட்பாடுகளுக்கு எதிராகின்ற புரட்சிமிகு சமயச் சிந்தனையாளர். சமயச் சீர்திருத்தப் பெரியார் இவர்.

சன்மார்க்க நெறி கண்ட வள்ளல். உயிர்களிடம் கருணை, பசியை கற்றல், ஆன்மநேய ஒருமைப்பாடு பற்றிப் பாடிய அருளாளர் இவர்.

''பசித்திரு, தனித்திரு, வழித்தரு'' என்று தனிமனிதரும் உலகும் உய்யப்பாக்களால் பாதை காட்டியவர் இவர். வடலூர் வள்ளலாரின் திருவருட்பா, தமிழுக்குக் கிடைத்த பேரருள் எனலாம். நாட்டுப்புற பாடல்களான கும்மி, கண்ணி, சிந்து, கீர்த்தனைகளெனக் கவிதையில் பல வண்ணங்களை இணைத்தவர் இவர்.

**பதினெண் சித்தர்கள்**

சித்தர்கள் கணக்கற்றவர் வாழ்ந்துள்ளனர். திருமூலரே முதற்சித்தர் என்று போற்றப்படுகிறார். திண்டிறற் சித்தர்களே கடைக்கூழைச் சென்மின்கள் என மாணிக்கவாசகர் கூறுகிறார். சித்துக்கள் பற்றித் தேவாரத்திலும் குறிப்புண்டு இவர்கள் மருத்துவம். மந்திரம், இரசவாதம், யோகம், ஞானம் பற்றியெல்லாம் பாடியுள்ளார். இச்சித்தர்கள் கி.பி. பத்தாம் நூற்றாண்டை ஒட்டி மிகுதியாக வாழந்தனர். சித்த மருத்துவ முனனோடிகள் இவர்களே. இவர்களை ஒரு வகையில் அக்கால அறிவியல் அறிஞர்கள், இயற்கை நிபுணர்கள் என்றெல்லாம் குறிப்பிடலாம். சித்தர்களின் பெருமையை உணர்ந்த பாரதியாரும்,

'செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற

சித்தர் பிறந்த தமிழ்நாடு'

எனப் பாராட்டுவர்.

சித்தர்களின் பாடல்கள் எளியைமாக இருப்பினும் ஆழமான தத்துவக் கருத்துக்கள் நிறைந்தவை. சித்தர்கள் பலர் இருப்பினும் வழக்கில் பதினெண்சித்தர்கள் எனும் மரபுள்ளது. அகர வரிசையில்

1. அகத்தியர்
2. இடைக்காடர்
3. உரோமமுனி
4. கமலமுனி
5. கயிலாய நாதர்
6. கூன்கண்ணன்
7. கூர்மமுனி
8. கொங்கணர்
9. கொங்கணர்கோரக்கர்
10. சட்டைமுனி
11. சுந்தரானந்தர்
12. திருமூலர்
13. நந்தி
14. பிரமமுனி
15. பிண்ணாக்கீசர்
16. போகர்
17. மச்சமுனி
18. வாச முனி

1. திருமூலர்:- திருமந்திரம் இயற்றினார் தமிழும் சைவத் திருமுறை நூல்கள்

2. சிவவாக்கியார்:- இவர் பாடிய பாடல்கள் 520 யோகசித்தர்

3. பட்டினத்தார்:- நிலையாமையினை உணர்ந்தயோசி

4. பத்திரகிரியார்:- துளுவ நாட்டினர் பட்டினத்தாரைக் கழுவேற்றி தோற்றார். அவருக்கு அடிமையாகி இன்பங்களைத் துறந்தார். பெண்ணின் மாண்பினைப் போற்றுவார்.

5. பாம்பாட்டிச் சித்தர்:- பாம்பு வடிவமாக மண்டலித்து உள்ள குண்டலினி சக்தியை எழுப்பி அதன்மூலம் ஆன்மதரிசனம் பெற இயலும் என்பது இவரது கொள்கை.

6. இடைக்காட்டுச் சித்தர்:- கோனார் என வழங்கப்படும் இடையர்களையும், ஆடுமாடுகளையும் முன்னிறுத்திப் பாடியதால் இவருக்கு இப்பெயர் என்பர்.

7. அகப்பேய்ச்சித்தர்:- அலையும் மனத்தைப் பேய் என உருவகித்ததால் இவருக்கு இப்பெயர் பேய் மனத்தைப் பெண்ணாக விரித்துப் பாடுகிறார்.

8. குதம்பைச் சித்தர்:- குதம்பை என்பது காதணி குதம்பை அணிந்த பெண்களை முன்னிலைப் படுத்திப் பாடியதால் இவருக்கு இப்பெயர்.

9. கடுவெளிச் சித்தர்:- வாக்குமணம் கடந்து பரவெளியைக் கடுவெளி எனப் பாடியதால் இவருக்கு இப்பெயர்.

10. அழகணிச்சித்தர்:- இவரது பாடல்கள் அழகும் அணிநயமும் மிகுந்து காணப்படுவதால் இவருக்கு இப்பெயர்.

11. கொங்கணிச் சித்தர்:- காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு. கொங்கு நாடு. ரசவாதம், யோகம், மருத்துவம் பற்றிய நூல்களை எழுதியுள்ளார்.

12. சட்டை முனி:- சட்டைமுனி ஆயிரத்து இருநூறு, திரிகாண்டம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

13. அகத்தியர்:- சித்த மருத்துவ முறைகளை வகுத்தவர்.

14. சுப்பிரமணிய சித்தர்:- இறைவனை முருகனாகவே காண்கிறார். பல பாடல்களில் முருகனை மயில்வீரன் எனக் குறிப்பிடுகின்றார்.

15. போகர்:- திருமூர் மாணாக்கர், மருத்துவ பழஞ்சுவடிகளைப் போகரின் பெயரால் கூறுவது நடைமுறையில் காணப்படுகிறது.

16. உரோமமுனி சித்தர்:- இவரது உடலெங்கும் உரோமம் மிகுந்திருந்ததால் இவருக்கு இப்பெயர் என்பர்.

17. கருவூர்ச் சித்தர்:- கருவூரில் பிறந்த வராதலால் இப்பெயர். இராசராசன் கட்டிய கோயிலின் சிவலிங்கத்தை இவர் நிறுவினார்.

18. தேரையர்:- மன்னனின் தலைக்குள் இருந்த தேரையை அகற்றியதால் இவருக்கு இப்பெயர் என்பர்.

பதினெண்சித்தர்கள் தொடர்பாகப் பல அகராதிகள் உள்ளன. இவை அரிய பல செய்திகளை உள்ளடக்கி இருக்கின்றன. அவையாவன வைத்திய மூலிகை அகராதி, வைத்திய மூலிகை விரிவகராத், வைத்திய மலையகராதி, அரும்பெயர் அனுபந்த அகராதி, தொகை அகராதி, பச்சிலை மூலிகை அகராதி, பரிபானஷ அகராதி, கருப்பொருள் அகராதி, மறைப்பு வெளிப்படை அகராதி என்பன அவை.

**இலக்கண நூல்கள்**

இலக்கணம் என்பது மொழியின் வேலி. இலக்கியம் கண்டதற்குத் தான் இலக்கணம் இயம்ப இயலும். தமிழ்மொழியில் கூறப்படும் ஒவ்வொரு இலக்கணமும், அது தொடர்பாகப் பன்னூறு ஆண்டுகளாகப் பழக்கத்தில் புழங்கி வந்த மக்களின் வாழ்வியல் திறத்தையும், புலவோரின் இலக்கிய வளத்தையும்தடம் காட்டும் கலங்கரை விளக்கஙகளாக விளங்குகின்றன. ஒவ்வொரு காலச் சூழலிலும் தோன்றிய புதிய புதிய இலக்கியங்களுக்கு ஏற்ப புதிய இலக்கண நூல்களும் தோன்றின. அவை

1. எழுத்து, சொல், பொருள் இலக்கண நூல்
2. எழுத்து, சொல் இலக்கண நூல்கள்
3. சொல் இலக்கண நூல்கள்
4. பொருள் இலக்கண நூல்கள்
   (அ) அகப்பொருள் இலக்கண நூல்கள்
   (ஆ) புறப்பொருள் இலக்கண நூல்கள்
5. யாப்பு இலக்கண நூல்கள்
6. அணி இலக்கண நூல்கள்
7. ஐந்திலக்கண நூல்கள்
8. பாட்டியல் நூல்கள்

**1. எழுத்து, சொல், பொருள் இலக்கண நூல்**:-

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என்னும் மூன்று இலக்கணங்களைத் தொல்காப்பியர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அணி இலக்கணத்திற்கு அடிப்படையான உவமை என்னும் அணியை உவம இயலில் ஊன்றி வைத்துள்ளார் தொல்காப்பியர்.

**2. எழுத்து, சொல் இலக்கணங்கள்:-**

**நன்னூல்:-** கி.பி. 12 – 13 ல் பவணந்தி முனிவர், நன்னூலை இயற்றினர். தொல்காப்பியர் கூறிய எழுத்து, சொல், பொருள் இலக்கணத்தை எளிய முறையில் தந்தார். மொத்தம் 462 நூற்பாக்கள் உள்ளன.

**நேமிநாதம்:-** கி.பி. 12 – ஆசிரியர் குணவீரபண்டிதர். சமண சமயத்தவர். எழுத்து, சொல், இலக்கணங்களை 99 வெண்பாக்கள் இயற்றினார். இதற்குச் சின்னூல், என்னும் பெயரும் உண்டு.

**3. சொல் இலக்கண நூல்கள்:-**

**பிரயோகவிவேகம்:-** கி.பி. 17ல் ஆசிரியர் சுப்பிரமணிய தீட்சிதர், வடமொழியில் எழுதப்பட்ட நூலின் தழுவல்நூல். 4படலங்கள் 51 கட்டளைக் கலித்களைச் செய்யுட்களையும் கொண்டுள்ளது.

**இலக்கணக் கொத்து**:- கி.பி. 17ல் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர். தமிழுக்கு எ,ஒ, ழ, ற, ன என்னும் ஐந்து எழுத்துக்கள் மட்டுமே உள்ளன.

**4. பொருள் இலக்கண நூல்கள்:-**

**1. அகப்பொருள் இலக்கண நூல்கள்**:- 1. இறையனார் அகப்பொருள் தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியல்காரிகை, மாறன் அகப்பொருள் போன்றவை அகஇலக்கண நூல்கள் ஆகும்.

**2. புறப்பொருள் இலக்கண நூல்கள்**:- பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை புற இலக்கண நூல்கள் ஆகும்.

**5. யாப்பிலக்கண நூல்கள்:-**

யாத்தல் - கட்டுதல், எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை கொண்டு கட்டிச் செய்யுள் அழகுற உருவாக்கும் முறைகளை எடுத்துரைப்பதே யாப்பு இலக்கணம், அமிர்த சாகரர் இரு யாப்பியல் நூல்களை இயற்றியுள்ளார். யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்பன.

**6. அணி இலக்கண நூல்கள்**:-

**தண்டியலங்காரம்:-** வடமொழியில் தண்டி என்பவர் காவியதரிசனம் மொழியாக்கமே தமிழில் தண்டியலங்காரம் என்னும் சொல். இதன் ஆசிரியர் தண்டி நூற்பா.125

**மாறலைங்காரம்:-** ஆசிரியர் திருக்குறளைப் பெருமாள் அணிகள் 64. வடமொழிப் மரபினை ஒட்டியது.

**7. ஐந்திலக்கண நூல்கள் :-**

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும் கூறுவது ஐந்திலக்கண நூல் எனப்படும். வீர சோழியம் இலக்கண விளக்கம். தொன்னூல் விளக்கம், சுவாமி நாதம், முத்து வீரியம் போன்றவையாகும்

**8. பாட்டியல் நூல்கள் :**

இலக்கிய வகைகளையும், அவற்றின் யாப்பு வடிவங்கள் பற்றியும் வரையறுத்துக் கூறுவன பாட்டியல் வெண்பாப் பாட்டியல் நூல்கள். மொத்தம் 13 பாட்டியல் நூல்கள் உள்ளன. பன்னிரு பாட்டியல், வெண்பா பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், தொன்னூல் விளக்கம் இலக்கண விளக்கப்பாட்டியல் பிரபந்த மரபியல் முத்து வீரியம் பிரபந்த தீபிகை பாட்டியல் போன்றவையாகும்

**நிகண்டுகள்:**

அகராதிக் கலைக்கு அடிகோலியவர் தொல் காப்பியரே எனலாம் சொல்லதிகாரத்தில் இடையியல் ,உரியியல் என்னும் இரு இயலும் பொருளதிகாரத்தில் மரபியல் ஆகிய

பகுதிகளுக்கு அருஞ்சொற்களுக்கு தொல்காப்பியர் விளக்கமுறையைப் பின்பற்றியே பிற்காலத்தில் நிகண்டுகளும் அகராதிகளும் எழுந்தன. சொற்பொருள் விளக்க நூல்கள் நிகண்டுகள் எனச் சுட்டப்பட்டன.

''திவாகரர் இயற்றிய திவாகரம் 'முதல் நிகண்டு' எனப் போற்றப்படுகிறது. எனவே இதற்கு ஆதிநிகண்டு, ஆதிதிவாகரம் என்னும் பெயர்களும் உள்ளன. தமிழின் பெருமையை எடுத்தோதிச் சிறப்பு கொள்வது பிங்கலந்தை நிகண்டு ஆகும்.

திவாகரநிகண்ட காலத்தால் முற்பட்டது. சங்கச் சான்றோர் வழக்கு மிகுதி. இதன் முதல் நூல் ஆதி திவாகரம் என்பர். சேந்தகர் என்ற மன்னன் வேண்டுகோளால் சமணராகிய திவாகர முனிவரால் இயற்றப் பட்டடையின் சேந்தன் திவாகரம் என்ற பெயரும் உண்டு.

பிங்கல நிகண்டு திவாகரரின் மாணவர் பிங்கலமுனிவர் எழுதியது பிங்கலந்தை பத்தாம் நூற்றாண்டில் 14,700 சொற்களும் விளக்கமும் 1091 பல்பொருள் தரும்சொற்களும் உள்ளன.

சூடாமணி நிகண்டு குணபத்திர முனிவரின் மாணவர் இவர் மண்டல புருடர் என்பது பெயர். கிருட்டிண தேவராயரின் கி.பி 16 நூற்றாண்டு பன்னிரண்டு தொகுதிகளையுடைய இந்நூலே பலராலும் விரும்பிக் கற்கப்பட்டது. உரிச்சொல் நிகண்டு வெண்பாவினால் ஆனது முந்தியலை நூற்பா வடிவின. சலாம் என்ற சொல்லும் இடம் பெறுவதால் அருணகிரி நாதருக்குப் பிற்பட்ட காலத்தது இ∴து என்பர்.

கயாதர நிகண்டு கயாதர முனிவர் எழுதியது. கட்டளைக் கலித்துறை அகராதி நிகண்டு இரேவணசித்தரால் கி.பி 1594இல் எழுதப்பட்டது. சைவப்புராணம் பல பாடியவர் இவர் இது முதன் முதலாக அகர வரிசையில் சொற்களைக் கூறுவதால் உலகில் தோன்றிய முதல் அகரவரிசை அல்லது முதல் அகராதி என்று இதனைத் தமிழ் அகராதிக் கலை ஆசிரியர் புலவர் சுந்தர சண்முகனார் சிறப்பிட்டார்.

ஆசிரிய நிகண்டு செஞ்சிக்கடுத்த ஊற்றங்காலில் பிறந்த பாவாடை வாத்தியார் குமாரர் கண்டிப்புலவரால் எழுதப்பட்டது பின்பு வீரமாமுனிவரின் சதுரகராதி தோன்றியது. மேலைநாட்டு முறையில் தமிழில் அகராதிக் கலை வளரலாயிற்று.

**உரையாசிரியர்கள்:**

நூலாசிரியரின் அரிய கருத்துக்களை எல்லாம் உரையாளர் உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது. பெருகாரிகளாகிய உரையாசிரியர்களின் உதவி இல்லையாயின. பண்டை உயர் நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைத்த விலை வரம்பில்லாப் பொருள் மணிக்குவியல்களையாம் எங்ஙனம் பெறுதல் கூடும் என்பர்.

**1.இலக்கண உரையாசிரியர்கள்:**

நக்கீரர், இளம்பூரணார், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர், நன்னூல் உரையாசிரியர்கள் போன்றவை குறிப்பிடத்தக்கது.

> ''செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
>
> அறிவும் அருமையும் பெண்பாலான''

என்னும் தொல்காப்பிய(பொருள்:206)நூற்பாவிற்கு இளம்பூரணாரின் உரை,பொருள் விளக்கம் மிக்கதாக உள்ளது. 'செறிவு' என்பது அடக்கம், ' நிறைவு' என்பது அமைதி 'செம்மை' என்பது மனங்கோடாமை 'செப்பு' என்பது சொல்லுதல் அறிவு என்பது நன்மை பயப்பன தீமை பயப்பன அருமை உள்ளக்கருத்து உரைவிளக்கம் மூலம் அறியலாம்.

**இலக்கிய உரையாசிரியர்கள்:**

அரும்பதஉரையாசிரியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர். அடியார்க்கு நல்லார் எதுகை, மோனை முதலியவற்றுடன் இனிய சுவை பயந்து செய்யுள் நடையாக அமைந்துள்ளது. இவருக்கு நிரம்பையர் காவலன் உரைத் தென்றல் என்னும் சிறப்புப் பெயர்கள் உள்ளன.

பரிமேலழகர் திருக்குறள் முழுமைக்கும் உரை வகுத்துள்ளார் . பரிபாடலுக்கு உரை வகுத்தார். உரையாசிரியர்களுள் என்று ‘‘செக்கோஸ்லோவியா’’ அறிஞர் கமில்சுவலபில் பாராட்டுகிறார்.

**3. சமய இலக்கிய உரையாசிரியர்கள்:**

வைணவ சமய உரையாசிரியர்கள் நாதமுனிகள் அருளிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு எழுதிய உரைகள் வியாக்கியானங்கள் எனப்படுகின்றன.

சைவ சமய உரையாசிரியர்கள் சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் ‘பன்னிரு திருமுறைகளுக்கு உரை எழுதுதக் கூடாது’ என்னும் கொள்கை 20- நூற்றாண்டில் உரை வகுக்கத் தொடங்கினர். திருவாசகம் திருமந்திரம் பெரியபுராணம் என்னும் பல நூல்களுக்கு உரை எழுதினார்.

**4. பாட்டியல் உரையாசிரியர்கள்:**

பாட்டியல் நூல்களுள் காலத்தால் முற்பட்டது. பன்னிரு பாட்டியல் இதற்குக் கா.ரா.கோவிந்தராச முதலியார் விளக்கவுரை எழுதியுள்ளார். இலக்கண விளக்கப்பாட்டியலுக்கு நூலாசிரியரான தியாகராய தேசிகரே உரை இயற்றியுள்ளார். நவநீதப்பாட்டியலுக்கு மு.சண்முகம் பிள்ளை புதிய உரை இயற்றியுள்ளார்.

**5. சாசனத் தமிழ் உரைநடை**

பல்லவர் காலத்தில் எழுந்த சாசனங்களின் உரைநடை அமைதியை மூன்று வகைகளாக வகுக்கலாம். 1. முழுவதும் தனித்தமிழ், 2. ஒரு பாதி வடமொழி மறுபாதி தமிழ், 3. தமிழின் இடையிடையே வடமொழி என்பன அவை.

**6. இடைச்செருகல் உரைகள்**

பழைய, நூல்களின் பிற்காலத்தவர் எழுதிச் சேர்ப்பது இடைச்செருகல் எனப்படும். பூவோடு சேர்ந்த நாரும் மணப்பது போல் தன் கருத்து புகழடைய விரும்புதல், தன் கொள்கைக்கு முரணானவற்றை நீக்குதல், சிதைவுள்ள மூலப் பகுதிக்குப் பதிலாகத் தாமே எழுதிச் சேர்த்தல் என்பவை இடைச் செருகிலன் முக்கிய காரணங்கள்

**7. உரையாசிரியர்களின் உரை மரபுகள்**

உரையாசிரியர்களின் உரைகளைத் தொகுத்து நோக்கும் பொழுது பல பொதுவான பண்புகள் உரையெமுதலின் மரபாகக் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளமை புலனாகின்றன. அவை

நடைச்சிறப்பு

பிற உரைமறுப்பு

நாடகப் பாங்கு

இயைபு கட்டல்

சொற்பொருள் தருதல்

மேற்கோள் சுட்டல்

வடமொழிப் பயிற்சி

தருக்க முறை

பாடவேறு சுட்டம்

உரையில் உவமை கூறல்

போன்றவை உரையாசிரியர்களின் உரை மரபுகளாக இருக்கின்றன.

**வினாக்கள்**

1. சிற்றிலக்கியத்தின் வகை தொகைகளை எழுதுக?
2. சிற்றிலக்கியம் என்றால் என்ன?
3. சிற்றிலக்கியத்தின் கலம்பகம், தூது, உலாவிளக்குக?
4. குமரகுருபரர் பற்றி சிறுகுறிப்பு வரைக
5. பதினெண் சித்தர்கள் பற்றி எழுதுக?
6. நிகண்டுகள் பற்றி விவரிக்க?
7. திவாகர நிகண்டு, பிங்கலந்தை நிகண்டு பற்றி குறிப்பு வரைக
8. உரையாசிரியர்களின் இலக்கண நூல்களை தொகுத்து எழுதுக?
9. இலக்கண உரையாசிரியர்களின் நூல்களை விவரித்து எழுதுக?
10. உரையாசிரியர்களின் உரை மரபுகளை எழுதுக.

**வினாக்கள்**

1. சிற்றிலக்கியங்கள் எவை?
2. சிற்றிக்கியத் தோற்றம் மற்றும் வளர்ச்சியினைத் தருக?
3. சிற்றிலக்கிய வகை தொகைகளை விவரி
4. தூது என்றால் என்ன?
5. ‘உலா’ குறிப்புரைகள்
6. ‘பரணி’ விளக்குக
7. பிள்ளைத்தமிழ் என்றால் என்ன?
8. ஆற்றுப்படை நூல்கள் எவை?
9. குறவஞ்சி, பள்ளு இலக்கியம் குறித்தெழுதுக
10. சதகம் என்றால்எ ன்ன?
11. மடலி விளக்குக
12. தாயுமானவர் சுவாமிகள் யார்?
13. சிவப்பிரகாச சுவாமிகளின் படைப்புகளைத் தருக
14. ‘வள்ளலார்’ குறித்தெழுதுக
15. பதினெண்சித்தர்கள்’ யார்?
16. இலக்கண நூல்கள் - விளக்குக
17. நிகண்டுகள் என்றால் என்ன?
18. உரையாசிரியர்கள் குறித்தெழுதுக

## அலகு – 5
## மேனாட்டார் வருகையும் தமிழ் இலக்கியப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களும்

**முன்னுரை**

மேலை நாட்டார் வருகையின் வாயிலாகவே தமிழ் நாடெங்கும் ஓங்கி உயர்ந்து வளர்ந்தது. அச்சு இயந்திரக் கண்டுபிடிப்பு மேலை நாட்டாருக்கு உரியது அச்சு இயந்திரத்தின் சாயிலாகவே தமிழ் உரைநடைகள், கவிதைகள், கட்டுரைகள் அனைத்தும் வளர்ச்சி பெற்றன எனலாம்.

மேலைநாட்டார் வருகை

மேலைநாட்டாரின் வருகை சமயப்பரப்புதலை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், அவர்களில் அச்சு இயந்திரத்தின் மூலம், தமிழ் இலக்கியங்கள் வெகுவாக வளர்ச்சி பெற்றன எனலாம். வீரமாமுனிவரின், பரமார்த்த குருகதை, சீகன்பால்கு ஐயர், மார்டாக்துரை போன்றோரின் தமிழ் வளர்ச்சித் தொண்டு அளவிடற்கரியது. கி.பி. 1812-ல் சென்னைக் கல்விச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் ஆங்கிலேயர்கள் தமிழ் கற்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். பதினாறு, பதினேழாம் நூற்றாண்டில் கிறித்தவர்கள், தங்களின்மதக்கொள்கைகளைப் பரப்பத் தமிழில் மொழி பெயர்த்து எழுதினார்கள்.

சேவியர், பிரிட்டோ, தத்துவ போதகர், வீரமாமுனிவர், கால்டுசெல்ஐயர், ஜார்ஜ் எல் ஹார்ட், ஆல்பர்ட் சுவைட்சர் வேதநாயகம் பிள்ளை, போன்றோர் தமிழை வளர்ப்பதில் பெருந்தொண்டாற்றியவர்கள்.

திறனாய்வுத்துறையில் பெரும்பங்காற்றியோர் மேலை நாட்டார். இலக்கணம், நிகண்டு போன்ற தமிழ் இலக்கியத்துறைகளுக்கும் மாபெரும் வளர்ச்சியை ஏற்படுத்தினர். இன்று கடல்கடந்த நாடுகளிலும் தமிழர்களின் நூல் வலம்வந்து கொண்டிருக்கிறது.

**உரைநடை**

அச்சு இயந்திரத்தின் வாயிலாகச் சமயப் பரப்புதலை நோக்கமாகக் கொண்டு ஐரோப்பியர்கள் எழுதிய உரைநடை, இன்றைய உரைநடைக்கு வித்தாக அமைந்தது. வீரமாகுனிவரின் 'பரமார்த்த குருகதை.' இனிய எளிய உரைநடை வடிவைத் தமிழுக்குத் தந்தது. சீகன்பால்கு ஐயரின் முயற்சியால் தமிழகத்தில் நெல்லை மாவட்டம் தரங்கம் பாடிக்கு முதலாவதாக அச்சு இயந்திரம் வந்தது. இதன் மூலம் புராண இதிகாசங்கள் உரைநடையில் எழலாயின.

**தமிழின் தொடக்க கால உரைநடை**

தமிழில் மெல்ல உரைநடை வடிவம் உருக்கொள்ளலாயிற்று உரைநடையில் நூல் இயற்றும் வழக்கம் ஐரோப்பியரின் தொடர்பில் ஏற்பட்டது என்று மார்டாக்துரை குறிப்பிடுகின்றார். நீண்ட வாக்கியங்களாக எழுதப்பட்டுக் கொண்டிருந்த பழக்கத்தை ஐரோப்பியர்கள் மாற்றி அமைத்தனர். வார்த்தைகளுக்கு இடையே இடைவெளி விட்டு எழுதும் முறையைப் புகுத்தினர். உரைநடை வடிவமைத்தவர்களில் குறிப்பிடத்தக்கோர், ஆறுமுகநாவலர், இராமலிங்க அடிகளார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சிங்காரவேலு முதலியார், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், எம்.எஸ்.பூரணலிங்கம் பிள்ளை, மறைமலையடிகள், மு.இராகவையங்கார், பரிதிமாற்கலைஞர், இரசிகமணி திரு.வி.க. கா.சுப்பிரமணியபிள்ளை, வேங்கடசாமி நாட்டார். இரா.பி.சேதுப்பிள்ளை ஞா. தேவநேயப்பாவாணர் மு.வ.வ.சுப.மாணிக்கம் போன்றோரைக் குறிப்பிடலாம்.

**உரைவகைகள்**

தமிழில் தோன்றிய உரைநூல்கள் மிகப்பலவாகும். அவைகள் பலவகைகளாகக் கிளைந்தன. இலக்கணவுரை, இலக்கியவுரை, சாத்திரவுரை, மணிப்பிரவாளவுரை எனப்பகுக்கலாம். உரையாசிரியர்கள் எனும் நூல் முதலில் தோன்றிய பெருநூலாகும். தமிழுக்கு உரையாசிரியர்களின் கொடை அளப்பரியது. தமிழில் தோன்றியுள்ள

உரைகளுக்கும் நீண்ட வரலாறுண்டு கி.பி எட்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை உரைகள் மேலோங்கிய காலம் எனலாம்.

உரையாசிரியர்கள் சொற்பொருள் விளக்கம் தருதல், கொள்கை விளக்கம் செய்தல், வைப்பு முறைக்குக் காரணம் காட்டுதல், இலக்கணக் குறிப்புத்தருதல், எடுத்துக்காட்டுத் தருதல், சிறப்பு விளக்கம் தருதல், வரலாறு கூறுதல் திறனாய்வு செய்தல் ஆகிய பணிகளைச் செவ்வனேயாற்றித் தம் உரைகளைச் சிறக்கச் செய்தனர். உரையாசிரியர்கள் வினாவிடை முறையில் அளவை இயலிற்போல எழுதுதலும் எதனையும் ஒரு நிரல்படவும் ஒரு நெறிபடவும் கூறுதலும் அவர்கள் வழக்காறாகும்.

**இலக்கண உரைகள்**

இறையனார் அகப்பொருள் உரையே காலத்தால் முற்பட்டது. நக்கீரரால் உரைக்கப்பட்டுப் பத்துத்தலைமுறை வரை செவிவழியாகக் கேட்கப்பட்டு வந்து பிறகு எழுதப்பட்டது அ∴து எழுதப்பட்ட காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு என்பர். செம்மாந்த இலக்கிய நடையில் இ∴து எழுத்பபட்டுள்ளது. இலக்கிய நடை பயில்வார்க்கு இது மிகுந்த சுவையாகும் முன்பு பலர் இதை மனப்பாடம் செய்து பழகுவர். தொல்காப்பிய முதல் உரையாசிரியர் ‘இளம்பூரணர்’ ‘ரோசிரியர்’ தம் சிறப்புப் பெயரால் மட்டுமே அறியப்படும் இவர் இளம்பூரணருக்குப் பிற்பட்டவர் பொருளதிகாரத்தின் பின்னான்கு இயல்களுக்கு மட்டுமே இவருரை கிடைத்துள்ளது. நச்சினார்கினியார் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்கினியர் என்று இவர் போற்றப்படுகிறார் இவர் உரைகளே இன்று மிகுதியாகக் கிடைக்கின்றன. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் முழுமைக்கும் இவருரையுண்டு.

**மயிலைநாதர்**

இவர் நன்கெலுக்கு முதன் முதல் உரை எழுதியவர். இவர் சமணர் சுருக்கமும் தெளிவும் உடையது இவர் உரை பல அரிய குறிப்புக்களையுடையது இவ்வுரை.

**சங்கரநமச்சிவாயர்**

பதினேழாம் நூற்றாண்டில் திருநெல்வேலியில் தோன்றி நன்கெலுக்கு விரிவான உரையெழுதிப் புகழ்பெற்றவர். இவர் திரவாவடுதுறை மடத்து ஈசான தேசிகரின் மாணவர். அம்மடத்துப் பெரும்புலவர் சிவஞானமுனிவர் சங்கரநமச்சிவாயரின் புத்துரையைப் பெருக்கி, விரித்தெழுதினார்.

**இலக்கியவுரைகள்**

அடியார்க்கு, நல்லாரும், பரிமேலழகரும் குறிப்பிடத்தக்கவர்கள். முற்காட்டியவர்களில் நச்சினார்கினியரும் பேராசிரியரும் இலக்கியங்கட்டும் உரைகண்டுள்ளனர். அடியார்க்கு நல்லார் பொப்பண்ண காங்கேயனால் ஆதரிக்கப்பட்டவர். நிரம்பை என்ற ஊரினர். கி.பி. 12ம் நூற்றாண்டு இவர் காலம் என்பர். அடியார்க்கு நல்லார் உரை இசை, நாடகத்தமிழ் நூல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. அதிகார முன்னுரை, வைப்புமுறை விளக்கம், குற்களிடையே இயைபு, சிறப்பு விளக்கம், இலக்கணக்குறிப்பு ஆகியவை பரிமேலழகரின் திறனை விளக்குவன.

**நாலாயிர உரைகள்**

திருக்குருகைப்பிரான் - ஆறாயிரப்படி திருவாய்மொழி பிள்ளான் நஞ்சீயர் - நம்பிள்ளையின் திருவாய்மொழி, ஒன்பதாயிரப்படியை எழுதி வைத்தவர். திருப்பள்ளிஎழுச்சி உரை, திருவிருத்த உரை, பெரிய திருமொழிஉரை.

வடக்கு திருவீதிப் பிள்ளை – திருவாய்மொழிக்கு முப்பதாயிரப்படி எழுதியவர்
இன்னும் பெயர் தெரியாத, தெரிந்த பழைய உரையாசிரியர்கள் பலராவர்

**சாந்திவுரைகள்**

குறில் குறிப்பிடத்தக்கது சிவஞானமுனிவரின் சிவஞானப் போதக பேருரையே ஆகும். தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தி, நன்னூல் திருத்தியுரை இவரெழுதிய இலக்கண உரைகள். சிவஞான மாவாடியப் பேருரை, சிவஞான போதச் சிற்றுரை, சிவஞானசித்தியார் பொழிப்புரை என்பன இவர் எழுதிய சாத்திரவுரைகள்

**மணிப்பரவாளம்**

மணி தமிழ்ச்சொல், பிரவாளம் (பவளம்) வடசொல் இதுபோல இருமொழிச் சொற்களையும் கலந்து எழுதுவது அழகாக இருக்கும் எனச் சமணர்களாலும் பின்பு வைணவ உரையாசிரியர்களாலும் பின்பற்றப்பட்டது. முற்கூறிய நாலாயிர திவ்வியப்பிரபந்த ஈட்டுரைகள் அனைத்தும் மணிப்பிரவாள நடையினவே. மிகச்சிறந்த திறனாய்வுப் பெட்டகமாகிய அவை இந்நடைப்போர்க்கால் மக்களிடம் பெரிதும் பரவாமல் போயின.

**இசைநாடக இலக்கியம்**

**முன்னுரை**

பல்லவர் காலம் தொடங்கி நாய்க்கர் காலம் வரை தமிழ் இசையும் நாடகமும் தனி வளர்ச்சி குன்றிக் கலப்பும் திரிபும் உடையவயையாயின. இதனால் தமிழில் நாடக இலக்கியம் உண்டென்பதையும், இசைத்தமிழ் என ஒன்று ஈடும் எடுப்புமின்றி இருந்ததையும் ஆராய்ந்து மெய்ப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

**இசைத்தமிழ்**

இசைத்தமிழ் வரலாறும் தமிழில் மிக நீண்டதொன்றாக அமைகிறது, சுவாமி விபுலானந்தரின் யாழ் ௗநுல் கற்பார் இவ்வுண்மையை உணர்வர். தமிழிசை ஆய்வுக்கு அது மிகக் உறுதுணையாக அமையும். இறையன்ரகப் பொருள் உரையில் குறிக்கப்படும் இசைத்தமிழ் நூல்கள் வருமாறு, முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை, சிற்றிசை, பேரிசை, பரிபாடல், மேலும் பெருநாரை, பெருங்குரு, பஞ்சுமரபு, பஞ்சபாரதீயம், தாளசமுத்திரம், கிச்சபுடவெண்பா, இசைநூலகம், தாளவகையோத்து, இசைத்தமிழ் என்பனவாகும்.

பரிபாடலில் இருபத்திரண்டு பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. அப்பாடல்கள் கீழே இசைப்பண்ணும் இசை அமைத்தவர் பெயரும் குறிக்கப்படுகின்றன. குரல், துத்தம், கைக்கிளை, உழை, கிளி, விளரி, தாரம், என ஏழுநிலைகள் தமிழற்சுட்டப்படும். இடைக்காலைத்தில் இசையோடு தமிழ் பாடிய தேவார, திருவாசகம் தமிழிசை வளர்ச்சியைக் காட்டுவன. அருணகிரி நாதர் திருப்புகழ் பாடி இசைத்தமிழை வளர்த்தார். 1008 மேளகர்த்தாப் பண்களுக்கும் அவர் திருப்புகழ் பாடினார் என்பர். நாயக்கர் காலத்தில் தமிழிசை சிறிது வேறுபட்டுத் தெலுங்குக் கீர்த்தனைகளையே பாடும் கருநாடக இசையாக உருக்கொண்டது.

'குறவஞ்சி' நூல்கள் நல்ல இசைப்பாடல்களைக் கொண்டு படைக்கப்பட்டன. சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடக் கீர்த்தனைகள், கோபாலகிருஷ்ண பாரதியின் நள்தனார் சிரித்திக்கீர்த்தனைகள் போலப்பல நூல்கள் தமிழிசை வளர்ச்சியை நிலைநிறுத்தியவை. வள்ளலார் இராமிங்கமும், சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரும் கீர்த்தனைகளும் காவடிச்சிந்தும் பாடியவர்கள். குணங்குடி மஸ்தான் சாகிபு, கவி குஞ்சர பாரதி, முத்துத்தாண்டவர், மாயூரம் வேதநாயகம் பிள்ளை போன்றோரும் இசைத்தமிழ் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர்கள் ஆவர்.

பாரதியார் பண் அமைந்த பாடல்கள் பல பாடினார். தேசிக விநாயகம்பிள்ளை பல கீர்த்தனைகளை இயற்றினார். பாரதிதாசன் இசையமைதி பொருந்திய பாடல்களை மிகுதியும் பாடித் தமிழிசையை மேலும் வளப்படுத்தியவர். யோகி சித்தானந்த பாரதியார், பெரியசாமித் தூரன் போல்வார் தமிழிசைப் பாடல்களை மிகுதியாகப் பாடின. மதுரைத் தமிழிசைச் சங்கம் வளர்த்து, தமிழிசை இயக்கத்தை வலுவுடையதாக்கியவர் முத்தையா வேள்.

**நாடகத்தமிழ்**

இசையுடன் கூடித் தமிழ் நாடகமும் அன்று முதல் இன்று வரை வளர்ச்சி பெற்றது. மறைந்து போன நாடக நூல்கள் பல. சியந்தம், செய்யிற்றியம், முறுவல், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, கூத்த நூல் என்ற அவை குறிக்கப்படுகின்றன. இடைக்ாகலச்சோழர் காலத்தில் நாடகங்கள் எழுதப்பட்டு நடிக்கப்பட்டதை, அக்காலக்கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. தஞ்சைப் பெரிய கோயிலில் ‘இராசராசேச்சுவர நாடகம்’ நடிக்கப்பட்தற்கான குறிப்பு இராசாசின் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

**பள்ளு, குறவஞ்சி நாடகம்**

உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு பள்ளர்களின் வாழ்வை ரெட்டி அமைந்த நாடகமே பள்ளு நாடகமாகும். இதில் வெள்ளம் வருவது, பலவகை மாடுகள், விதைத்தல், நாற்று நடுதல் பற்றியெல்லாம் சிறந்த நாட்டுப் புறப்பாடல்கள் பல இசையுடன் கூடிய இலக்கிய வடிவம் பெற்றுள்ளன.

குறித்த காதலால் வருந்தம் தலைவியிடம் சென்று குறிசொல்வதாகப் பாடுவதே குறம், குறவஞ்சி எனப்பட்டது. குமரகுருபரரின் மீனாட்சியம்மை குறம் நாடகமாக அமையவில்லை. சிவக்கொழுந்து தேசிகள் எழுதிய சிரபேந்திரபூபாலக் குறவஞ்சி நாடகமாக அமைந்துள்ளது. கும்பேசர் குறவஞ்சி நாடகம், அர்த்த நாரீசுவரக்குறவஞ்சி திருவாரூர் குறவஞ்சி போன்ற நூல்களும் தோன்றின.

**நொண்டி நாடகம் :**

தீயவழிகளில் நடந்து ஒழுக்கம் கெட்டுப் பிரத்தையரிடம் உறவு கொண்டு, முடிவில் துன்பப்பட்டு, நொண்டியாகி வருந்துவதாகக் கற்பனை செய்து பாடுவன இவ்வகையின் சீதக்காதி நொண்டி நாடகம் புகழ்பெற்றது. திருடன் மனம் மாறி மெக்காவிற்குச் சென்று திருந்திவெட்டப்பட்ட காலைத் திரும்பவும் பெற்றுத் திரும்பி வருவதாக இக்கதை கூறுகிறது. சிந்து என்னும் யாப்பினால் பாடப்பட்டதால் ‘நொண்டிச்சிந்து’ என்றே பாட்டு அழைக்கப்பட்டது.

**கீர்த்தனை நாடகம்**

சீர்காழி அருணாகிரிக் கவிராயர் பாடியது இராமநாடகக் கீர்த்தனைகள் அசோகமுகி நாடகம், சீர்காழித்தலபுராணம், அனுமார் பிள்ளைத்தமிழ் எல்லாம் அவர் எழுதியிருந்தாலும் அவருக்கு அழியாப்புகழ் தந்தது இராம நாடகமே. முழுவதும் பாடல்களாகவே அமைக்கப்பட்டது இந்நாடகம் நல்ல ‘மெட்டு’ அமைந்த மக்கள் விரும்பிக் கேட்கும்படியான இசைப்பாடல்களின் தொகுதி இது.

**சங்கரதாஸ் சுவாமிகள்**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகப்பணி புரிந்து, தமிழ் நாடகத்தைச் சிறக்கச் செய்த துறசிகுவர். தெருக்கூத்து வகை புகழ்பெற்றுத் திகழ்வதைப் பார்த்து அதே பாணியில் நாடகங்களை எழுதி மேடையேற்றிப் புகழ்பெற்றார். இவருடைய நாடகங்களில் பாடல்கள் மிகுதியாக இருக்கும். உரைநடை குறைவாக இருக்கும் இரண்டும் செந்தமிழ் நடையில் இலக்கணப் பிழையின்றிக் காணப்படும். அவை புராணக்கதைகளை ஒட்டியவை. நீதி போதனை மிக்கவை. பிரகலாதன், சிறுத்தொண்டர், பவளக்கொடி, லககுசா போன்ற நாற்பது நாடகங்களை எழுதி இவர் மேடையேற்றியுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களடங்கிய ‘அபிமன்யு’ நாடகத்தை ஒரே இரவில் எழுதிய சிறப்பிற்குரிய படைப்பாளர் இவர் இன்றைய தமிழ் மேடை நாடகத் தந்தை’ என்று போற்றுகிறார்கள்.

**சம்பந்த முதலியார்**

‘தமிழ் நாடகப் பேராசிரியர்’ என்று போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியார் (கி.பி. 1873-1964) தமிழ் நாடக வளர்ச்சியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினார். பாடல்களை மிகவும் குறைத்து, மேனாட்டு முறையை ஒட்டி எளிய உரையாடல்களுடன் கூடிய நாடகங்களை இவர்

படைத்தார். மக்கள் வாழ்க்கைப் பின்பற்றினார். நீதிபதி போன்ற உயர்பதவியில் இருந்தாலும் 'சுகுண விலாச சபா' என்ற நிறுவனத்தின் மூலம் பல நாடகங்களை அரங்கேற்றி, அக்கலைக்கு இருந்து வந்த இழிவைப் போக்கினார். இரத்தினாவெளி, மனோகரா, இரண்டு நண்பர்கள், கள்வர் தலைவன் வேதாள உலகம் என்பன இவரின் புகழ்பெற்ற நாடகங்கள் 'சபாபதி' நகைச்சுவை நாடகம் சேக்ஸ்பியர் நாடகங்களைத் தமிழில் தந்தவர். வடமொழி நாடகங்கள் சிலவும் இவரால் தமிழாக்கப்பட்டன.

**சிறுகதை**

**சிறுகதையின் இலக்கணம்**

கற்பனைக் கதைகள், உண்மை நிகழ்வுகள், மற்றும் நகைச்சுவை கலந்தே சிறுகதைகள் எழுதப்படும். இவற்றை முறையே தொல்காப்பியர் கூறிய பொருளோடு புணராப் பொய்மொழி பொருளோடு புணர்ந்த நகைமொழி என்று கூறியவற்றோடு ஒப்புணரத் தக்கன. எட்டுத் தொகைப் பாடல்கள் அனைத்தும் சிறுகதை வடிவின எனலாம்.

தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சக்கட்டம் முடிவு என்னும் 5 கூறுகளைச் சிறுகதை கொண்டிருக்கும் அதிகபட்சம் இரண்டு மணி நேரத்திற்கு மேல் கதைநீளக்கூடாது. குதிரைப் பந்தயத்தின் தொடக்கம் முடிவு போல் கூர்மை கொண்டிருக்க வேண்டும். கிளைக்கதைகள் கூடாது. கதையில் கூறப்படும் ஒவ்வொரு நிகழ்வும் கதையோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பன சிறுகதைக்கான வரையறைகள்.

**சிறுகதை வரலாறு**

கதை கூறலும் கேட்டலும் மனித வாழ்க்கையில் கலந்த ஒன்று. எனவே ஒவ்வொரு மனித சமூகத்திலும் கதைகள் நிரம்ப உள்ளன. எனவே சிறுகதையைக் தனியொரு இலக்கியமாகக் கருதுகின்ற நோக்கினை அமெரிக்காவைச் சேர்ந்த எட்கர் ஆலன்போ தொடங்கி வைத்தார். மேனாட்டார் வரவும் வளர்ச்சியும் பத்திரிக்கைகளின் பக்கபலமும் சிறுகதைகளின் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன. 18ம் நுற்றாண்டில் வீரமாமுனிவர் எழுதிய 'பரமார்த்தகுருகதை' தமிழ்ச்சிறுகதைகளின் முன்னோடி எனலாம்.

**19ம் நூற்றாண்டில் சிறுகதை எழுத்தாளர்கள்**

வீராசாமிச் செட்டியாரின் விநோதரசமஞ்சரி, தாண்டவராய முதலியாரின், பஞ்சதந்திரக் கதைகள் செவ்வதேசவராயமுதலியாரின் அபிநயக்கதைகள் சிறுகதை உருவில் உருப்பெறத் தொடங்கின வ.வே.சு ஐயரின் மங்கையர் கரசியின் காதல், முதலிய கதைகள் வ.வே.சுவின் தொகுப்பு அ.மாதவையின் பெண்கள் முன்னேற்றம் மூடநம்பிக்கை விடுதலை நோக்கு காணப்படுகிறது.

**இதழ்சார் எழுத்தாளர்கள்**

1933 முதல் 55 வரை 'மணிக்கொடி' இதழ் சிறுகதையை ஓர் இயக்கமாகக் கொண்டு வளர்த்தது. 'எழுத்து' இதழும் இதில் பங்கு கொண்டுள்ளது. இதில், கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, தி.ஜானகிராமன், சி.சு.செல்லப்பா, டி.எஸ்.இராமையா, புதுமைப்பித்தன், வல்லிக்கண்ணன், அசோக மித்திரன், கல்லி ஆகிய எழுத்தாளர்களின் சிறுகதைகள் வெளிவந்தன.

**இதில் சாரா எழுத்தாளர்கள்**

மு.வ.கி. ராஜநாராயணன் சி.வா. ஜகந்நாதன், ஜெகசிற்பியன், சு.சமுத்திரம், சுப்ரபாரதிமணியன் போன்றோர்.

**பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்**

பெண்களின் சிக்கல்கள் 1970-களுக்குப் பிறகு நேரடியாகப் பெண்களே பேசிக்களத்தில் இறங்கினர். அதன் விளைவாக பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் உலக அரங்கில்

உள்ளது உள்ளபடி அரங்கேறத் தொடங்கின. பெண் எழுத்தாளர்களில், இராஜம்கிருஷ்ணன், அம்பை, சூடாமணி, அனுராதா ரமணன், திலகவதி, பாக்யா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**புதினம்**

மேனாட்டார் தொடர்பால் தமிழுக்குக் கிடைத்த புதிய இலக்கிய வகை புதினம். புதினம் என்னும் சொல் 'ழேளநட' என்னும் சொல்லில் இருந்து வந்தது. ழேளநட என்றால் நேறநௌள என்று பொருள் இப்பொருளின் அடிப்படையிலேயே ழேளநட என்பது புதினம் எனத்தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

சிறுகதை ஒரு மாளிகையின் சாளரம் என்றால், மாளிகையின் மொத்தப்பரப்பும் புதினம் ஆகும் என்கின்றார் ஜியார்ஜமூர் என்னும் அறிஞர் புதினத்தைச் சமகாலச் சரித்திரம் எனலாம். தமிழின் முதல் புதினம் (பிரதாப முதலியார் சரித்திரம் 1879)

மாயூரம் நீதிபதி வேதநாயகம்பிள்ளை அவர்கள் 1879இல் பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் புதினத்தைப் படைத்தார். தமிழில் இம்மாதிரி உரைநடை நவீனம் பொது மக்களுக்கு அளிக்கப்படவில்லை. ஆகையால் இந்நூல் வாசகர்களுக்கு இரசமாகவும் போதனை நிறைந்ததாகவும் இருக்கலாம் எனப்பெருமை கொள்கிறேன் என்று புதினதத்தின் முன்னுரையில் வேதநாயகம் தெளிவு செய்கின்றார்.

**தமிழின் முதல் மூன்று புதினங்கள்**

| புதினம் | ஆண்டு | ஆசிரியர் |
|---|---|---|
| 1. பிரதாபமுதலியார் சரித்திரம் | 1879 | மாயூரம் வேதநாயகம் பிள்ளை |
| 2. கமலாம்பாள்சரித்திரம் | 1898 | இராஜம் ஐயர் |
| 3. பத்மாவதி சரித்திரம் | 1898 | அ.மாதவையா |

**துப்பறியும் புதினங்கள்**

ஆங்கிலம் தெரிந்த தமிழ் எழுத்தாளர்கள் ஆங்கில மொழியின் தழுவலாகப் பல துப்பறியும் புதினங்களைப் படைத்தனர். ஆரணிகுப்புசாமி முதலியார், வடுவூர்கே துரைசாமி ஐயங்கார், கோ.ஆர். ரங்கராஜ், கோதை நாயகி அம்மாள் போன்றோர் பிறர் துப்பறியும் சாம்பு மூலம் நகைச்சுவை ஊட்டும் தேவன். சங்கர்லால் மூலம் துப்பறியும் தமிழ்வாணன், கணேஷ் வசிந்தமூலம் புகழ்பெற்ற சுஜாதா, விவேக் ரூபலா பாத்திரங்களை உலவவிட்டு அறிவியற்கருத்துக்களையும் சேர்த்து எழுதிய ராஜேஷ்குமார் முதலானோரும் துப்பறியும் புதினத்துறையில் புகழ்பெற்றோர் ஆவர்.இ

**சமூகப்புதினங்கள்**

சமூக வாழ்வியலின் மக்கள் சிக்கல்களை அடிப்பைடயாகக் கொண்டு எழும் புதினங்கள் இவை, கல்கியின் தியாகபூமி, கள்வனின் காதலி, மகுடபதி, அலைஓசை முதலான பல பங்களிப்புகள் மூலம் சாதிக்கொடுமை, விதைக்கொடுமை, பொருந்தமணம் இவற்றிற்கு எதிராகக் குரல் கொடுத்து விடுதலை வேட்கையை ஊட்டினார் அகிலன் கதைப்படைப்பிலும் பாத்திரப்படைப்பிலும், இலக்கியப் படைப்பிலும் தனித்தன்மையுடையார். தமிழ் எழுத்தாளர்களில் முதல் முதலில் ஞானபீடப்பரிசு பெற்றவரும் இவரே. மு.வரதரானார் தமிழ்நாட்டுப்பௌ்னாட்ஷா் என்ற பாராட்டைப் பெறுவர். பாவை, கயமை, வாடாமலர், கள்ளோ காவியமோ, பெற்ற மனம், கரித்துண்டு என 15 புதினங்கள் எழுதியுள்ளார். அகல்விளக்கு சாகித்திய அகாடமி விருது பெற்றது. மேலும் நா.பார்த்த சாரதி, கோ.வி.மணிசேகரன், சுந்தரராமசாமி போன்றோரும் குறிப்பித்தக்கோர்.

இவைதவிர வராற்றுப் புதினங்கள், வட்டாரப் புதினங்கள், மொழிபெயர்ப்பு புதினங்கள், தழுவல் புதினங்கள், கூட்டுப்புதினங்கள், குறும்புதினங்கள் எனப் பலவகைப் புதினங்கள்

படைக்கப்பட்டு வருகினற்ன இன்று பல ணெ் எழுத்தாளர்களும் தங்களின் படைப்புகளைச் செவ்வனே வெளியிட்டு வருகின்றனர். ஹெப்சியா ஜேசுதாசன் லக்ஷ்மி, வாஸந்தி, சிவசங்கரி, ரபாக்யா.. எனக் கூறிக்கொண்டே செல்லலாம்.

**மரபுக்கவிதை**

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டினை மறுமலர்ச்சிக்காலம் எனலாம் இந்தியவிடுதலைப் போராட்டமும் மேலைநாடுகளின் இலக்கியக் கோட்பாட்டுத் தாக்கமும் புதிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டன. பழைய மரபுகளிலிருந்து புதிய கண்ணோட்டங்கள் விரிய ஆரம்பித்தன. சிற்றரசர்களைப் பாடி புகழ்ந்து துதிபாடி, உலா மடல் எனப்பாடும் நிலையில் மாற்றம் விளைந்தது. விடுதலை வேட்கையும், ஆங்கிலேயரின் ஆதிக்கப்போக்கும் சமூக ஆர்வலர்களைத் தட்டி எழுப்பியது. பாரதியார் உள்ளிட்ட கவிஞர்கள் சமூகம் குறித்துப் பாடத்தொடங்கினர். இத்தகைய ஒன்றுபட்ட உணர்வோட்டங்கள் ‘பாரதி பரம்பரை’ என்ற புதியதொரு பாதையை உருவாக்கியது.

**பாரதியார் (1882-1921)**

இயற்பெயர் சுப்ரமணியன் எட்டயபுரத்து அரசவைக் கவிஞராக இருந்தார். அங்கு ஜமீன்தாரிடம் அடிவருடியாக இருக்கப்பிடிக்காமல், வெளியேறினார். இவரது விடுதலை உணர்ச்சிக்கு வ.உ.சி. கிலார் முதலானோர் உரமிட்டனர். அதன்விளைவாக 1921 லேயே

‘ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று’

என்று விடுதலைப் பாடல் பாடினார்.

பாரதி பாடல்களில்

‘பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை அற்றிடும் காணீர்

என்பதன் மூலம் பெண் முன்னேற்றச் சிந்தனையைப் பாடுகிறார். மேலும் ஒருமைப்பாட்டுச் சிந்தனை, சாதியம் களைதல், தமிழ்ப்பற்று போன்றச் செய்திகளையும் பாடியுள்ளார்.

**பாரதிதாசன் (1891-1964)**

இயற்பெயர் ‘கனகசுப்புரத்தினம்’ பாரதியார் கவிதைகளில் கொண்ட ஈடுபாட்டால் பாரதிதாசன் ஆனார். பெண் முன்னேற்றம், பொது வுடைமை மூடப்பழக்க எதிர்ப்பு முதலான கொள்கைப் பாடல்களின் மூலம் ‘புரட்சிக்கவி’ எனப்போற்றப்படுகிறார். தொடக்க காலத்தில் பாரதிதாசன் கடவுள் நம்பிக்கை கொண்டிருந்தார் பாரதியின் முதில் அறிமுகத்தில் ‘பாடு’ எனக்கேட்க,

‘ஏங்கெங்கு காணினும் சக்தியடா-தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா’

எனப்பாடியதன் மூலம் அறியமுடிகின்றது. மேலும் பெண்கல்விச் சிந்தனை. விதவை மறுமணச்சிந்தனை, பொதுவுடைமைச் சிந்தனை குறித்தும் கவி பாடியுள்ளார். பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், முதலியன இவரது குறங்காப்பியங்கள்

**கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை (1876-1954)**

கவிமணியின் பாடல்கள் ‘மலரும் மாலையும்’ என்னும் தொகுப்பாக வெளிவந்துள்ளது. தமிழ், மலையாளம், ஆங்கிலம் என மும்மொழிப்புலமை வாய்ந்தவர். தமிழக்கவிதை, கல்வெட்டு ஆராய்ச்சி, சமுதாய சீர்திருத்தம் பெண்விடுதலை ஆகிய தளங்களில் ஈடுபாடு கொண்டவர் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், குழந்தைச் செல்வம் கீர்த்தனைகள் முதலானவையும் இவரது படைப்புகள்.

‘உள்ளத்து உள்ளது கவிதை - இன்ப
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை

தெளிந்து உரைப்பது கவிதை

எனக் கவிதைக்கு இலக்கணம் கூறியுள்ளார். மொழி பெயர்ப்பு கவிதைகள் பல இயற்றியுள்ளார். கவிமணி பட்டம் பெற்றவர். 'பெண்ணின் பெருமை' பேசியவர் நாமக்கல் கவிஞர். வெ.இராமலிங்கம் பிள்ளை (1888-1972)

திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது. காந்தி துவின விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது என மூதறிஞர் இராசகோபால் உரைக்கின்றார். காந்தியக் கவிஞர் என்பபோற்றப்படுகின்றார். வேதாரண்யம் உப்புச்சத்தியாக் கிரகத்தின் பொழுது காந்தியைக் குறித்து,

'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை நம்பும்யாரும் சேருவீர்'

எனப்பாடியது இவரைக் காந்தியவாதியாக அடையாளப்படுத்தியது. தமிழின் பெருமை பாடியுள்ளார். 'அவனும் அவளும்' சிங்கொலி, தமிழ்தேர் முதலானவை இவரது கவிதைத் தொகுப்புகள்.

**பிற கவிஞர்கள்**

சுரதா – உவமைக்கவிஞர் எனச்சிறப்பிக்கப்படுபவர் நெய்தல் நீர், சிரிப்பின்றிதழ், சுவரும் சுண்ணாம்பும் துறைமுகமம் இவரது பாடல் தொகுப்புகள்.

வரிணதாசன் ர.மு எனும் புனைப்பெயர் கொண்டவர் தமிழச்சி, கொடிமுல்லை, பொங்கற்பரிசு, இலக்கியம் முதலிய நுல்களை இயற்றியுள்ளார். தலைப்பாடல்கள் 'வாணிதாசன் கவிதைகள்' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது.

**முடியரசன்**

இயற்பெயர் கா.சு. துரைராசு காவியப் பாவை, வீரகாவியம், முடியரசன் காவிய கதைகள் இவரது படைப்புகள் 'பூங்கொடி' காப்பியத்திற்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது.

**கண்ணதாசன்**

(1927-1981) கண்ணதாசன் கவிதைகள் என்னும் தலைப்பில் இவரது கவிதைகள் 7 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 'மாங்கனி' ஆட்டனத்தி – ஆதிமந்தி, இவரது குறுங்காப்பியங்கள். அர்த்தமுள்ள இந்துமதம், இயேசுகாவியம் போன்றவை இவரது படைப்புகள்.

தவிர, கவியோகி சுத்தானந்த பாரதியார் ச.து.சுப்பிரமணிய போகி, மு.கருணாநிதி, புலவர்குழந்தை, கா.மு.செரீப், பெஞ்சித்திரனார், க.சீனிவாசராகவன், திருலோகசீதாராம், துறைவன், கம்பதாசன், வேழவேந்தன், வல்லம், வேங்கடபதி போன்றோர் தரமான கவிதைகளைத் தமிழ் அன்னைக்குப் பங்களிப்புச் செய்திருக்கின்றனர்.

**புதுக்கவிதை**

ஒரு நாட்டுக் கலைச்சூழலின் ஒவ்வொரு சமுதாய மாற்றமும் அந்நாட்டு இலக்கியங்களில் எதிரொலிக்கும் அறிவியல் மாற்றங்கள் உலகின் அவசரச் சூழல், தேவைகளின் அசுரப்நேக்கு, உலகத்தொழில் புரட்சிகள் அறிவியல் புரட்சிகள் போர்கள் முதலானவை உலக இலக்கியங்களின் பழைய மரபை மாற்றின. இலக்கியங்களின் போக்கிலும் அளவிலும் புது மாற்றத்தை விளைவித்தன. பிரெஞ்சு புரட்சியின் விளைவாகச் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்னும் பொருண்மை பலதுறைகளிலும் நிலைகொண்டது. இவற்றிற்கு நெகிழ்புலமாக இருக்கும் இலக்கியங்களிலும் கவிதைகளிலும் ஒரு புதுவடிவம் உருக்கொள்ளக் கருக்கொண்டன.

புதுக்கவிதையின் தோற்றத்திற்குப் பிரான்சு நாட்டு ரிம்பாட், மல்லார்மே ஆகியோரைக் குறிப்பிடுவர். அமெரிக்கக் கவிஞர் வால் விட்டமனுடைய புல்லின் இதழ்கள் (Leaves of grass) புதுக்கவிதையின் முயற்சியாகக் காணப்படுகின்றன. இவரைத் தொடர்ந்து எஸ்ராபவுண்ட் டி.எஸி. எலியட் ஆகியோர் புதுக்கவிதையில் இறங்கியோர்.

தமிழில் பாரதியாரின் வகை கவிதைகள் புதுக்கவிதைக்கான முன்னோட்டமாகப் புதுக்கவிதைப் பாவலர்களால் இனங்காணப்பட்டன. வசனகவிதை, விடுநிலைப்பா, கட்டற்ற கவிதை எனப் பல பெயர்களால் தொடக்க காலத்தில் அழைக்கப்பெற்று 1980 களில் புதுக்கவிதை என்னும் பெயரில் நிலை கொண்டுள்ளது.

புதுக்கவிதைக்கு இலக்கியப் பத்திரிக்கைகள் ஏணிப்படிகளாக இருந்தன. புதுக்கவிதையின் வளர்ச்சி நிலையை,

1. பரிசோதனைக்காலம் : 1934-1947
2. மறுமலர்ச்சிக்காலம் : 1959 – 1969
3. செல்வாக்குக்காலம் : 1970 முதல் என்று புதுக்கவிதையில் குறியீடு என்னும் நூலில் அப்துல் ரகுமான் குறிப்பிடுகின்றார்.

**1. பரிசோதனைக்காலம் (1934-1947)**

மணிக்கொடி, தினமணி, ஜெயபாரதி, கிராம ஊழியன் உள்ளிட்ட 10 இதழ்கள் புதுக்கவிதைகளை வெளியிட்டன. இந்த இதழ்களில் ந.பிச்சமூர்த்தி, மு.ப.ராஜகோபாலன், க.நா.சுப்ரமணியம், வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் ஆகியோர் புதுக்கவிதைக் கவிஞர்களாக அறிமுகமானார்கள். உருவப்பரிசோதனை, யாப்பற்ற அந்தநடை, மனத்தின் குரல், சமூகவிமர்சனம், அங்கதம், புதிய பார்வை, வாழ்வுச்சுவை, துத்துவநோக்கு முதலான பொதுப்பண்புகள் இக்கவிஞர்களின் புதுக்கவிதைகளில் இழையோடின.

ந.பிச்சமூர்த்தி இயற்கையின் தன்மைகளில் வாழ்வின் தத்துவத்தை வைக்கின்றார். வாழ்க்கைப் போராட்டத்தில் சோனியாகி ஒடுங்கிப் போவதில் இன்பமில்லை. எதிர்த்து நின்று போராட வேண்டும் இந்thதத்துவத்தைப் படர்ந்து வரும் தென்னையின் அடியில் ஒழுங்கிக்கிடக்கும்சோனிக்கமுகின் இடைவிடாத முயற்சி மூலம் எடுத்துரைக்கின்றார். கு.ப.ராஜகோபாலன் கு.பரா. வகைவிதைகள் தாம் எழுதினார். ‘மணிக்கொடியில் 24 கவிதைகள், கலாமோகினியல் 5 கவிதைகள் மட்டும் தான் எழுதியாக வல்லிக்கண்ணன் குறிப்பிடுகின்றார். கு.ப.ரா. தனது கவிதைகளைக் கருவளையும் கையும் என்னும்தலைப்பில் தொகுத்து நூலாக வெளியிட விரும்பினார். கடைசி விரை ஆசை நிறைவேறவில்லை. கு.பரா. கிராம ஊழியன், பத்திரிக்கையில் கௌர ஆசிரியர் மற்றும் ஆசிரியராகப்பணிபுரிந்தார். 1944 ஏப்ரல் கடைசியில் அவர் மரணம் அடைந்தார்.

**புதுமைப் பித்தன்**

புதுமைபித்தன், கவிதைகளையும் அங்கதச் சுவையோடு எழுதினார். ‘ஓடாதீர்’ என்னும் கவிதையில் எழுத்துக்கூலிகளை அங்கதமாகக் குறிப்பிட்டு, முடிவில்

‘ஐயா, நான்
செத்தற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்
நினைவை விளிம்பு கட்டி
கல்லில் வடித்து வையாதீர்

என்று மிக அழககாக் கவிதைச் சிற்பத்தை வடித்து வைத்துள்ளார்.

II. மறுமலர்ச்சிக்காலம் (1959-1969)

எழுத்து, இலக்கியவட்டம், நடை ஆகிய இதழ்கள் இக்கால கட்டத்தில் புதுக்கவிதைகளுக்கு இதழியல் பங்களிப்பினைத் தந்தன. தருமு, சிவராமு, சி.மணிவைத்தீஸ்வரன், சண்முகசுப்பையா, முதலானோர் மறுமலர்ச்சிக் கால புதுக்கவிதைக் கவிஞர்கள் ஆவர்.

இவர்கள் கவிதைகளில் படிமம், குறியீடு, குடும்பக்கட்டுப்பாடு, பயனற்றபழமை, மிகுவேகப் புதுமை பற்றி எழுதியுள்ளார்.

தருமு சிவராமு இன்றைய இருப்பே நாளை, நேற்று என்னும் சிந்தனைகளுக்கு ஆரம்பமாகிறது என்பதனை,

‘காலக் குளத்தே
நாளை நேற்று என்ற
அலையேன் புரள்கிறது
இன்று எனும் கல்துளைகள்
வீசி விழுவதனால்.

என்று தருமு சிவராமு கூறுகின்றார்.

சி.மணி வைத்தீஸ்வரன் வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளையம் கவிதையாக்கும்ப ாங்கு இவரிடம் உண்டு. நம் வீட்டுச் சாக்கடையே ஆனால் நாறத்தான் செய்யும் இக்கருத்தை

‘அவன் வீட்டுச் சாக்கடையில்
அடுத்து வீட்டு நாற்படுத்துப்
புரளுவது ஒரு வடிக்கமாச்சி…

எனும் கவிதையில் படம்பிடிக்கின்றார்.

### III. செல்வாக்குக் காலம் (1970 முதல்)

கசடதபற, தாமரை, வானம்பாடி, அ:., ஐ, ழ, தீபம், ஏன், சுவடு, ஞானரதம், முதலான 29 இதழ்கள் இக்காலச்சூழலில் புதுக்கவிதைக்கு உரமிட்டு வளர்த்தன. புதிய மதிப்பீடுகள், மார்க்சிய ஈடுபாடு, மனிதநேயம், அரதசியற்சார்பு, கடுமையான சமூக விமர்சனம், வடசொற்கலப்பு, வசனகவிதை நடை முதலான பல பொருண்மைகள் செல்வாக்கு காலக் கவிஞர்களிடம் காண்படுகின்றன.

கலாப்பிரியா: மனித மனத்தின் அழுக்கைத் தோலுரித்துக் காட்டுவனவாக இவரது கவிதைகள் உள்ளன. இப்போக்கு

‘அவள் அழகாயில்லாததால்
எனக்குத்
தங்கையாகிவிட்டாள்.

என்னும்க விதையின் மூலம் வெளிப்படுகின்றன.

**அப்துல் ரகுமான்:**

இன்றைய தமிழ்க் கவிதை பற்றிப் பேசும்போது தலைமை சான்ற கவிஞர்களில் அப்துல்ரகுமானும் ஒருவர். பால்வீதி, நேயர் விருப்பம், சுட்டுவிரல், முதலிய பலகவிதைப் பாடைப்புகள் இவருடைய படிமங்களாகவும் குறியீடுகளாகவும் பாங்குடையன. இவர் கவிதைகள் ‘காலவழு’ என்னும்க விதை பயனற்ற பழைமைகளில் கருத்தைச் செலுத்துவது காலவழுவாக முடியும் என்னும் கருத்தை விளக்குகிறது இதனை,

‘கடந்த காலத்திற்குள்
உன் சேக்கள் நுழையட்டும்
உன் கிளைகளையும் ஏன்
அங்கேயே நீட்டுகிறாய்

என பிழைவுவதன் மூலம் உணரலாம்.

**சிற்பி:**

மரபுக் கவிதையிலிருந்து புதுக்கவிதைக் வந்தவர் 1. நிலவுப்பூ, முதல் ‘சூரியநிழல்’ முடிய ஒரு கவிதை நூல்களை எழுதியுள்ளார். ‘பாரதி வள்ளத்தோள்’ கவிதைகளை ஒப்பாய்வு செய்துள்ளார்.

**மு.மேத்தா:**

புதுக்கவிதை, வரலாற்று நாவல் எனப் பலதுறைகளிலும் புகழ்பெற்றவர். கண்ணீர்பூக்கள், நாயகம் ஒரு காவியம் தேசிய பல கவிதைத் தொகுப்புக்களைத் தந்தவர்.

வானம்பாடி இயக்கத்தவர் பாவேந்தர் விருது பெற்றுள்ளார். 'ஆகாசத்துக்கு அடுத்த வீடு'' என்னும் ஜலுக்கு சாகித்திய அகாடமி பரிசு பெற்றுள்ளார். சாதிக் கொடுமை பற்றிக் காற்றை மிரட்டிய சருகுகள்' என்னும்க விதை விவரிக்கிறது.

**வைரமுத்து :**

புதுக்கவிதையிலும் திரைப்படத்துறையிலும் புகழ்பெற்றுள்ள கவிஞர் இவர். இவருடைய முதல் கவிதைத் தொகுப்பு 'வைகறை மேகங்கள்' என்பது திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசியகீதம், என பழைய பனை ஓலைகள், இதுவரை நான் கவிராஜன் கதை, சிற்பியே உனைச் செதுக்குகிறேன். தண்ணீர் தேசம், கள்ளிக்காட்ட இதிகாசம் முதலாவை இவரது படைப்புகள் 'காதல் உயில்' என்னும் கவிதையில் காதலைப் பற்றிப் பேசும்போது கூட,

'காரல் மார்க்ஸ்
நாற்கலியில்
உட்கார்ந்து கொண்டே
உயிர்விட்ட மாதிரி

என்று கார்ல் மார்க்ஸை உவமையாக்குகின்றார். இதன்மூலம் 'கவிப்பேரரசு' வைரமுத்துவின் காரல்மார்க்ஸ்டடேதான பற்றையும் பொதுவுடைமைக் கொள்கைப் பிடிப்பையும் உணரலாம்.

**புதுக்கவிதை உத்திகள் :**

புதுக்கவிதையில் படிமம், குறியீடு. இருண்மை, தொன்மம் முதலான உத்திகள் கையாளப்படுகின்றன. இவை தவிர 1) ஈர்க்கம் தலைப்பு 2) ஒலிவடிவம் 3) கட்டில வடிவம் 4) மேற்கோள்குறி 5) சிலேடை முதலான உத்திகளும் பலன்படுத்தப்படுகின்றன.

**நாடகம்**

முத்தமிழன் முத்தாய்ப்பாய்த் திகழ்வது நாடக்ககலை. இயல். இசையால் காதுக்கு மட்டும் தான் இன்பம், கூத்துகல் கண்ணுக்கும் இன்பம் என்று கலைஞர் டி.கே. சண்முகம் எடுத்துரைக்கின்றார். நாடகம் பண்டைய காலந்தொட்டு 'கூத்து' என்று குறிக்கப்பட்டது.

**தொல்காப்பியத்தில் நாடகம்**

தொல்காப்பியத்தில் 'நாடகம்' என்னும் சொல்லாட்சி சுட்டப்படுகின்றன.

'நாடக வழக்கினும் உலகியல்வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்

என்னும் (தொல்-1999) வரிகள் நாடக்ககலை தொன்று தொட்டு தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வருவதனை அறிவிக்கும்.

**பண்டைய நாடகநூல்கள்**

அபந்தம், செயற்றியம், முறுவல், பரதசேனாதி பதியம், மதிவாணர் நாடகத்தமிழ் முதலான நாடக நூல்கள் தமிழ்நாட்டில் இருந்தன. இவை பற்றிய குறிப்புகளை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறித்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் நாடகம்

1. பாண்டரங்கம்
2. கொடுகொட்டி
3. மரக்கால்
4. பாவை
5. துடி
6. குடை
7. அல்லியம்
8. குடம்

*9.* மல்

*10.* பேடி

*11.* கடையம்

என்னும் பதினொருவகைக் கூத்துக்களை மாதவி ஆடியதாகச் சிலம்பு குறிப்பிடுகின்றனது. மாதவி நாடக நன்னூல் நன்கு கடைபிடித்துக் காட்டினால்எ ன்றும்கூறுகிறத,

**சோழர்காலத்தில் நாடகம்**

இராசராசேச்சுர நாடகத்தின் மூலம் மன்னனின் வெற்றிகள் நடித்தக்காட்டப்பட்டன. 'குலோத்துங்கசோழன் நாடகம் பூம்புலயூர் நாடகம் முதலானவையும் கோவில்களில் நடிக்கப்பட்டன. 'உய்யவந்தாள் யசோதை' என்பவள் திருவிழாக்க ாலங்களில் நாடகங்கள் நடிக்கும் உரிமை பெற்றிருந்தாள். நாடகக்கலை மக்கள் அனைவருக்கும் 'அரசு மானியம்' வழங்கப்டப்டது.

**17, 18ம் நூற்றாண்டுகளில் நாடகம் :**

மராட்டிய மன்னர்கள் காலத்தில் கி.பி. 17இல் கோயில்களில் நாடகங்கள் நடிக்கப்பட்டன. 'சிரபேந்திர பூபாலபளக் குறவஞ்சி' நாடகம் தஞ்சையில் நடிக்கப்பட்டது. இதைத் தொடர்நது 18ம் நூற்றாண்டு முடிய குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகங்களே செல்வாக்குப் பெற்றன. திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு முதலாயின நாடகங்களாயின. மனந்திருந்திய நொண்டி, ஒருவன் மெக்கா சென்றுமிடம் நீங்கி வாழ்ந்ததாக நடிக்கப்படுவது 'சீதக்காதி நொண்டி நாடகம்' இவ்வகையைச் சேர்ந்ததே 'இரத்தக்கண்ணீர்' நாடகம்

**19 ஆம் நூற்றாண்டில் நாடகம்**

**அ) வரலாற்று நாடகங்கள்**

மதுரை வீரன் விலாசம், நல்லதங்காள் நாடகம். ரவிவர்மா முதலானவை வரலாற்றை அடிப்படையாக்க கொண்டவை. காசி விசுவநாத முதலியார், டம்பாச்சாரி விலாசம் என்னும் வரலாற்று நாடகத்தை எழுதினார்.

**ஆ) மொழிபெயர்ப்பு நாடகங்கள்**

1) ஷேக்ஸ்பியரின் 'சிம்பலின்' நாடகத்தைத் தமிழில் சத்தியவதி என்னும் பெயரில் இலக்குமணப்பிள்ளை என்பவரும் 'சரசாங்கி' என்னும் பெயரில் சுலோக்சனச் செட்டியர் என்பவரும் மொழி பெயர்த்தார்.

**20 ஆம் நூற்றாண்டில் நாடகங்கள்**

சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், தெ.பொ.கிருஷ்ண சாமிப்பாவலர், டி.கே.எஸ். சகோதரர்கள், எஸ்.வி. சகஸ்ரநாமம், அவ்வை. தி,கே.சண்முகம், அறிஞர் அண்ணா, போன்றோர் இக்கால கட்டத்தில் நாடகத்துறை வளர்த்தெடுத்தவர்கள்

**தற்கால நாடக ஆசிரியர்கள்**

**1) கலைஞர் கருணாநிதி:**

நாடகத்துறையில் புதுமையை விளைவித்தவர். அண்ணா வழியில் சீர்திருத்தம் கருத்துகளை மேற்கொண்டார். மணிமகுடம், மந்திரகுமாரி, பராசக்தி, தூக்குமேடை, பூம்புகார் முதலானவை கலைஞரது காவியப்படைப்புகள்.

**2. சோ (இராமசாமி):**

அங்கதம் இவருக்குக் கைவந்தகலை. யாரிடமும் சொல்லாதே, நேர்மை உறங்கும் நேரம், சம்பவாமியுகே யுகே, மனம் ஒரு குரங்கு, இரவில் சென்னை, முகம்மது பின் துக்ளக், யாருக்கும் வெட்கமில்லை முதலானவை இவரது படைப்புகளுள் குறிப்பிடத்தக்கன.

**3. கே. பாலச்சந்தர்:**

வெற்றிகரமான படைப்பாளி நீர்க்குமிழி, மெழுகுவர்த்தி, எதிர்நீச்சல், மேஜர் சந்திரகாந்த், சர்வர்சுந்தரம் முதலான நாடகங்களைத் திரைப்படங்களாகவும் தயாரித்தார்.

**தெருக்கூத்து நாடகங்கள்**

சென்ற சில நூற்றாண்டுகளாக நாடக அரங்கு இல்லாமல் வீதியிலி நடிக்கப்பட்டு வரும் நாடகங்கள் இவை. கட்டியங்காரன், பாத்திரங்களை அறிமுகப்படுத்துவான் நகைச்சுவையோடு விளக்குவான். சூழலுக்கு ஏற்றவாறு அனைவரையும் சிரிக்கச் செய்வான்.

கூத்துப்பட்டறை என்னும் அமைப்பினை ந.முத்துசாமி நடத்தி வருகிறார். பரீக்ஷா என்னும் அமைப்பினை ஞாறி, மு.ராமசாமி, கே.ஏ.ஞானசேகரன் ஆகியோர் நடத்தி வருகின்றனர். வானொலி நாடகங்கள் குரல் ஏற்றத் தாழ்வின் மூலம் மட்டுமே வசனங்களில் வெளிப்படுத்தும் ஆற்றலை வெளிக்கொணரும் பணியைச் செல்கின்றன. தொலைக்காட்சி நாடகங்களில் நெடுந்தொடர்கள் சில, வருடக்கணக்கில் பார்வையாளர்களை ஈர்த்து வருகின்றன.

**கட்டுரை**

‘கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும்’ என்றும் போது, வாய்மொழியாக எடுத்துக்கூறும் பண்பே வற்புறுத்தப்பட்டது. ஆங்கிலத் தொடர்புக்குப்பின் ‘கட்டுரை’ எழுதுதல் என்ற முறைபுகுந்தது. கட்டுரை என்பது ஒரு யாப்பு வடிவம் போல, ஆய்வியலாயினும் அறியவியலாயினும் இன்று கட்டுரையாகவே எழுதுகின்றனர். கட்டுரை என்பது ஓர் இலக்கிய வகை. அதற்கென ஒரு வடிவம், கட்டுக்கோப்பு உண்டு. இதனை உணர்ந்து கட்டுக்கோப்புடன் கட்டுரை எழுதிய ஆசிரியர்கள் பலராவர்.

தமிழ் இதழ்கள் சிறந்த கதைகளை, தொடர்கதைகளை துணுக்குகளை வெளியிடுகின்றன. சிறந்த கட்டுரைகளை அவை விரும்பி வெளியிடுவதில்லை. ஆங்கில இதழ்கள் சிறந்த கட்டுரைகளுக்கே முதலிடம் தருகின்றன. தமிழில் வெளியிடப்படும் இதழ்கள் பெரிதும் கட்டுரையிலக்கியத்தைப் புறக்கணிப்பது விந்தையாகவே உளது. கட்டுரை வளர்ச்சி உரைநடை வளர்ச்சியுடன் பெரிதும் பின்னிப் பிணைந்ததாகும்.

திரு.வி..க. ரா.பி. சேதுப்பிள்ளை மு.வ.தேவநேயப் பாவணர் போல்வார் சிறந்த கட்டுரை வடிவங்களதைத் தந்தவர் ஆவர். மறைமலையடிகள் செவ்விய, செறிவுள்ள கட்டுரைகளை எழுதி வழிகாட்டனார். ‘கட்டுரை வரைவியல்’ கண்டவர் பாவணர்.

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், தமிழ்த்தாத்தா உ.வே.சா. கணக்காயர் ச.சோமசுந்தர பாரதியார் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். வ.சுப.மாணிக்கம், ந.சஞ்சீவி, போன்ற பலர் சிறந்த கட்டுரையாசிரியர் பட்டியலில் இடம் பெறுகின்றனர். இன்று கட்டுரை வகைகளும் பல, கட்டுரை எழுதுவோரும் கணக்கற்றவர் ஆவர்.

**துறைதோறும் தமிழ்**

இன்று தமிழ் பல்வேறு துறைகளாகக் கிளைவிட்டுப் பிரிந்து வளர்ந்து வரும் ஒரு ஆலவிருட்சமாகத் திகழ்கிறது.

**அறிவியல் தமிழ்**

முனைவர் ந.சுப்புரெட்டியர், பெ.நா. அப்புசாமி ஏனைய பலர் தொடக்கத்தில் இத்துறையில் நூல் எழுதினர். இன்று நூற்றுக்கணக்கான அறிவியலறிஞர்கள் தமிழில் எழுத முனைந்துள்ளமை, ஒளி மயமான எதிர்காலத்தை உணர்த்துகிறது. கலைக்கதில், தினமணி சுடர் போலும் இதழ்கள் அரும்பணி ஆற்றி வருகின்றன.

**நுண்கலைத்தமிழ்**

சிற்டிகணபதி, சிற்பச் செந்நூல் எழுதியுள்ளார். ‘பஞ்சமரபு’ என்ற இசைத்தமிழ் நூல் வெளிவந்துள்ளது. மேலும் பல நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இசைக்கலையில் ‘யாழ்நூல்’ பேரறிஞர் விபுலானந்த அடகளார், குடந்தை சுந்தரரேசனார், வீ.ப.கா. சுந்தரம் இன்று மம்மது போல்வார் பணி குறிப்பிடற்பாலது. அறிஞர். மு. அருணாசலம் எழுதிய தமிழ் இசையாய்வு நூல் 14 தொகுதிகளாக விளங்குகிறது.

**மொழியியல்**

மரபுவழி இலக்கணம் இருக்கவும் மொழியியல் கண்ணோட்டத்துடன் அதை அணுகும் முறை பெருதி வருகிறது. மொழியியலை இலக்கியத்திலும் ஏனைய சார்புத்துறைகளில் இணைந்து நோக்கும் ஆய்வும் வளர்ந்து வருகிறது. தெ.பொ.மீ. இதன் வளர்ச்சிக்கு வித்திட்டார். முனைவர். வ.சுய். சுப்ரமணியம் முனைவர். ச.அகத்தியலிங்கம் போலிவார், இத்துறையில் நிலையான பணியைப் புரிந்துள்ளனர்.

**நாட்டுப்புறவியல்**

பாட்டுத் தொகுப்பும் ஆய்வுமாக இத்துறை இன்று நல்ல வளர்ச்சி கண்டு வருகின்றது. முனைவர் சு.சண்முகசுந்தரம், முனைவர் ஆறு. இராமநாதன் போல்வார் இத்துறைக்கு நல்தொண்டாற்றி வருகின்றனர். பாளையங்கோட்டை, பேராசிரியர் லூர்தும், அவரைப் பின்பற்றிப் பலரும் நாட்டார்வழக்காறியலுக்கு கற்றொண்டாற்றி வருகின்றனர்.

**திறனாய்வியல்**

திறனாய்வியலும் ஒட்டியலும் தமிழல் ஒருபுறம் பெருவளர்ச்சி கண்டு வருகின்றன. முனைவர். க. கைலாசபதி, முனைவர் வி. சசிதானந்தம், முனைவர். தா.ஏ.ஞானமூர்த்தி, தமிழண்ணல் போல்வாரால் இத்துறைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. பல்வேறு திறனாய்வு நூல்கள் வெளிவந்தும் கொண்டிருக்கின்றன.

**ஆய்வியல்**

தமிழில் பி.எச்.டி.எம்.ஃ.பில் ஆய்வில் ஈடுபடுவார் தொகை பெருகிவிட்டதால், ஆய்வியல் நெறிமுறை நூல்களும் இன்று வருகினற்ன. தமிழின் ஆய்வில் அறிமுகம் குறிப்பிடத்தக்க நூலாகும்.

**மொழிபெயர்ப்பியல்**

மொழிபெயர்ப்பை ஒரு கலையாகவே கருதி வளர்க்கும் துறைகளையும் இன்று காணமுடிகின்றது.

**சித்த மருத்துவம்**

இவை தொடர்பான பழைய நூல்களும், புதிய ஆய்வு நுல்களும், பாட நூல்களும் மிகுதியாக எழுதப்பட்டும் புதிப்பிக்கப்பட்டும் வருதல் நல்ல அறிகுறியாகும்.

**இதழியல்**

தமிழ் இன்று பெற்று வரும் பெருவளர்ச்சிக்குத் திரைப்படம், வானொலி, இதழ்கள், மேடைபேச்சு நான்கும் முக்கிய அடிப்படைகளாகும். கலைக்கதிர், மஞ்சரி இதழ்களும், புலமை, செந்தமிழ்ச்செல்வி, செந்தமிழ் தமிழ்ப்பொழில் போன்ற இதழ்களும் பிறநாள், வாரஇதழ், மாத இதழ்களும் மக்களிடையே தமிழைப் பரப்பும்ப ணியை மேற்கொண்டுள்ளன. பிழையற்ற தமிழைப் பரப்பவும், இலக்கிய உணர்வை வளர்க்கவும் இவை மேலும் மேலும் நல்வழியில் பயன்பட வேண்டும்.

‘என்றுமுள தென்தமிழ் என்றென்றும் வாழ்க’ தமிழ்மொழியைக் கம்பன் சிறப்பித்துக் கூறும்பொழுது ‘என்றுமுற தென்தமிழை இயம்பியிசை கொண்டதாகப் பாடினான். அகத்தியர் தமிழைப் படைத்தாரென்றும், ஆதிசிவன் அகத்தியருக்குத் தமிழைப் போதித்து, அவர் மூலம்

உலகிற்குத் தமிழ்மொழியை வழங்கினரென்றும் உலவும் கதைகளை அறிந்திருந்தும் கம்பன் என்றுமுள தென்தமிழ் என்று அதன் சிறப்பறிந்து கூறினான்.

இந்திய நாட்டு அரசு ஆணைகளிலும், இந்திய பல்கலைக் கழகங்களிலும் செவ்வியல் மொழிகள் (உடயளளைஉயட டயபெரயபநள) என்று வரும்போது சமஸ்கிருதம், அராபி, பாரசீகம் போன்றவையே சுட்டப்டுகின்றன. தமிழ் இக்கால மொழி என்ற பட்டியலிலே தான் வருகிறது. முன்னைப் பழம் பொருட்டம் முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்குப் பெயர்த்தும் அப்பெற்றியனே என்ற மணிவாசகர் அருள்வாக்குச் சிவபெருமானுக்குப் பொருந்துவது போலச் செந்தமிழுக்கும் பொருந்தும் தமிழ் செவ்வியல் மொழி என்று அறிவிக்கப்பெற்றுள்ளது தமிழ் இனிவாழும் வளரும் தடைகளைத் தளர்த்து புதுமலர்ச்சி பெற்றுச்சிறக்கும் என்பதும் உறுதி.

‘ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரென்று ஏனையது
தன்னேல லாத தமிழ்
- தண்டியலங்காரம்

**வினாக்கள்**

1. மேனாட்டார் வருகையால் தமிழ் இலக்கியப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைத் தருக.
2. உரைநடை என்றால் என்ன?
3. உரையின் வகைகளை விளக்குக?
4. இசை நாடக இலக்கியம் குறிப்பு வரைக.
5. சிறுகதை இலக்கணம் தருக
6. சிறுகதையின் உத்திகளை விவரிக்க
7. மரபுக்கவிதை விளக்குக
8. புதினம் என்றால் என்ன?
9. புதின வகைகளைத் தருக
10. புதுக்கவிதை தோற்றம் - வளர்ச்சி நிலையை விவரி
11. நாடகம் என்றால் என்ன?
12. நாடக வடிவங்களைத் தருக
13. கட்டுரை – விளக்கு
14. துறைதோறும் தமிழ்வ ளர்ச்சியினை விளக்குக
15. நாட்டுப்புறவியல் என்றால் என்ன?